மஞ்சரி

நந்தன - மார்கழி

டிஸம்பர், 1952

THE TANJO[illegible]E MAHARAJAH

புதிய ஜனாதிபதி ஐக்

இந்திய ஸைக்கின்

இடியும் மின்னலும்

காதலர் தூதன் (சிறு கதை)

காரும் தேரும் (புத்தகப் பகுதி)

-6-
அணா

வாழ்வும் காலமும்

உனக்கு வாழ ஆசையா? அப்படியானால், காலத்தை வீணடிக்காதே. ஏனென்றால், வாழ்வென்பதே காலத்தால் ஆனது.

—பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
க. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
பே. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

பல மதம் ஏன்?

இயற்கையின் பெருவனப்பைப் பார்; உள்ளத்திலிருந்து எழும் ஒலிக்குச் செவி கொடு. கண், மனம், புத்தி இவைகளுக்கு எட்டும்படி கடவுள் பேசுவார்.

கடவுளைப்பற்றி மனிதன் சொல்வதெல்லாம் அவரை இழிவே செய்கிறது. மனிதன் வகுத்த மதங்களுள் ஒன்றும் கடவுள் தத்துவத்தை விளக்காது. அவை நம்மைக் குழப்புகின்றன; உயர்த்தவில்லை; மனிதனைச் செருக்கும் குரூரமும் பிடிவாதமும் கொள்ளச் செய்கின்றன; அமைதியைக் குலைத்து, எங்கும் நெருப்பைக் கக்கிக் கத்தியை வீசுகின்றன; குற்றத்தை வளர்க்கின்றன; துக்கத்தைப் பெருக்குகின்றன.

கடவுளை எப்படி வழிபடுவது என்பதை மனிதன் அறிய மத முறைகள் தேவை என்கிறார்கள். ஒவ்வொரு நாட்டு மக்களும் தம்தம் இஷ்டப்படி கடவுளைக் கற்பித்துக்கொண்டு விட்டார்கள்; தம்தம் மனத்துக்கு இசைந்தபடி கடவுளைப் பேசச் செய்துவிட்டார்கள்.

இப்படி இல்லாமல், அவரவர் இருதயத்தில் கடவுள் என்ன சொல்லுகிறார் என்பதை மாத்திரம் மனிதர்கள் செவி கொடுத்துக் கேட்டிருப்பார்களானால், உலகத்தில் ஒரே மதந்தான் இருந்திருக்கும்.

—ரூஸோ (ஃப்ரேஞ்சு ஞானி)

December '52 Regd. No. M. 4975

மஞ்சரி

நந்தன - மார்கழி

ஊரும் உலகமும்		1
புதிய ஜனாதிபதி ஜக்	ஸாகா	3
கார்ட்டூன் கதம்பம்		8
பாலின் பெருமை	பிரக்ருதி	10
இந்திய ஸைக்கிள்	ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ்	13
செயற்கை அரிசி	ஃப்ரீ இந்தியா	18
ரமணர் : வாழ்வும் வாக்கும்		22
குழந்தை பத்திரம்	பேரெண்ட்ஸ் மகஸீன்	25
அழகே உண்மை	இந்தியன் ரெவ்யூ	29
சித்திரச் சிகிச்சை	எவ்வரிபடீஸ்	32
எல்லாம் மாறிய நாடு	ரா. ஸ்ரீ. தேசிகன்	37
சீதையின் அக்கினிப் பிரவேசம்		44
அணுக் குண்டு அநுபவம்	ஸர்வோதயம்	49
ஐ. நா. ஸ்தாபனம்	குமரி மலர்	51
ஏமாந்த போலீஸ்காரன்	ஃபோரம்	53
அபூர்வச் சிற்பங்கள்	ஸ்ரீலங்கா	54
டாக்டரே, சௌக்கியமா?		58
இடியும் மின்னலும்		61
ஆனந்தமும் ஆரோக்கியமும்	காமன்வெல்த் டுடே	66
காதலர் தூதன் (சிறு கதை)	சிலா சட்டர்ஜி	69
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	பிலிமிண்டியா	78
காரும் தேரும் (புத்தகப் பகுதி)	கி. வா. ஜகந்நாதன்	79
பல மதம் ஏன்?	ரூஸோ	3-ஆம் அட்டை

ஆண்டு 6] நந்தன–மார்கழி :: :: டிஸம்பர் 1952 [இதழ் 1

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

வேஷ்டி, சேலைகள் நெசவை முற்றும் கைத்தறிகாரர்களுக்கே விட்டு விடவேண்டும்; மற்ற ஜவுளி தினுசுகளை மில்கள் கைக்கொள்ளலாம். இப்படி ராஜாஜி சொன்னார். கைத்தறித் தொழிலாளருக்குப் பாதுகாப்பாகவே இந்த யோசனை. இப்போது டில்லி சர்க்கார் இது சம்பந்தமாக ஓர் உத்தரவில் விதி செய்திருக்கிறது. 40 சதவிகிதம் கைத்தறிகாரர்களும் 60 சதவிகிதம் மில்களும் வேஷ்டி, சேலை தயாரிக்கலாம் என்பதே அந்த விதி. "இதில் எந்த விகிதாசாரம் கண்டிருக்கிறதோ அதே விகிதத்தில் எனக்குச் சந்தோஷந்தான்" என்கிறார் ராஜாஜி. அதாவது 40 சதவிகிதம் சந்தோஷம்! வேஷ்டி, சேலை வாங்குவோருக்கு, விலை ஏறாதிருக்க வேண்டும். ஆகவே, இந்த விதியால் அவர்களுக்கு நலந்தான். ஆனால், இந்த விதியைக் கொண்டுசெலுத்துவது மிகுந்த சிரமம். ஏழைத் தறிகாரர் இதை மீற முடியாமல் தடுப்பது சுலபம். பெரிய மில்களிடம் சர்க்கார் மிகுந்த ஜாக்கிரதையுடனும் கண்டிப்பாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

*　　*　　*

கொரியா சமரசப் பேச்சில் முட்டுக்கட்டையாக இருப்பது, யுத்தக் கைதிகள் விஷயமும், யுத்த சமாதானங்கள் ஏற்படும்போது, அவரவர் நாட்டு யுத்தக் கைதிகளை அவரவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்பதும் ஜெனிவா கன்வென்ஷன். "எல்லா யுத்தக் கைதிகளையும் திருப்பி அனுப்ப முடியாது. தங்கள் நாட்டுக்குத் திரும்பச் சம்மதித்தவர்களையே அப்படி அனுப்ப முடியும்; சம்மதிக்காதவர்களைப் பலவந்தம் செய்ய முடியாது" என்கிறார்கள் அமெரிக்கர். இதை ஆட்சேபிக்கிறார்கள் கம்யூனிஸ்ட் சீனர். இது பற்றித்தான் சமரசமான ஒரு தீர்மானத்தை, ஐ. நா. சபையில் இந்தியா பிரேரித்துச் சில திருத்தங்களுக்குப் பின், அமெரிக்கா, பிரிட்டன் உள்பட மிகப் பெரும்பான்மையான நாடுகளின் ஆதர

வைப் பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்ட் சீனாவும், ஸோவியத் ருஷியாவும் இதை எதிர்க்கின்றன. விஷயம் என்னவோ வெகு சுலபமானதாகத் தோன்றும். யுத்தத்தில் பிடிபட்ட கைதிகளில் பலர் தங்கள் நாட்டுக்குத் துரோகிகளாகியிருக்கலாம். சிலர் பலவந்தத்தாலும், சிலர் தம் மிச்சையாகவும் அப்படித் துரோகிகளாய் மாறி, எதிரிக்கு உளவு சொல்லியிருக்கக் கூடும். தாய் நாடு திரும்பியதும் அவர்களுக்குத் தண்டனை கிடைக்கலாம். இதற்கு என்ன மாற்று? இதுதான் சிக்கல். ஆகவேதான் இத்தனை தகராறு. இரு தரப்பினரும் சமரசமாகவும், தனி மனிதர்களிடம் ஜீவகாருண்யத்தோடும் நடந்துகொள்ளச் சித்தமா யிருந்தாலொழிய இந்தச் சிக்கல் தீராது.

* * *

எகிப்து போன வழியே இப்போது ஈராக்கும் போயிருக்கிறது. ஈராக் ராணுவத் தலைவர் ஜெனரல் தாருத்தீன் முகம்மது, ராஜாங்கத்தைப் பலவந்தமாய்க் கைப்பற்றிவிட்டார். அரசியல் கட்சிகளையெல்லாம் கலைத்துவிட்டார். காரணம் என்ன? ஈராக் பல வருஷகாலம் பிரிட்டனின் பிடிப்பிலிருந்த நாடு. ஈரானைப்போல் பெட்ரோல் கிணறுகளால் பெரிதும் வருவாய் பெறும் நாடு. இந்த வருஷம் பிப்ரவரியில்தான் பெட்ரோல் எடுப்பது சம்பந்தமாய்ப் பிரிட்டனுடன் அது ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் வருஷம் ஒன்றுக்கு 3 கோடியே 10 லட்சம் பவுன் ஈராக் நாட்டுக்குக் கிடைக்குமாம். ஈராக் நாட்டுக்கு இவ்வளவு வருமானம் கிடைத்தால், பிரிட்டனுக்கு எவ்வளவு பெட்ரோல் கிடைக்கும்? இந்தப் பெட்ரோல் எடுப்பதைத் தவிர, ஈராக்கில் ஹப்பானியா, ஷைபா என்ற இரண்டு இடங்களில் தங்கள் ராணுவ தளங்களைப் பிரிட்டிஷார் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரிட்டிஷாரிடம் துளியும் பிடியில்லாமல் முற்றும் ஈராக் விடுபட வேண்டும் என்கிறார்கள் அந்த நாட்டு ஸோஷலிஸ்டுகள். இந்தச் சந்தடி சாக்கில் மெல்லக் கம்யூனிஸ்டுகளும் கலகங்களைக் கிளப்பத் தலையை நுழைத்திருக்கிறார்கள். ஈராக் விவகாரத்துக்கு இவைகளே காரணம். ஈராக்கில் உரங்கொண்ட ராணுவ அரசாங்கம் ஏற்பட்டது நல்லதே. ஆனால், அது பிரிட்டனிடம் சமரசமாய் நடக்குமா? அல்லது முரண்டு செய்யுமா? இந்த விஷயம் இனித்தான் தெரியவேண்டும்.

எப்படி ஊகித்தான்?

ஆபீஸ் பையன்: ஸார், உங்களை யாரோ டெலிபோனில் கூப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

எஜமானன்: நினைக்கிறாயா? அப்படி நினைக்க என்ன காரணம்?

பையன்: டெலிபோன் மணி அடித்ததும், அதை எடுத்தேன். 'நீதானா, கிழக் குரங்கே?' என்று அதில் ஒரு குரல் கேட்டது. அதனால்தான், ஸார்.

— 'இல்லஸ்ட்ரேடெட் வீக்லி அவ் இந்தியா.'

புதிய ஜனாதிபதி ஐக்

★

ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்கப் போகிற ஜெனரல் ஐஸன்ஹோவரின் இந்த வரலாறு, 'லாகா' என்ற ஆங்கிலப் பிரசுரத்தில் ஜிம் தாம்ஸன் என்பவர் எழுதியுள்ள விவரங்களை ஆதாரமாகக் கொண்டது.

ஜனவரி மாதம் 20-ஆம் தேதி நடுப் பகலிலிருந்து அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியை வகிக்கப் போகிறார் தளபதி ட்வைட் டேவிட் ஐஸன்ஹோவர். 1948-ஆம் வருஷம் ட்ரூமன் இந்தப் பதவிக்கு நின்ற போது, இவரைப் போட்டியிடச் சொன்னார்கள். "எனக்கு ட்ரூமனிடம் மிக உயர்ந்த மதிப்பு" என்று மறுத்த இவரே, இப்போது ட்ரூமனின் ஜனநாயகக் கட்சிக்கு எதிராக ரிபப்ளிக் கன் கட்சியின் அபேட்சகராக நின்று பிரமிக்கத் தக்க அளவு பிரமாதமான ஆதரவு பெற்று வெற்றியடைந்தார். இவர் எப்படிப்பட்ட மனிதர்? இவருடைய வரலாறு என்ன?

தளபதி ஐஸன்ஹோவரும் அவர் மனைவி மாமீயும்

டெக்ஸாஸ் மாகாணத்தில் டெனிஸன் என்ற இடத்தில் டேவிட் ஐஸன்ஹோவர், இடாஸ்டோவர் என்ற தம்பதிகளுக்கு 1890-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ஆம் தேதி இவர் மகனாகப் பிறந்தார். இவருக்கு முன் பிறந்த அண்ணன்கள் இரண்டு பேர்; பின் பிறந்த சகோதரர் மூன்று பேர். அப்போது காட்டன் பெல்ட் ரெயில் பாதையில் தந்தை உத்தியோகம் பார்த்து வந்தார். இவர் பிறந்த இரண்டு வருஷத்துக்கெல்லாம் கன்ஸாஸ் மாகாணத்தில் அபிலீன் என்ற இடத்தில் க்ரீம் செய்யும் கம்பெனி ஒன்றில் எஞ்சினீராக அவர் பதவி ஏற்றார்.

ஐஸன்ஹோவரின் குடும்பம் அவ்வளவாகச் செல்வம் செழித்ததல்ல; ஆனால், ஏழையும் அல்ல. குடும்பத்துக்கு வேண்டிய உணவுப் பொருளையெல்லாம் குடும்பத்தி

னரே பயிரிட்டு விளைவித்துக் கொண்டார்கள். இரண்டு ஏக்கர் தோட்டம், ஒரு பசு, சில கோழிக் குஞ்சுகள், சில குதிரைகள், ஆடு மாடுகள் இவைகளைப் பையன்கள் கவனித்து வந்தார்கள். காலையில் அடுப்பு மூட்டிச் சமையல் செய்வதும் பையன்களின் கடமையே. என்ன காரணமோ தெரியவில்லை, பையன்களெல்லாம் ஐஸன்ஹோவர் என்ற குடும்பப் பெயரை 'ஐக்' என்று சுருக்கி வைத்துக்கொண்டார்கள். மூத்த அண்ணனுக்குப் 'பெரிய ஐக்' என்றும், ட்வைட்டுக்குச் 'சின்ன ஐக்' என்றும் பெயர். கொஞ்ச காலத்தில் மூத்தவனின் 'ஐக்' பட்டம் வழக்கிழந்தது. ட்வைட்டுக்கே 'ஐக்' என்ற பெயர் நிலைத்துவிட்டது.

ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் யுத்தம் நடந்தபோது, பையன்கள் வெகு உற்சாகமாய் யுத்த விளையாட்டு ஆடுவார்கள். யுத்தம் என்றாலே அம்மாவுக்குப் பிடிக்காது. அவள் கண்டிப்பாள். பையன்கள் கேட்டால்தானே! ஐக் சரித்திர பாடம் படிப்பதைக் கண்டு, 'இவன் எங்கே ராணுவத்தில் சேர்ந்துவிடுவானோ?' என்று அம்மாவுக்கு வெகு பயம். பேஸ்-பால், ஃபுட்-பால் இரண்டிலும் ஐக்குக்கு வெகு பிரியம்.

ஹைஸ்கூலில் ஐக் சேர்ந்ததும், ஓழிந்த நேரங்களில் க்ரீம் கம்பெனியில் நிலக்கரி அள்ளிப் போடும் வேலை பார்த்து வந்தார். அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, காசு வைத்துச் சீட்டாடுவார். வகுப்பிலே நல்ல கெட்டிக்காரர். ஃபுட்-பால் 'நட்சத்திர'மும் ஆகிவிட்டார்.

1909-இல் ஹைஸ்கூல் படிப்பு முடிந்து, காலேஜில் சேர்ந்தார். உழைத்துப் படித்தார். கிராஜுவேட் பட்டப் பரீட்சையில் மிக உயர்ந்த கிரேட் பையன்களில் மூன்றாவதாகத் தேறினார். அதைக் கண்டு வகுப்பின் சரித்திரப் புரொபஸர், "இவன் யேல் யூனிவர்ஸிட்டியில் ஒரு புரொபஸராக வந்துவிடுவான், பாருங்கள்" என்று ஜோஸ்யம் சொன்னார். இவர் பெயர் சரித்திரத்தில் ஏறப்போகிற ரகசியத்தை அவர் எங்கே கண்டார்?

அன்னாப்போலிஸ் கடற்படைக் கல்லூரியில் சேர இவர் எண்ணினார். ஆனால், 20 வயதுக்குமேல் ஆகிவிட்டதால், அதன் பிரவேசப் பரீட்சைக்குப் போக முடியவில்லை. வெஸ்ட் பாயிண்ட் ராணுவக் கல்லூரியின் பிரவேசப் பரீட்சையில் தேறி அதில் சேர்ந்தார். 22 வயது வரை அதில் சேரலாம் என்று விதி இருந்ததால், அதில் சேருவது சுலபமாயிற்று. பிரவேசப் பரீட்சையில் மிக உயர்ந்த மார்க் வாங்கியவர்களில் இரண்டாவது ஸ்தானம் பெற்றார். முதல் ஸ்தானம் பெற்றவனுக்கே இடம் கொடுத்தார்கள். ஆனால், அந்தப் பையனின் உடல் நிலையைப் பரீட்சித்த டாக்டர்கள் அவன் லாயக்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். இதனால் ஐக்குக்கு அதிருஷ்டம் அடித்தது. இவரையே சேர்த்துக் கொண்டார்கள்.

ஐக் இப்படி ராணுவக்கல்லூரியில் சேர்ந்தது பெற்றோருக்கு மிகவும் வருத்தமாய்ப் போயிற்று. ராணுவக் கல்வி கற்றாலும் ராணுவத்தில் சேராத ஆயிரக்கணக்கான பையன்கள் இல்லையா, அந்த மாதிரி ஐக்கும் இருந்துவிட்டால் போகிறது என்று அவர்கள் சமாதானம் செய்துகொண்டார்கள். ராணுவத்தில் சேரும் உத்

தேசம் ஐக்குக்குந்தான் முதலில் இல்லை. அங்கே ஆணையிடுவது, காலந் தப்பி உண்பது முதலிய குற்றங்களுக்காக இவருக்குப் பல முறை 'பிளாக் மார்க்' கிடைத்தது. கடைசியில் பரீட்சைக்கு ஆஜரான 168 பேரில், 61-ஆவது பையனாகத் தேறினர்.

முதல் முதல் ஸெகண்ட் லெஃப்டினெண்ட் பதவி பெற்று, ஸாம் ஹவுஸ்டன் கோட்டையில் 19-ஆவது காலாட் படையில் போய்ச் சேர்ந்தார். அங்கே வேடிக்கை பார்க்க வந்தாள் மிஸ் மாமீ டவுட் என்ற ஒரு பணக்காரி. அவள்மீது இவர் காதல் கொண்டுவிட்டார். அவளுடைய தந்தை, அயோவா மாகாணத்தில் புலால் பாக்கிங் செய்யும் ஒரு வியாபாரி. 1916-இல் ஐக், மாமீ இருவருக்கும் விவாகம் நடந்தேறியது. அதற்குப் பிறகு சில நாளைக்கெல்லாம் இல்லினய்ஸ் நேஷனல் கார்டு படையில் இன்ஸ்பெக்டர்-இன்ஸ்ட்ரக்டர் என்ற பதவியை ஐக் பெற்றார்.

முதல் உலக யுத்தத்தின்போது போர் முனைக்குச் செல்ல இவர் ஆசைப்பட்டார். ஆனல், நிர்வாகம், போதனை இரண்டிலும் சிறந்த இவரை அப்படி அனுப்ப முடியாதென்று உள் நாட்டிலேயே நிறுத்தி வைத்துக்கொண்டார்கள். இன்ஸ்ட்ரக்டர் அவ் ப்ரொவிஷனல் ஆஃபீஸர்ஸ், லெவன்வொர்த் கோட்டை; கமாண்டர் அவ் டாங்க் ட்ரெயினிங் ஸெண்டர், ஹோல்ட் முகாம்; இன்ஸ்ட்ரக்டர் டு தி ஆஃபீஸர்ஸ் ட்ரெயினிங் முகாம், ஒக்ளதார்ப் கோட்டை - இப்படிப் பல முக்கியப் பதவிகளை இவர் வகித்தார். தாற்காலிகமாக லெஃப்டினெண்ட் கர்னல் என்ற கிரேடு இவருக்குக் கிடைத்தது. என்றாலும், வெளிநாட்டுக்கு மட்டும் இவரை அனுப்பவேயில்லை. 1919-இல் யுத்தம் முடிந்து, சேனை சுருங்கியதால், பழையபடி தாற்காலிகமாக மேஜர் என்ற கிரேடுக்கு இவரை இறக்கிவிட்டார்கள். பெர்ஷிங், மார்ஷல், மக்ஆர்த்தர் என்ற பெயர்களெல்லாம் அப்போதே புகழ் பெற்றுவிட்டன. ஆனல், இந்தத் தாற்காலிக மேஜர் ஒரு நாள் சரித்திரப் பிரசித்தி பெறப் போகிறார் என்று யாரும் அப்போது நினைத்திருக்க மாட்டார்கள்; இவர் பெயரைக் கூட அநேகர் கேட்டதில்லை.

உத்தியோகந்தான் இப்படி உப்புசப்பற்றதாகப் போய்விட்டது. துக்கமும் நேரவேண்டுமா? 1921-இல் இவருடைய மூன்று வயது மகன் ஸ்கார்லட் காய்ச்சல் வந்து இறந்தான். குழந்தை போன ஆறு நாளைக்கெல்லாம், இவரைக் கனல் ஜோன் என்ற பிரதேசத்தில் உள்ள கெய்லார்டு முகாமுக்கு மாற்றிய உத்தரவு வந்தது. அதுவே இவருக்கு அதிருஷ்டமாயிற்று. அங்கே கமாண்டராக இருந்த ஜெனரல் கான்னர் என்ற அதிகாரிக்கு இவருடைய திறமையைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஜெனரல் ஸ்டாஃப் ஸ்கூலில் பயிற்சி பெற இவரை அவர் சிபாரிசு செய்தார். அங்கே போனதும் மேஜர் பதவி இவருக்குப் பெர்மனன்ட் ஆயிற்று. 1924-இல் இவரை மீண்டும் மீடு முகாமுக்கு அனுப்பி, அங்கே ஃபுட் - பால் டீம் ஒன்றுக்குப் பயிற்சி அளிக்கச் சொன்னர்கள். இரண்டு வருஷம் சென்றது. ஜெனரல் ஸ்டாஃப் பரீட்சையில் இவர் சிறப்பாய்த் தேறினர். ஜென

ரல் ஸ்டாஃப் என்ற தலைமை ராணுவக் காரியாலயத்தில் பதவி பெறத் தகுதி பெற்றவர் ஜாபிதாவில் இவருடைய பெயரும் ஏறியது.

ஐரோப்பியப் போர் முனையில் அமெரிக்கர் போரிட்ட இடங்களை யெல்லாம்பற்றி விளக்கும் ஒரு புத்தகம் தயாரிக்கச் 'சண்டை ஞாபகச் சின்னக் கமிஷன்' என்ற ஒன்றை நியமித்தார்கள். சண்டையை நேரிலே கண்டிராத இவரும் அதில் ஓர் அங்கத்தினர். அப்போது பாரிஸ் நகருக்குச் சென்று, 1929 வரை அங்கேயே தங்கி, அந்தப் புத்தகத்துக்கு வேண்டிய விவரங்களைத் தயாரிப்பதில் இவர் சிறந்த ஊக்கங் காட்டியதை எல்லாரும் பாராட்டினர்கள். பிறகு யுத்த அஸிஸ்டண்ட் ஸெக்ரடரி பதவியில் இவரை நியமித்தார்கள். அதன் பின் ராணுவத் தலைமைக் காரியாலயத்தின் பிரதம அதிகாரியான ஜெனரல் டக்ளஸ் மக்ஆர்த்தர் என்ற பிரபலஸ்தரின் செக்ரடரியாக இவர் நியமனம் பெற்ருர். இவருடைய வேலையில் மக்ஆர்த்தர் மிகுந்த திருப்தி அடைந்தார். பிலிப்பைன் தீவில் ஒரு சேனை அமைத்து அதன் தற்காப்பைப் பலப்படுத்துவதற்காக மக்ஆர்த்தர் சென்ற போது, இவரையும் தம்மோடு அழைத்துக்கொண்டு போனர். அங்கே 1935 முதல் 1939 வரையில் ஐக் தங்கினர். ஐக்கிய அமெரிக்காவுக்குத் திரும்பியதுமே, "ஜப்பான் சீக்கிரமே யுத்தம் தொடங்கப் போகிறது" என்று தம் பயத்தைத் தெரிவித்தார். இவர் வீண் பீதியைக் கிளப்புகிருர் என்று எல்லாரும் இவர்மேல் சீறினர்கள். அப்போது இவருக்கு 50 வயது; லெஃப்டினெண்ட் கர்னல் என்ற சாமானிய பதவியே வகித்துக்கொண்டிருந்தார். என்ருலும், இவர் அதிருப்தி அடையவில்லை.

இவருடைய மகன் ஜான் என்பவரும் பின்னுல் வெஸ்ட் பாயிண்ட் ராணுவக் கல்லூரியில் பயின்று தேறினர். அவரிடம் இவர், "ராணுவத்துக்கு என்னுலான சேவையெல்லாம் செய்தேன்; செய்த வேலை சிறப்பாய் முடிவதே நாம் பெறும் ஊதியம்" என்று ஒரு சமயம் சொன்னர்.

திடீரென்று ஒருநாள் இரண்டாவது உலக யுத்தம் மூண்டது. ஹிட்லரின் பிரம்மாண்டமான சேனைகள் ஐரோப்பாவின் கீழ்ப் பகுதி நாடுகளில் புகுந்தன. ஃபிரான்ஸ் விழுந்தது. டன்கர்க் படையெடுப்பில் இங்கிலாந்து பின்வாங்கி ஓடியது. ஐக்கிய அமெரிக்க சேனையில் 15 லட்சம் பேர் இருக்கவேண்டும் என்ற ஒரு சட்டம் பிறந்தது.

மூன்ருவது டிவிஷன் ஸ்டாஃப் தலைவராக ஐக் நியமனம் பெற்ருர். பிறகு ஒன்பதாவது கோர் ஸ்டாஃப் தலைவரானர். பின்பு கர்னல் என்ற கிரேடுக்கு உயர்ந்து மூன்ருவது ஆர்மீ ஸ்டாஃப் தலைமை வகித்தார். அதிலிருந்து சட்டென்று இரண்டாவது ஆர்மி தலைமைக்குத் தாவினர். பிரிகடீர்-ஜெனரல் என்ற ப்ரமோஷன் பெற்ருர். வாஷிங்டன் நகரத்தில் உள்ள தலைமைக் காரியாலயத்துக்குச் சென்ருர். அங்கே யுத்த ப்ளான்கள் போடும் அஸிஸ்டெண்ட் தலைவருக்கு அஸிஸ்டெண்டாகப் பதவி ஏற்ருர். ஒரு வருஷத்துக்கெல்லாம் அஸிஸ்டெண்ட் தலைமை அதிகாரி பதவியையே அடைந்தார். மேஜர்-ஜெனரல் என்ற ப்ரமோஷன் கிடைத்தது.

இரண்டு மாதத்துக்கெல்லாம் இங்கிலாந்தில் நடந்த ராணுவத் தலைவர் கான்ஃபரன்ஸ்களில் கலந்துகொள்ளவும், போர்முனைகளைச் சுற்றிப் பார்க்கவும் இவரை அனுப்பினார்கள்.

அடுத்த மாதம் அமெரிக்காவுக்குத் திரும்பியதும், இவரை ஜெனரல் ஜார்ஜ் ஸி. மார்ஷல் தம் காரியாலயத்துக்கு அழைத்தார். ஐரோப்பாவில் இருந்த அமெரிக்கப் படைகளுக்கெல்லாம் கமாண்டர் - இன்-சீஃப் பதவி வகிக்கும்படி இவரை நியமித்திருப்பதாக அவர் தெரிவித்தார். அதைக் கேட்டதும் இவர் திகைத்துப் போனார். இத்தனை நாளும் நேரே யுத்தத்தில் கலந்துகொண்டறியாத இவர், இப்போது அந்த அநுபவத்தைப் பெறவேண்டியவரானார். லெஃப்டினெண்ட் - ஜெனரல் என்ற கிரேடும் கிடைத்தது. ஆப்பிரிக்கப் போர் முடிந்ததும் முழு ஜெனரலே ஆகிவிட்டார்.

நேச வல்லரசுகளின் படையெடுப்புப் படைகள் அனைத்துக்கும் ஸுப்ரீம் கமாண்டர் பதவியை அடுத்தபடியாகப் பெற்றார். நேச வல்லரசுகள் அத்தனையும் இவருடைய நியமனத்தை ஒற்றுமையாய் அங்கீகரித்தன. ஸ்டாலின் இவரை முழு மனத்தோடு ஆதரித்தார்; கன்ஸர்வடிவ் சர்ச்சில் இவரிடம் பெருந் திருப்தி கொண்டார். ஒரே ஒரு நாட்டுச் சர்க்கார்கூட இவருடைய நியமனத்தை ஆட்சேபிக்கவில்லை.

யுத்த தந்திரங்களில் வர வர இவருடைய புகழ் பெருகியது. ராஜதந்திரம், நிர்வாகம் இரண்டிலும் தேர்ந்திருந்தார். நீதியில் தளராத உறுதி, மனிதர்களை நிறை போட்டுவிடும் புத்திக் கூர்மை, சமய - ஜாதி - இன பேதங்கள் பாராட்டாத நேர்மை இந்த நற்குணங்களெல்லாம் இவரிடம் அமைந்திருந்தன. இவையே இவரிடம் எல்லாருக்கும் அன்பு உண்டானதற்குக் காரணம்.

ராணுவ அதிகாரிகளிடம் காட்டுவதைவிடச் சாதாரண ஸோல்ஜர்களின் க்ஷேமத்தில் இவர் அதிக அக்கறை காட்டினார். அவர்களிடம் சர்வ சகஜமாய்ப் பழகி உற்சாகமூட்டினார். கடைசியில் ஃபிரான்ஸில் நேச ராணுவம் படையெடுத்து ஹிட்லரின் சேனைகளை முறியடித்து வெற்றி சூடிய வரலாறுதான் சரித்திரப் பிரசித்தமாயிற்றே.

1948 பிப்ரவரியில் ஐக்கிய அமெரிக்க ராணுவத் தலைமைக் காரியாலயத் தலைவர் பதவி வகித்துவிட்டு, இவர் ரிடையர் ஆனார். சில நாளைக்கெல்லாம் கொலம்பியா யூனிவர்ஸிட்டியின் ப்ரஸிடெண்ட் பதவி பெற்றார். 1949-இல் ஜனாதிபதிக்கு ராணுவ ஆலோசனை சொல்லுபவராகப் பதவி வகித்தார். 1950-இல் வட அட்லாண்டிக் கவுன்ஸில் தற்காப்புப் படைகளின் தலைவரானார். சமீபத்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அதைத் துறந்து அமெரிக்காவுக்குத் திரும்பினார். ரிபப்ளிக்கன் கட்சியின் அபேட்சகராக நின்று அதில் வெற்றியும் பெற்றார். சில நாளில் இவர் பதவியேற்றதும், சர்வதேச அரசியல் நிலைமையில் என்ன மாறுதல் நேருமோ என்ற கவலையும் ஆவலும் சூழ, அந்த நாளை உலகம் முழுவதுமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

கார்ட்டூன் கதம்பம்



“டாக்டர், என்னவோ என் உடம்புக்கு வந்திருக்கிறது. போன வாரம் முழுவதும் பார்லிமெண்டில் எனக்குத் தூக்கமே வரவில்லையே; என்?”

—‘காரவான்’

கராச்சியில் 25,000 பேர் கூடிய காதியானி விரோதிகள் கூட்டம் ஒன்று, ஜாபருல்லா கானை மந்திரி பதவியிலிருந்து விலக்கக் கோரியது.

—‘ஃபோரம்’



சென்னையில் மட்டுமா? கோயம்புத்தூர், ராமநாதபுரம் முதலியவற்றிலும் ஆந்திரர்கள் இருக்கிறார்கள். "அவைகளையும் ஆந்திரர் கேட்கலாமே" என்றார் ராஜாஜி. "ராஜாஜி கூற்றைக் கூறு கூறாக அலசிப் பதில் தருகிறேன்" என்றார் ஆந்திரகேசரி பிரகாசம்.

—'சங்கர்ஸ் வீக்லி'

பாலில்தான் எத்தனை வகை! ஒவ்வொன்றிலும் ஒரு தனிக் குணம் இருக்கிறது.

பாலின் பெருமை

டாக்டர் புச்சா வேங்கடராமையா

பால் பொதுவாக இனிப்பானது. சீக்கிரம் ரத்தத்தோடு கலந்துவிடும். பலத்தை வளர்த்து, தாதுக்களுக்குப் புஷ்டியைக் கொடுக்கும். வாத, பித்தங்களை நீக்கும். வீரிய விருத்தி செய்யும். சீதளத்தை உண்டுபண்ணும். ஆனால் இப்பொழுது சொல்லிய எல்லாக் குணங்களும், சிலவகைப் பால்களுக்கு மட்டுமே உண்டு. உதாரணமாக, ஒட்டகத்தின் பாலை எடுத்துக்கொண்டால் அது சற்றுச் சூடாகவும் உப்பாகவும் இருக்கும். வெள்ளாட்டின் பால் லேசாக இருக்கும். செம்மறியாட்டின் பால் உஷ்ணமானது. ஒற்றைக் குளம்புள்ள ஜந்துக்களின் பால் எல்லாமே சற்றுச் சூடாகவும் உப்பாகவும் புளிப்பாகவும் இருக்கும்.

அரிசி மாவால் செய்த தின்பண்டங்களெல்லாம் ஜீரணமாகாமல் கனமாக இருப்பதோடு வெகு நேரம் வரையில் தாகத்தைக் கொடுக்கும். பாலிலும் இதைப் போன்ற கனத்தைக் கொடுக்கும் பொருள் இருந்தாலும் அது தாகத்தைக் கொடுக்காமல் சீக்கிரம் ஜீரணமாகிவிடுகிறது.

பெண்களின் ஆகார சத்தே குழந்தைகளின்மேல் உள்ள அன்பினால் பாலாக மாறுகிறது.

பசுவின் பால்: எல்லா ஜந்துக்களின் பாலையும் விடப் பசும் பால் நல்ல பலத்தைக் கொடுப்பது. அதனாலேயே உடம்பில் வறட்சி ஏற்பட்டுப் பலம் குன்றியபோது இந்தப் பாலை மருந்தாக உபயோகிக்கிறார்கள். பால் ஆகாரமாக மாறும்போது குற்றமற்ற இனிய திரவமாகிறது. காயம் பட்டவர்களுக்கும் தாது பலவீனப் பட்டவர்களுக்கும் இது நன்மை தரும். இந்தக் குணங்கள் தாய்ப்பாலுக்கும் உண்டு.

களைப்பு, மயக்கம், சுவாச காசம், அதிக தாகம், பசி, ரத்தக்குறைவு இவற்றையெல்லாம் பசும் பால் குணப்படுத்தும்.

எருமைப் பால்: இது அகோரப் பசி உள்ளவர்களுக்கும் தூக்கம் அற்றவர்களுக்கும் நன்மை தரும். மிகவும் தடிப்பானது. குளுமையானது. பசும்பாலே எல்லாப் பாலையும்விட லேசானது. அதை விடச் செம்மறியாடு, வெள்ளாடு, எருமை இவற்றின் பாலில் படிப்படியாகத் தடிப்பு அதிகம். எருமைப்பால் அதிகக் குளுமையானதால் நிறையத் தூக்கத்தைக் கொடுக்கும். ரத்தத்தில் கலக்கப் பசும் பாலுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமோ அதைப் போல் நாலு பங்கு நேரம் இதற்கு வேண்டும். இது பித்தத்தை நீக்கும்.

வெள்ளாட்டுப் பால்: ஆடு தண்ணீர் குறைவாகக் குடிக்கும். அங்கும் இங்கும் ஓடியாடுவதால்

மூலம்: பிரக்ருதி (தெலுங்கு), விஜயவாடா.

இதற்கு நிறையத் தேகப் பயிற்சி கிடைக்கும். காரமும் கசப்பு முள்ள தழைகளையே தின்னும். அதனால் இதன் பால் வெகு சீக்கிரத்தில் ஜீரணமாகக் கூடியது. மயக்கம், ஜுரம், சுவாச நோய், ரத்தக் குறைவு, அதிஸாரம் ஆகிய நோய்களுக்கு வெள்ளாட்டின் பால் மிக நல்லது. ஆனால் தன் இயற்கைப்படி ஓடியாடித் திரியாமல், மூலிகைகளைத் தின்னாமல், கனத்த உணவை உட்கொள்ளும் வெள்ளாட்டின் பாலுக்கு மேலே சொன்ன குணங்கள் இருப்பதில்லை. இதே போல் பசு முதலிய மிருகங்களின் பாலும் அவற்றின் ஆகாரத்தைப் பொறுத்தே தடிப்பாகவோ லேசாகவோ இருக்கும். இவை இரவுகளில் ஓடியாடாமல் ஒரே இடத்தில் இருப்பதால் மாலையில் கறந்த பாலைவிடக் காலையில் கறந்த பால் தடிப்பாகவே இருக்கும். பிண்ணாக்குத் தின்னும் மிருகங்களின் பால் மிகத் தடிப்பாகவும் சிலேஷ்மத்தை உண்டு பண்ணுவதாகவும் இருக்கும். இரவும் பகலும் சாணியிலும் மூத்திரத்திலும் கட்டப்பெற்று முறைப்படி உணவும் கொடுக்கப்பெறாத பசுவின் பால் ஆரோக்கியம் உள்ளதல்ல.

ஒட்டகத்தின் பால்: இது சீக்கிரம் ஜீரணமாகக் கூடியது. உஷ்ணமாகவும் உப்பாகவும் இருக்கும். பசியைத் தூண்டும். வாதம், கபம், கிருமி ரோகம், மயக்கம், வயிற்று நோய்கள் இவைகளுக்கெல்லாம் இது மருந்துபோல் உதவும்.

தாய்ப் பால்: இது வாதம், பித்தம், ரத்த அழுத்தம், கண்ணோய்கள் இவற்றுக்கெல்லாம் மருந்தாக உபயோகப்படும்.

செம்மறியாட்டுப் பால்: இது உஷ்ண வீரியம் உள்ளது. இருதயத்துக்குக் கெடுதல் செய்யும். வாத நோயை நீக்கும். சுவாச நோய், பித்தம், கபம் இவற்றை உண்டாக்கும்.

யானைப் பால்: இது உடம்புக்கு நல்ல உறுதியைக் கொடுக்கும்.

ஒற்றைக் குளம்புள்ள குதிரை முதலிய மிருகங்களின் பால் மிக உஷ்ணமாகவும் லேசாகவும் இருக்கும். கால், கை வாத ரோகங்களுக்கு இது நல்ல மருந்தாகும். சற்றுப் புளிப்பாகவும் உப்பாகவும் இருக்கும்.

பச்சைப் பால்: காய்ச்சாத பால் கபத்தை வளர்க்கும். மிகத் தடிப்பாக இருக்கும். லேசாகக் காய்ச்சிய பால் லேசாக இருக்கும்; சிலேஷ்மத்தை வளர்க்கும். தாய்ப் பால் ஒன்றை மட்டுமே பச்சைப் பாலாக உபயோகிக்கலாம். வேறு பால்களை ஒன்றுக்குப் பாதி தண்ணீர் கலந்து, தண்ணீர் வற்று மட்டும் காய்ச்சிக் குடிப்பதுதான் உடம்புக்கு நல்லது.

அதிகமாகக் காய்ச்சிய பால்: கட்டி தட்டும்படி காய்ச்சிய பால் சீக்கிரம் ஜீரணம் ஆகாது. தண்ணீர் கலக்காமல், 2, 3, 4 அல்லது 8 பாகம் குறையும்படி காய்ச்சிய பால் மிகத் தடிப்பாக இருந்தாலும் சத்துள்ளதாக இருக்கும். காய்ச்சி ஆற வைத்த பால் பித்தத்தைப் போக்கும். சூடான பால் கப, வாதங்களை நீக்கும். பாலாடை ரத்தம் நன்றாக ஊறச் செய்யும்; வீரிய விருத்தி செய்யும். நுரைப் பால் அமுதத்துக்குச் சமானம். பிண்ணாக்கைத் தின்று புளித்த கழுநீரைக் குடிக்கும் பசுவின் பால் தடிப்பாகவும் சிலேஷ்மத்தை

உண்டு பண்ணுவதாகவும் இருக்கும்.

பசி குறைந்து அஜீரணப்பட்டவர்கள் பால் பிடிக்காத நிலையில் எலுமிச்சம் பழ ரசத்தைச் சாப்பிட்டு வந்தால் பிறகு பாலின்மேல் ஆசை தோன்றும்; பால் ஜீர்ணமாகும். பால் சாப்பிடுபவர்கள், அது ஜீரணமான பின் பழ ரசங்களைச் சாப்பிட்டால் நல்லது.

தீரனின் கால்

நெப்போலியன் சக்கரவர்த்தி எப்போதும், "மார்ஷல் நீ என்பவரே ஸோல்ஜர்களுக்குள் இணையற்ற தீரன்" என்று புகழ்வார்.

அந்த மார்ஷல் ஒரு சமயம் போருக்குப் புறப்படத் தம் குதிரை மீது ஏறப் போனார். அப்போது அவர் கால் வெட வெட என்று நடுங்கியது. அதை மார்ஷல் குனிந்து பார்த்தார். கடைசியில் எப்படியோ சமாளித்து, சேணத்தில் ஏறி அமர்ந்தார். பிறகு காலைப் பார்த்து, "நடுங்காதே காலே. இப்போதே இப்படி நடுங்குகிறாயே! நான் போகிற இடம் தெரிந்தால், எப்படித்தான் நடுங்குவாயோ! தூ" என்று சொல்லக் காறி உமிழ்ந்தார்.

ஜான் ஏ. ஓ'பீன்

சென்னை ராஜ்யத்தில் கல்வி நிலை

கீழ்க்கண்ட புள்ளி விவரம் 1950 ஏப்ரலில் எடுத்தது.

பள்ளிகளும் கல்லூரிகளும்		அவற்றின் மொத்த எண்ணிக்கை	மாணவர்	
			ஆண்	பெண்
ஆரம்பம்	..	37,812	25,22,379	14,67,443
மத்தியதரம்	..	1,247	4,86,128	1,11,126
கலை, விஞ்ஞானம்	..	66	37,285	4,242
உபாத்திமைப் பயிற்சி	..	7	318	203
எஞ்சினீரிங், தொழில்	...	7	2,432	4
வைத்தியம்	...	6	1,680	559
பிராணி வைத்தியம்	..	1	480	5
விவசாயம்	..	2	472	5
காட்டிலாகா	..	1	173	—
சட்டம்	..	2	827	13
சங்கீதம்	..	3	150	18
கீழ்நாட்டு மொழிகள்	..	29	1,076	89
முதியோர் கல்வி	...	846	22,265	548
இந்திய வைத்தியம்	...	1	513	69

இந்திய ஸைக்கிள்

★

> அகில இந்திய ஸைக்கிள் மகாநாடு ஒன்று சமீபத்தில் சென்னையில் நடந்தது எல்லாருக்கும் தெரியும். அதில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்ட தலைவர்களின் பேச்சுக்கள், 'ஹிந்து'வில் வெளியான ஸ்ரீ பி. பி. நாராயணசாமி நாயுடுவின் ஒரு கட்டுரை இவைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதியது இது.

"ஒரு குதிரையையோ யானையையோ மோட்டாரையோ விட ஸைக்கிள் உயர்ந்தது. இதற்கு எந்த விதமான ஆகாரமும் தேவையில்லை; பெட்ரோலும் வேண்டியதில்லை. நடந்து செல்வதைவிட இதில் விரைவாகச் செல்லலாம்; இதை வைத்துக்கொள்வதற்கு அதிகச் செலவாவதில்லை. ஆணுக்கு ஸைகிள் மனைவியைப் போன்றது; பெண்ணுக்கு ஸைகிள் கணவனைப் போன்றது. அது மட்டுமா? கணவன் கடுமையாக நடந்துகொள்ளலாம்; மனைவி நச்சரிப்பவளாக இருக்கலாம். ஆனால் ஸைக்கிள் இப்படியில்லை. ஸைக்கிளுக்குத் தான் வாயே இல்லையே." - இது ராஜாஜியின் வாக்கு. ஸைக்கிள் உற்பத்தியாளர், வியாபாரிகள், உபயோகிப்பவர்கள் இவர்களின் அகில இந்திய மகாநாடு ஒன்று சமீபத்தில் நடந்ததே, அதற்கு ராஜாஜி இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

சென்னை, பம்பாய், டில்லி போன்ற பெரிய நகரங்களில் வேலை செய்யும் நடுத்தர வகுப்பு மக்களுக்கு ஸைக்கிள் பெரிய உதவியாக இருக்கிறது.

சென்னை ஷெரீப் ஸ்ரீ எஸ். அனந்த ராம கிருஷ்ணன் அகில இந்திய ஸைக்கிள் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசும்போது, இந்த விஷயத்தை எடுத்துக் காட்டினார்:



செய்தி அனுப்பிய ராஜாஜி

ஆதாரம்: (1) ஹிந்து, (2) இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்), சென்னை.

ஆரம்பித்து வைத்த டாக்டர் யு. கிருஷ்ண ராவ்

"டில்லி செக்ரடேரியட்டுக்குச் செல்லும் வழியில், காலையில் 9 மணியிலிருந்து 10 மணி வரைக்கும் யாராவது நின்று பார்த்தால், ஸைக்கிளின் பெருமையை உணர்ந்துகொள்ளலாம். வீட்டுக்கு வீடு செல்லும் சுலபமான போக்கு வரத்துச் சாதனமாக உள்ள ஸைக்கிள் தனி மனிதனுக்கு மிகவும் துணையாக இருக்கிறது. எனவே, ஸைக்கிள் உற்பத்தித் தொழிலுக்கு இந்தியாவில் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றே நான் எண்ணுகிறேன். இந்தியாவிலேயே ஸைக்கிள் தயாராகி மக்களுக்கும் நியாயமான விலைக்குக் கிடைக்க ஆரம்பித்தால், அடுத்த சில வருஷங்களிலேயே 10 லட்சம் ஸைக்கிள்களுக்கு மார்க்கெட் கிடைத்து விடும் என்று துணிவாகச் சொல்லலாம். அப்பொழுது ஒரே ஸைக்கிளில் இரண்டு பேர் சவாரி செய்வதைக் காண்பதே அபூர்வமாகிவிடும்."

தங்களுக்கென்று சொந்தமாக ஒரு ஸைக்கிளாவது வைத்துக் கொள்ள வேண்டுமென்று பலர் ஆசைப்படுகிறார்கள்; உண்மையில் அது அவர்களுக்குத் தேவையாகவும் இருக்கிறது. ஆனால் சிலருக்குத்தான் ஆசை பூர்த்தியாகிறது. ஐரோப்பிய நாடுகளில் 1,000 பேருக்கு 300, 400 பேர் வரை ஸைக்கிள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் ஆயிரத்துக்கு 8 அல்லது 9 பேருக்குத்தான் சொந்தமாக ஸைக்கிள் இருக்கிறது என்று 1946-ஆம் வருஷக் காப்பு வரி போர்டின் அறிக்கையிலிருந்து தெரிகிறது.

இந்தியாவில் ஸைக்கிள்கள் விலை அதிகமாக இருப்பதும், மக்களின் ஏழைமை நிலையுந்தான் இதற்குக் காரணம்.

சென்னை சர்க்காரின் தொழில், போக்கு வரத்து மந்திரி டாக்டர் யு. கிருஷ்ண ராவ், குறைந்த விலையில் ஸைக்கிள் கிடைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறார். அகில இந்திய ஸைக்கிள் மகாநாட்டை ஆரம்பித்துவைக்கும் போது இந்த விஷயங்களையே அவர் விளக்கமாகப் பேசினார்:

"யந்திரம் என்ற முறையில் ஸைக்கிள் சர்க்கா இனத்தைச் சேர்ந்தது. தனி மனிதனுக்கு உதவி செய்யும் வகையில் அமைந்துள்ளது. நம் ஒவ்வொருவருக்கும் ஸைக்கிள் தேவையாக இருக்கிறது. இப்போது நமக்கு வேண்டியது குறைந்த விலையில் ஸைக்கிள். உற்பத்தியாளராக இருந்தாலும் சரி, இறக்குமதியாளராக இருந்தாலும் சரி, இந்த நோக்கத்துக்கு மாறாக எதைச் செய்தாலும்

ஏழைக்கும் தேசத்தின் பொருளாதார நிலைக்கும் தீங்கு செய்தவர்களாவார்கள்'' என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்வளவு வருஷங்களாக ஸைக்கிளை இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்து வந்தார்கள். சமீப காலத்தில் பல துறைகளில் இந்தியாவில் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பது போலவே ஸைக்கிள் உற்பத்தித் தொழிலும் புதிதாகத் தோன்றியிருக்கிறது.

1925 - இலேயே இந்தியாவில் ஸைக்கிள் உற்பத்தி ஆரம்பமாகிவிட்டது. பிரிட்டிஷ் தொழில் நுணுக்க நிபுணர்கள் சிலருடைய உதவியால் தென் இந்தியாவில் 'ஸ்வான்' என்ற பெயரில் ஸைக்கிள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அப்போது தோன்றியது. மார்க்கெட்டில் சில காலம் வரைக்கும் இதற்கு நல்ல பெயர் இருந்தது. துரதிருஷ்டவசமாக இந்தத் தொழிற்சாலையைச் சில வருஷங்களுக்குப் பிறகு மூடிவிட்டார்கள். சுதேசி ஸைக்கிள் உற்பத்தித் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று இந்திய சர்க்காரின் வர்த்தக இலாகாவிடம் 1945 டிசம்பரில் கல்கத்தா ஸைக்கிள் உற்பத்தியாளர் சங்கம் விண்ணப்பித்துக்கொண்டது. இந்த யோசனையை இந்தியத் தொழில் பாதுகாப்பு போர்டார் 1946 மே மாதம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டார்கள். அந்தச் சமயம் பம்பாய் ஹிந்த் ஸைக்கிள் லிமிடெட், ஹிந்துஸ்தான் பைஸிக்கிள் கார்ப்பரேஷன், பாட்னு தொழில் கார்ப்பரேஷன் என்ற மூன்று ஸ்தாபனங்களே ஸைக்கிள் உற்பத்தியில்

தலைமை வகித்த
ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன்

ஈடுபட்டிருந்தன. அப்போது ஹிந்த் ஸைக்கிள் கம்பெனியில் வருஷம் ஒன்றுக்கு, 60,000 ஸைக்கிளும் ஹிந்துஸ்தான் ஸைக்கிள் உற்பத்திக் கம்பெனியில் வருஷம் ஒன்றுக்கு 35,000 ஸைக்கிளும் உற்பத்தியாவதற்கு வேண்டிய வசதிகள் இருந்தன. இன்னும் 1949 - இலிருந்து வருஷம் ஒன்றுக்கு 1,00,000 முதல் 1,50,000 ஸைக்கிள் வரை தயாரிப்பதற்கு வேண்டிய வசதிகளைத் தருவித்து விடுவதாக ஹிந்த் ஸைக்கிள் கம்பெனியும், ஹிந்துஸ்தான் பைஸிக்கிள் கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனமும் தொழில் பாதுகாப்பு போர்டுக்கு உறுதி தந்தன. ஆனால் இந்த ஸ்தாபனங்களால் மேல்நாட்டிலிருந்து போதுமான சாதனங்

களைத் தருவிக்க முடியவில்லை. பிறகு கல்கத்தாவில் உள்ள இந்தியா ஸைக்கிள் மானுபேக்சரிங் கம்பெனியும் இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி போர்டிடம் கேட்டுக்கொண்டது. இந்த ஸ்தாபனம் ஸைக்கிளுக்கு வேண்டிய கருவிகளை மட்டுமே உற்பத்தி செய்கிறது. இது மாதம் சராசரி $3\frac{1}{2}$ லட்சம் மதிப்புள்ள கருவிகளைத் தயார் செய்கிறது. சுதேசி ஸைக்கிளின் தரம் சுமாராக இருந்தது; ஆனால் மேல்நாட்டு ஸைக்கிளுக்குச் சமமாக இல்லை.

தொழிலுக்குப் பாதுகாப்பு அளிப்பதாலேயே ஒரு தொழில் வளர்சசி பெற்றுவிட முடியாது; புதிய தொழிலை ஏற்படுத்திவிடவும் முடியாது. வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாகும் உற்பத்திப் பொருள்களின் போட்டியிலிருந்து ஓரளவு சுதேசிப் பொருள்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள். சமமான முறையில் வெளிநாட்டுப் பொருள்களுடன் ஓரளவு போட்டியிடவும் சுதேசிப் பொருள்களுக்கு இதனால் வசதி ஏற்படுகிறது. தொழில் வளர்ச்சி அடைய உள்நாட்டு மார்க்கெட்டில் சுதேசிப் பொருள்களுக்கு மதிப்பு ஏற்படுவதற்கான நல்ல சூழ்நிலையையே தொழில் பாதுகாப்புத் தருகிறது. எனவே, இந்தியத் தொழில் பாதுகாப்பு போர்டு, ஸைக்கிள் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்தது.

ஸைக்கிள் தொழிலுக்கு அவசியமான சிறந்த எஃகு கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளைச் சர்க்கார் செய்து தந்தது.

தங்களுக்குத் தேவையான ஸைக்கிளை உள்நாட்டுக் கம்பெனிகளிடமிருந்தே சர்க்கார் பெற்றுக்கொள்வதென்றும் ஏற்பாடாயிற்று. ஸைக்கிள் உற்பத்திக்கு வேண்டிய யந்திரங்களை இறக்குமதி செய்தபோது வசூலித்த வரிகளைத் திருப்பிக் கொடுப்பதென்றும் முடிவாயிற்று. ஸைக்கிள் தொழிலின் முன்னேற்றம் சம்பந்தமான ஆராய்ச்சிக்ென்று ஓர் அளவு தொகையையும் ஸ்தாபனங்கள் ஒதுக்க முன்வந்தன.

சர்க்கார் அளித்த இந்தத் தொழில் பாதுகாப்பு, 1949 மார்ச்சுடன் முடிவடைந்தது. மீண்டும் பாதுகாப்பு போர்டு, தொழிலுக்கு மேலும் பாதுகாப்பு அளிப்பது சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்தியது. 1947-இல் 43 400 ஸைக்கிள்களே உற்பத்தியாகி இருந்தன. எதிர்பாராதபடி உற்பத்தி விலையும் அதிகரித்திருந்தது. விசாரணையின் முடிவில் 1952 வரை தொழிலுக்குப் பாதுகாப்பு அளிப்பதென்று முடிவாயிற்று.

இந்தச் சமயத்தில் வெளிநாட்டுக் கம்பெனிகளின் உதவியைக் கொண்டு இந்தியாவில் ஸைக்கிள் உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவ மூன்று ஸ்தாபனங்கள் முன்வந்தன. இவை ஆரம்பத்தில் வெளி நாடுகளிலிருந்து சில ஸைக்கிள் பாகங்களை இறக்குமதி செய்து இந்தியாவில் அவற்றை இணைத்துப் பூரண உருவாக்கும். வேறு பாகங்களை இங்கேயே தொழிற்சாலைகளில் தயாரித்துக்கொள்ளும். கல்கத்தாவில் உள்ள சேன்-ராலே இண்டஸ்ட்ரீஸ் என்ற ஸ்தாபனம் இங்கேயே சில பாகங்களையும் தயார் செய்ய ஆரம்பித்துவிட்டது. சென்னையில் உள்ள டி. ஐ. ஸைக்கிள் கம்பெனியும், சோனேபெட்டில் உள்ள அட்லாஸ் ஸைக்

கின் கம்பெனியும் சைக்கிளை இணைத்து உருவாக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. இந்த மூன்று தொழிற்சாலைகளைப்பற்றிய விவரங்களையும் கீழே காணலாம்:

டி ஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, சென்னை: 1949-இல் லிமிடெட் கம்பெனியாக ஆரம்பமாயிற்று. நவீன வசதிகளுடன் கூடிய தொழிற்சாலையைச் சென்னைக்கு அருகே உள்ள அம்பத்தூர் என்னும் இடத்தில் நிறுவியது. தொழிற்சாலை 52 ஏக்கர் விஸ்தீர்ணமுடையது. பர்மிங்ஹாமில் உள்ள ஹெர்க்குலிஸ் சைக்கிள் தொழிற்சாலையில் பயிற்சி பெற்ற இந்தியத் தொழில் நிபுணர்கள் இதில் வேலை செய்கிறார்கள். பிரிட்டிஷ் தொழில் நிபுணர்களின் உதவியையும் இவர்கள் பெற்றிருக்கிறார்கள். 1951 ஸெப்டம்பர் மாதம் சென்னை கவர்னர் இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைத்தார். இங்கே தினசரி சராசரி 250 சைக்கிள்கள் உற்பத்தியாகின்றன. தினம் 600 சைக்கிள்கள்வரை உற்பத்தி செய்யும் அளவுக்குச் சாதனங்கள் இருக்கின்றன. போதுமான பொருள் கிடைக்காததால் தற்சமயம் உற்பத்தி குறைவாக இருக்கிறது. ஜனவரியிலிருந்து அக்டோபர் வரையில் 'ஹெர்க்குலிஸ் - இந்தியா' என்ற பெயரில் இந்தக் கம்பெனியிலிருந்து 30,000 சைக்கிள்கள் மார்க்கெட்டில் வந்திருக்கின்றன. சைக்கிளுக்கு வேண்டிய பாகங்களைத் தயாரிக்கும் மற்றொரு 'ஃபாக்டரி'யும் இங்கேயே உருவாகிக்கொண்டிருக்கிறது.

ஸேன் - ராலே தொழிற்சாலை: அஸன்ஸாலுக்கு அருகே கன்யாபுர் என்னுமிடத்தில் இந்தத் தொழிற்சாலை அமைந்திருக்கிறது. தாமோதரப் பள்ளத்தாக்கு அருகே இது இருக்கிறது. தொழிற்சாலை 1,25,000 சதர அடி விஸ்தீர்ணம் உள்ளது. 100 ஏக்கர் விஸ்தீர்ணத்தில், கன்யாபுர் தொழிற்சாலை நகரம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இங்கிலாந்தில் புகழ்பெற்ற ராலே சைக்கிள் கம்பெனி இதன் வளர்ச்சியில் பெரிய பங்கு பெற்றிருக்கிறது. இதற்கு வேண்டிய எல்லாச் சாதனங்களும் 1953-க்குள் மேல்நாட்டிலிருந்து வந்துவிடும். செயின், ஸ்போக்ஸ், சீட்டுகள் போன்ற பல சைக்கிள் பாகங்கள் எல்லாம் இங்கேயே உற்பத்தியாகும்.

அட்லாஸ் சைக்கிள் இண்டஸ்ட்ரீஸ்: சோனேபெட் ரெயில் பாதைக்கு அருகே 25 ஏக்கர் விஸ்தீர்ணத்தில் இந்தத் தொழிற்சாலை அமைந்திருக்கிறது. மே மாதத்திலிருந்து இங்கே சைக்கிள் உற்பத்தி தொடங்கிவிட்டது. ஜெர்மன், பிரிட்டிஷ், இந்தியத் தொழில் நிபுணர்களின் மேற்பார்வையில் இது நடக்கிறது. இங்கே தயாராகியுள்ள சைக்கிள் பிரேம்கள், மட் - கார்டுகள், ஸ்போக்ஸ் போன்ற பாகங்கள் நல்ல உறுதியான எஃகினால் செய்தவை. எனமல் பூச்சும் நீடித்து வரக்கூடியது.

சர்வோதயம் என்றால் என்ன?

சர்வோதயம் என்பது சமூக லட்சியமே. காரியம், அதன் சாதனை இவற்றில் ஒற்றுமை வேண்டுமென்று காந்திஜி சொன்னார். சர்வோதயத்தை அடைய இதை விட வேறு மார்க்கமில்லை.

—விநோபா பாவே

செயற்கை அரிசி

வி. பாலு

யுத்தத்தின்போது, ஜெர்மனியில் சகல பொருள்களுக்கும் பஞ்சம் வரவே, போலிப் பொருள்களைத் தயாரித்தார்கள். 'எர்ஸ்டாட்' என்ற இவைகளைப் பரிகசித்தார்கள். இப்போது நம் நாட்டிலும் 'எர்ஸ்டாட்' அரிசி வந்திருக்கிறது.

விஞ்ஞானம், கைத்தொழில் இவற்றின் அபிவிருத்தி சம்பந்தமான ஆராய்ச்சிச்சாலைகளை ஏற்படுத்தும் பணியை, புது டெல்லி ஆராய்ச்சிக் கவுன்ஸில் செய்துவருகிறது. மைசூரில் 1950-இல் ஸ்தாபித்த உணவு சம்பந்தமான மத்திய ஆராய்ச்சிச் சாலை இதன் முயற்சியால் ஏற்பட்டதுதான். 1950 அக்டோபர் 21-இல் ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் இதைத் திறந்து வைத்தார். அன்றுமுதல் இது வெகு தீவிரமாக வேலை செய்து வருகிறது. மரவள்ளிக் கிழங்கிலிருந்தும் வேறு சில பொருள்களிலிருந்தும் அரிசி போன்ற உணவுப் பொருள்களைச் செயற்கையாகச் செய்ய முடியும் என்பதை இந்த ஸ்தாபனம் ஓரளவு நிரூபித்துவிட்டது. இந்த ஆராய்ச்சியில் மைசூரிலுள்ள ஆராய்ச்சிச்சாலை வெகு முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

"நம்முடைய தினசரி உணவு பெரும்பாலும் கோதுமையும் அரிசியுந்தான். நாம் தினசரி சாப்பிடும் கோதுமை அல்லது அரிசியின் அளவில் கால்பங்கைக் கிழங்கு மாவாகச் சாப்பிடலாம். இதனால் உடலுக்கு வேண்டிய போஷணையில் குறைவு ஒன்றும் ஏற்படாது. இந்த உண்மையை மைசூர் ஆராய்ச்சிச்சாலை விஞ்ஞானிகள் இடைவிடாத ஆராய்ச்சிக்குப் பின் கண்டுபிடித்திருக்கிறார்கள். மரவள்ளிக் கிழங்கு மாவு நல்ல சத்துள்ளது என்றும் அவர்கள் சொல்கிறார்கள். 100-க்கு 85 பங்கு மரவள்ளிக் கிழங்கு மாவோடு 100-க்கு 15 பங்கு

மரவள்ளிக்கிழங்குச் செடிகள்

காப்பிரைட்: ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 2-11-'52),
ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

வெள்ளை நிலக்கடலை மாவைக் கலந்துகொண்டால், இந்தக் கலவையில் அரிசியைவிடப் போஷணைச் சத்து அதிகம் இருக்கிறதாம்.



செயற்கை அரிசி

இந்த ரகசியத்தைக் கண்டு பிடித்த பிறகு இந்தக் கலவையிலிருந்து தானிய மணிகளைப் போன்ற உருண்டை மணிகள் செய்ய முடியுமா என்று 10 மாதம் ஆராய்ந்து வெற்றியும் பெற்ருர்கள். இந்த மணிகளை, 'செயற்கைத் தானிய மணிகள்' என்கிருர்கள்.

செய்ற்கைத் தானிய மணிகளைச் செய்வது வெகு சுலபம். 100-க்கு 85 பங்கு மரவள்ளிக் கிழங்கு மாவோடு, 15 பங்கு நிலக்கடலை மாவைக் கலந்து, 75 பங்கு தண்ணீரை விட்டு நன்ருகப் பிசையவேண்டும். இப்படிப் பிசைந்த மாவை ஒரு சல்லடையில் (அங்குலத்துக்கு 6 அல்லது 8 துவாரம் உள்ள சல்லடை) போட்டுத் தேய்த்துச் சிறு சிறு உருண்டைகளாக்கிக் கொள்ளவேண்டும். இந்த உருண்டைகளை 4 அடி நீளம் 2 அடி அகலம் உள்ள தட்டு (ட்ரே)களில் போட்டு அரை மணி நேரம், யந்திர சக்தியால் குலுக்கினுல் இவை நன்ருக இறுகி நல்ல உருண்டை வடிவமும் பெற்றுவிடும். குலுக்கும் தட்டுகளின் அடிப்பகுதி உலோகத் தகடாகவோ துணியாகவோ இருக்கலாம். இந்த உருண்டைகளை அங்குலத்துக்கு 8 துவாரம் உள்ள சல்லடையில் முதலில் போட்டுச் சலிக்கவேண்டும். இந்தச் சல்லடையில் தங்கும் உருண்டைகளைப் பிறகு அங்குலத்துக்கு 10 துவாரம் உள்ள சல்லடையில் போட்டுச் சலிக்கவேண்டும். இந்தச் சல்லடையில் தங்கும் உருண்டைகளை மட்டுந்தான் மேற்கொண்டு பக்குவம் செய்வார்கள்.



அரிசி, மரவள்ளிக்கிழங்கு இரண்டின் மாவையும் சலிக்கிருன்

இந்த உருண்டைகளை ஜெலட்டினில் போட்டுப் புரட்டி, ஒவ்வொன்றின் மேலும் ஜெலட்டின் உறைபடரச்செய்து, காயவைத்து, பொன்னிறமாக வறுத்துக்கொள்வார்கள். இதுதான் பக்குவமான செயற்கைத் தானிய மணி. இந்தத் தானிய மணிகளில் ஒரு பவுண்டு தயாரிக்க நாலே அணுதான் செலவாகிறது.

இந்தச் செயற்கைத் தானிய மணிகளைச் சமைப்பது வெகு சுலபம். உலைநீர் தள தளவென்று கொதிக்கும்போததான் இவைகளைப் போடவேண்டும். பத்தே நிமிஷத்தில் பக்குவமாகிவிடும். (அரிசி பக்குவமாக அரை மணி நேரம் ஆகும்.) இதனல் சமையல் சீக்கிரம் ஆவதோடு விறகுச் செலவும் குறைவு. முறைப்படி சமைத்தால் இந்தச் சோறு அரிசிச் சோற்றைப் போலவே தனித் தனிப் பருக்கையாகவே இருக்கும். இந்தச் செயற்கைத் தானிய மணிகளைச் சோருகச் சமைத்தும் உபயோகிக்கலாம்; அல்லது வெல்லப் பணியாரங்களோ உப்புப் பணியாரங்களோ செய்யவும் உபயோகிக்கலாம்.

இந்தச் செயற்கைத் தானிய மணிகளைச் செய்வதற்கு வேண்டிய சாதனங்களை, கிராமக் கைத்தொழிலுக்கு வேண்டியபடியும் அமைத்துக்கொள்ளலாம்; பெரிய தொழிற்சாலைக்கு வேண்டியபடியும் அமைத்துக்கொள்ளலாம்; நாள் ஒன்றுக்கு மூன்று முதல் ஐந்து அந்தர் வரையில் இந்தச் செயற்கைத் தானிய மணிகளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சாதனங்களை, கிராமத்தில் கிடைக்கும் சரக்குகளைக் கொண்டே சுமார் 10,000 ரூபாய் முதலில் அமைத்துக்கொள்ள முடியும். நாளொன்றக்கு 5 முதல் 7 டன் வரை உற்பத்தி செய்யக் கூடிய யந்திர சாதனங்களை அமைத்துக்கொள்ள ஒரு லட்ச ரூபாய் முதல் வேண்டும்.

1951 ஜனவரியில் திருவனந்தபுரம் நகரசபை ஒரு பொருட்காட்சி நடத்தியது. அதில் இந்தச் செயற்கைத் தானிய மணி உற்பத்தி செய்யும் யந்திரம் ஒன்றை அமைத்திருந்தார்கள். நாளொன்றக்குச் சில அந்தர் தானிய மணிகளை இது உற்பத்தி செய்தது. இந்தத் தானிய மணிகளைத் தின்பண்டங்களாகப் பக்குவம் செய்து விற்பதற்கென்றே ஒரு சிற்றுண்டிச் சாலையும் அங்கே இருந்தது. அதில் இந்தத் தானிய மணிப் பலகாரங்களைச் செய்து விற்ருர்கள். பொருட்காட்சிக்கு வந்த பலர் சாப்பிட்டுப் பார்த்து ருசியாக இருப்பதாகவே சொன்ஞர்கள்.

உருண்டை மணிகளாக இப்போது செய்யப்படும் இந்தத் தானிய மணிகளை அரிசி உருவமாகவே செய்யும் வழியையும் மைசூர் உணவாராய்ச்சி ஸ்தாபனம் கண்டு பிடித்தவிட்டது. உருண்டை மணிகளைவிட இந்த அரிசி மணிகள் பலருக்குப் பிடிக்கலாம். இந்தச் செயற்கைத் தானிய மணியில் நல்ல போஷணைச் சத்து இருக்கிறது; விலேயோ வெகு மலிவு; இதைச் சமைப்பதும் வெகு சுலபம். அரிசி சாப்பிடும் எல்லோரும் இதை உபயோகிக்கலாம்.

மைசூர் உணவு ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் டைரக்டர், டாக்டர் வி. சுப்பிரமண்யன், டாக்டர்

எம். சுவாமிநாதன், டாக்டர் டி. எஸ். பாட்டியா ஆகிய இவர்களும் இன்னும் அந்த ஸ்தாபனத்து உணவாராய்ச்சி, என்சினீயரிங் பகுதிகளைச் சேர்ந்த வேறு விஞ்ஞானிகளும் இடைவிடாமல் பொறுமையாகவும், பிடிவாதமாகவும், ஒற்றுமையாகவும் உழைத்ததன் பயனாகவே இந்தச் செயற்கை அரிசி இன்று உருவாகியிருக்கிறது.

அரிசி நொய்யிலிருந்து அரிசி மணிகளை உண்டாக்க முடியும் என்று விஞ்ஞான-தொழில் அபிவிருத்தி ஸ்தாபன டைரக்டர் ஸ்ரீ எஸ். எஸ். பட்நாகரும் அவர் சகாக்களும் காட்டியதுதான் இந்தச் செயற்கை அரிசி ஆராய்ச்சிக்குத் தூண்டுதலாக இருந்தது.

செயற்கை அரிசி செய்யமுடியும் என்பதை அறிந்தவர்கள், "ஆனால் ஏன் அது விலைக்குக் கிடைப்பதில்லை?" என்று கேட்பது சகஜந்தான். இப்போது இன்னும் இந்த முயற்சி சோதனை நிலையிலேயே இருக்கிறது. மிகக் குறைவாகத்தான் இதைச் செய்கிறார்கள். இதைச் செய்வதற்கான நடுத்தர யந்திரம் ஒன்று வாங்க இப்போது ஏற்பாடு நடந்து வருகிறது. இதை வாங்கியவுடன் செயற்கை அரிசியை நிறைய உற்பத்தி செய்ய முடியும். இப்படி நிறைய உற்பத்தி செய்தாலும் கூட அரிசிக்கு இது ஈடாக முடியாது. அரிசிக்குத் துணையாகவே இது பயன்பட முடியும்.

மாறாத அபிப்பிராயம்

தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களைப்பற்றி இரண்டு அரசியல்வாதிகள் கூடத்தில் ஒரு பக்கம் தீவிரமாக வாதித்துக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம் அவர்களுடைய மனைவிகளுள் ஒருத்தி மற்றவளிடம் சொன்னது இது: "தாம் குறித்த அபேட்சகரைப்பற்றிய அபிப்பிராயம், அந்த அபேட்சகர் வெற்றி பெற்றாலொழிய மாறவே மாறாது."

—'காரொனெட்'

வியாபாரி யோசனை

ஒரு வீட்டில் திருடர்கள் நுழைந்து, ஏராளமான சொத்துக்களை அடித்துக்கொண்டு போய்விட்டார்கள். வீட்டுக்குக் காவலிருந்த பெரிய நாய் அத்தனை நேரமும் துளிக் கூடக் குரைக்காமல் தூங்கிக்கொண் டிருந்துவிட்டது.

அந்த நாயைத் தமக்கு விற்றவரிடம் வீட்டுக்காரர் சென்று புகார் செய்தார்.

"சரிதான். இப்போது உங்களுக்கு என்ன தேவை தெரியுமா? அந்தப் பெரிய நாயை எழுப்ப ஒரு சின்ன நாய் வேண்டும். நம்மிடம் வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார் வியாபாரி.

—ராயல் ஃபார்வேர்ட்.

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞான மெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கை யால் நிருபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

அன்னையின் வரவு: திருச்சுழியல் என்ற தலத்தில் தோன்றித் திருவண்ணாமலைக்கு வந்து இம்மையிலேயே பேரின்பத்தை அநுபவித்து உணர்ந்த ஜீவன் முக்தராகிய ஸ்ரீ வேங்கடரமணரை அன்பர்கள் எல்லாம் ரமண மகரிஷி என்றும் ரமண பகவான் என்றும் வழங்கலாயினர். இந்த ஞானச் செல்வரிடம் ஈடுபட்ட பக்தர்கள் பகவான் என்றே சொல்வார்கள். காவிய கண்ட கணபதி சாஸ்திரிகளே ரமண பகவானிடம் ஈடுபட்டிருக்கிறார் என்ற செய்தி மக்களுக்கெல்லாம் பின்னும் அதிகமாக அந்தப் பெருமானிடம் பக்தி உண்டாகும்படி செய்தது.

ரமண பகவான் திருவண்ணாமலையில் இருப்பதை அறிந்து இவருடைய தாயாராகிய அழகம்மையாரும், தமையனார் நாகசாமி ஐயரும் ஒரு நாள் புறப்பட்டுத் திருவண்ணாமலைக்கு வந்தார்கள். முன்னே நெல்லையப்பையர் வந்து இந்தப் பெருமானின் நிலையை அறிந்து, ஒன்றுமே சொல்லாமல் போய்விட்டார். ஆனாலும் ஈன்றெடுத்த தாயின் உள்ளம் எளிதில் சமாதானம் அடையுமா? எப்படியாவது தம் ஊருக்கு அழைத்துச் சென்று குடியும் குடித்தனமுமாக இருக்கும்படி செய்யவேண்டும் என்பது அவர் ஆசை.

இரண்டு பேரும் திருவண்ணாமலைக்கு வந்து ரமண பகவானை அணுகினார்கள். பகவானைக் கண்டவுடன் அம்மையாருக்கு உணர்ச்சி கொந்தளித்து எழுந்தது. அநாதையாக விடப்பட்டவர்கள் தம் உறவினரைக் கண்டால் கதறுவது போல் கதறினார்; புலம்பினார். உடனே ஊருக்கு வரவேண்டுமென்று அழைத்தார். நாகசாமி ஐயரும் கண்ணீர் வாரத் தம்மால் இயன்ற வார்த்தைகளைச் சொன்னார். அவர்கள் பட்ட துயரத்தைக் கண்டு அருகில் இருந்தவர்கள் யாவரும் உருகிப் போனார்கள். ரமணர் புன்னகை பூத்த முகத்தோடு அமர்ந்திருந்தார். அவர்களோடு ஒன்றும் பேசவில்லை. "என்ன அப்பா சொல்கிறாய்? பெற்ற வயிறு புழுங்குவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கலாமா?" என்று அன்னையார் அரற்றினார்.

அப்போது அருகில் இருந்த பச்சையப்ப பிள்ளை என்பவர் ரமண பகவானிடம், "அவர்கள் துயரத்துக்கு ஆறுதலாக ஏதேனும் எழுதித் தர வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். தாயாரும் தமையனாரும் கண்ணீரும் கம்பலையு

மாக நின்று கதறுவதை அந்த அன்பரால் காணச் சகிக்க முடியவில்லை. அதனுல் அவர்களுக்காக இந்த ஞானப்பிரானிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

உடனே ரமண முனிவர் பின்வருமாறு ஒரு காகிதத்தில் எழுதித் தந்தார்:

'அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன். என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என் தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆதலின் மௌனமாய் இருக்கை நன்று'

இந்த விடையைக் கண்டதும் அவர்கள் துயரம் மிகுந்ததே ஒழியக் குறையவில்லை. இனி இவரை அழைத்துப் பயன் இல்லை என்று தெரிந்துகொண்டார்கள். தம் ஊருக்குப் போய் விட்டார்கள். அதன் பின் அன்னையார் மட்டும் அடிக்கடி திருவண்ணுமலை வந்து ரமண முனிவரைத் தரிசித்து வந்தார். அப்படி அவர் வந்து போனதனுல் தம்முடைய புதல்வரின் உண்மை நிலை அவருக்குப் புலப்படலாயிற்று. தம்முடைய தாள் நிழலை அடையும் அன்பர்களுக்கெல்லாம் மல வாதனையை நீக்கும் வழியைக் காட்டும் பெருமாஞக இவர் விளங்குவதை உணர்ந்துகொண்டார். இவருடனே இருந்துவிடலாம் என்ற விருப்பங்கூட உண்டாயிற்று.

அந்த விருப்பம் நிறைவேறும் வகையில் அழகம்மையாரின் வாழ்க்கை நிலை மாறத் தொடங்கியது. அவரைப் பாதுகாத்துவந்த மூத்த குமாரராகிய நாகசாமி ஐயர் காலமானுர். அவருடைய கையாற் கொள்ளி பெற வேண்டும் என்ற ஆசையோடிருந்த அன்னையாருக்கு அது கிடைக்கவில்லை. ஞானப் பிரானை ஈன்ற கோயில் அல்லவா அந்தப் பிராட்டியாருடைய திருமேனி? அது எல்லோரையும் போலச் சாம்பலாவது நியாயமா?

மூத்த குமாரர் இறந்துவிடவே அவர் கைக்கொள்ளி இனி இல்லை என்ற நிலை வந்தது. அடுத்த முறை இரண்டாம் புதல்வராக உதித்த ரமணருக்கு உரியது. இனித் திருவண்ணுமலைக்கே சென்று தங்கி உயிர் விடும்போது ஞானமுனிவராக விளங்கும் அவர் கையால் இறுதிக் கடனைப் பெற வேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது. ஆகவே, திருவண்ணுமலைக்குச் சென்று அங்கே இருந்து வந்தார். 1916-ஆம் வருஷம் அழகம்மையார் திருவண்ணுமலையையே தம்முடைய இருப்பிடம் ஆக்கிக் கொண்டார். அந்தச் சூழ்நிலையிலே புகுந்தவுடன் அவரும் துறவு மனப்பான்மை பெற்ருர். துறவிகளுக்குரிய காஷாய ஆடை புனைந்தார்.

ரமணர் வாழும் இடம் 'ரமணுசிரமம்' ஆயிற்று. அன்பர்கள் அடிக்கடி வந்து சென்ருர்கள். வருகிறவர்களுக்கு உணவு சமைத்து ஊட்டும் தொண்டை அழகம்மையார் செய்துவந்தார். பல வேதாந்தப் பாடல்களை அம்மையார் பாடினுர். அவர் ஞானக் கதிர் வீசும் ரமணரின் திருமுன்பு பழுத்து நெகிழ்ந்து அன்பும் மெய்ஞ்ஞானமும் பெற்று விளங்கினுர். (வாழ்வு)

இறந்தவர்களைக் காணல்: ஒரு நாள் ஒரு சிஷ்யர் ரமண பகவானிடம், "இறந்து போனவர்களை எங்களுக்குக் காட்ட முடியுமா?" என்று கேட்டார்.

"அவர்களைக் காணவேண்டிய அவசியம் என்ன?" என்ற கேள்வி பிறந்தது.

"அவர்களோடு பழகி உறவு கொண்டாடியதால் காண வேண்டும் என்று தோன்றுகிறது."

"அப்படியானால் அவர்கள் பிறப்பதற்கு முன் எப்படி இருந்தார்கள் என்று தெரியுமா? அது தெரியாத போது அவர்கள் இறந்த பிறகு மட்டும் அவர்களைத் தெரிந்து கொள்ள முயல்வானேன்?" என்றார் முனிவர். (வாக்கு)

மனத் துறவு: ஒருவர், "முக்தியடையும் உரிமை இல்லறத்தானுக்கு உண்டா? ஆத்ம ஞானம் அடையாமல் மோட்சம் கிடைக்காதே. ஆத்மஞானத்தை அடையச் சந்நியாசம் பெறவேண்டியது அவசியமா?" என்று கேட்டார். ரமணர் அளித்த விடை வருமாறு:

நான் கிருகஸ்தன் என்று நினைத்துக்கொள்வானேன்? ஆத்ம ஞானம் அடைவதற்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. சந்நியாசியானாலும், 'நான் கிருகஸ்தன் அல்ல; நான் இப்போது சந்நியாசி' என்ற நினைவு உண்டாகும். நீ வீட்டில் இருந்தாலும் அதைத் துறந்து காட்டுக்குப் போனாலும் உன் மனம் உன்னைத் தொடரும். அகந்தையே எண்ணங்களின் மூலம். அது உடலையும் உலகத்தையும் தோற்றும்படி செய்கிறது. உண்மையை மறைக்கிறது. உன்னை இல்லறத்தான் என்று எண்ணிக் கொள்ளும்படி செய்கிறது. நீ துறவு பூண்டால், நான் கிருகஸ்தன் என்ற நினைவுக்குப் பதிலாக நான் சந்நியாசி என்ற நினைவு உள்ளத்தில் இடம் பெறுகிறது; வீட்டு நினைவுக்குப் பதிலாகக் காட்டு நினைவு வரும். எல்லாம் அகந்தையின் காரியம். காட்டுக்குப் போனதனால் அகந்தை ஒழியாது. அகந்தை ஒழிந்தால் காட்டுக்குப் போக வேண்டும் என்ற அவசியம் இல்லை. வீட்டில் இருக்கும்போது அகந்தை ஒழியாதவன், காட்டுக்குப் போவானானால் அவனுக்குப் பல கோடி எண்ணங்கள் இடைவிடாமல் தோன்றும். வீட்டில் இருந்தபோது அவன் மனம் அலைந்ததைக் காட்டிலும் அப்போது அதிகமாக அலையும். ஆகையால் இடத்தை மாற்றுவதனால் மாத்திரம் அமைதி உண்டாகாது. மனம் அமைதி பெறவேண்டும். வீடானாலும் காடானாலும் மனத்திலே துறவுப் பான்மை உண்டாக வேண்டும். காட்டுக்குப் போய் அகந்தையின் பரிணாமத்தை மாற்றலாமென்றால் அதை வீட்டிலும் செய்யலாம். காடு அதற்கு அநுகூலமானது என்று சொல்வதற்கில்லை; வீடு விரோதமானது என்பதும் உண்மையன்று. ஆதலால் இருப்பிடம் எதுவாக இருந்தாலும் மனத்தை அடக்கிச் சிதறுண்ணாமல் செய்யவேண்டும். அகத் துறவு அமைந்தவர்களுக்கு எந்த இடத்தில் இருந்தாலும் அத் துறவு நிலை கெடாது. (வாக்கு)

இல்லறச் சுகம்

"இல்லறச் சுகம் எப்போது எனக்குக் கிட்டுமோ என்று சில சமயம் ஏங்குகிறேன்" என்றான் மணமாகாத வாலிபன். அவனுடைய மணமான நண்பன், "நானுந்தான்; ஆனால், எந்நேரமும்" என்றான்.

—'தி f-ஸை'

விபத்து நேராதபடி பெற்றோர்
கவனிக்கவேண்டிய விதிகள்.

குழந்தை பத்திரம்

★

வருஷந்தோறும் எதிர்பாராத விபத்துக்குள்ளாகி மடியும் பதினைந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் கொஞ்ச நஞ்சமல்ல. இம்மாதிரி விபத்துக்களில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் வீட்டிலேயே நேர்ந்து விடுகின்றன. முக்கியமாய்ப் பெற்றோர்கள் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அவர்கள்தான் இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு ஏதாவது செய்யமுடியும். சரியானபடி நடந்துகொண்டால், பெரும்பாலான விபத்துக்கள் நேராமல் தடுத்து விடலாம். முதல் முதலில் வீட்டில் குழந்தைகள் நடமாடும் இடங்கள் தீங்கு விளைவிக்காதபடி இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ளலாம். வீட்டிலும் வெளியிலும் சாதாரணமாய் எப்படி ஆபத்துக்கள் நேரக்கூடும், அவற்றை எந்த விதம் தடுக்கலாம் என்ற விஷயங்களை இங்கே காணலாம். குழந்தை இருக்குமிடம் தீங்கு நேராத பத்திரமான இடமாயிருக்க வேண்டும் என்பது முக்கியந்தான். என்றாலும் குழந்தை சந்தோஷமாய் வளர வேண்டும் என்றால், பத்திரம் மட்டும் போதாது. ஜன்னலுக்குத் தக்க பாதுகாப்புக்கள் இருந்தாலும், கத்திகளைக் குழந்தைகள் எடுக்காதபடி பார்த்துக்கொண்டாலும் மட்டும் ஆபத்துக்கள் ஒன்றும் வராமல் தடுத்துவிட முடியாது. குழந்தைகளின் இயல்பறிந்து அவர்களைப் பழக்க வேண்டும்.

கீழே விழுந்து காயம் பட்டுக் கொள்ளாமலோ கத்தியை எடுத்துக் கையை வெட்டிக்கொள்ளாமலோ இருப்பதற்குக் குழந்தைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியது முக்கியம்தான். என்றாலும், குழந்தை தானாகவே இந்த விஷயங்களைத் தெரிந்து கொள்வதும் அவசியமாகிறது. அவர்கள் எந்தக் காரியத்தையும் நம் கண் பார்வையில் தாங்களாகவே ஜாக்கிரதையாய்ச் செய்யும்படி விடவேண்டும். மாடிப்படியில் விழாமல் ஏறுவதற்கும் கத்தரிக் கோலை எடுத்தால் கையை நறுக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தை பயம் தெளிந்து தன்னம்பிக்கையுடன் இருக்கும்படி பழக்குவது நல்லது. குழந்தை மேல்படியின் நுனியில் காலை வைத்துக் கொண்டு நிற்பதைக் கண்டால், "பார்த்து இறங்கு. விழுந்துவிடப் போகிறாய்" என்று கத்தாமல் இருப்பது கஷ்டந்தான். ஆயினும் அநாவசியமாய்ப் பயப்படுவதும் குழந்தையின் தைரியத்தைக்

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: அக்டோபர், '52), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

குறைத்துவிடும். அளவுக்கு மிஞ்சிக் கவலைப் படுவது பிசகு. ஜாக்கிரதையாயிருக்கக் கற்றுக் கொடுப்பதற்குப் பதிலாய்க் குழந்தைக்குப் பயத்தைக் கற்பித்து விடக் கூடாது.

கீழே விழுவதோ அடிபட்டுக் கொள்வதோ போன்ற விபத்துக்கள் சில குழந்தைகளுக்கு எப்போது பார்த்தாலும் நேர்ந்து கொண்டிருக்கும். இந்தக் குழந்தைகள் சந்தோஷமில்லாமல் சோர்ந்த வண்ணமாய் இருக்கும். இது டாக்டர்கள் கவனிக்க வேண்டிய விஷயமென்று கருதுகிறார்கள். கீழே விழுவது, காயம்பட்டுக்கொள்வது போல் ஏதாவது விபத்து அடிக்கடி நம் குழந்தைக்கு நேர்ந்து கொண்டே இருந்தால், டாக்டரிடம் அதைப்பற்றிக் கூறி ஆலோசிக்க வேண்டும். எதனால் உடம்புக்கு வருகிறது என்பதைக் கவனித்து ஜாக்கிரதையாக இருப்பது போலவே, இதற்கும் மனக்கோளாறு காரணமா, அல்லது உடம்புக்கோளாறு காரணமா என்பதைக் கண்டுபிடித்து அதைச் சரிப்படுத்தவேண்டும்.

சின்னஞ் சிறு பருவத்தில்

கைக்குழந்தையாயிருப்பதிலிருந்து நன்றாய் ஓடியாடி விளையாடக்கூடிய வயது வரையிலும் குழந்தைகளுக்கு ஒன்றும் நேராமல், நாம் பாதுகாப்பது அவசியம். சாதாரணமாய் என்ன என்ன விபத்துக்கள் நேரக்கூடும், முன் ஜாக்கிரதையோடு அவற்றை எப்படித் தடுத்துச் சமாளிக்கலாம் என்ற விவரங்களைக் கீழே தருகிறோம்:

9 மாதம் வரை:

1. உட்கார்ந்துகொண்டிருக்கும் குழந்தை திடீரென்று தலை குப்புற விழுந்துவிடும். ஆகையால், குழந்தையைப் பெஞ்சியிலோ கட்டிலிலோ தனியே உட்கார வைத்துவிட்டு நாம் அப்புறம் போகக்கூடாது. குழந்தை படுத்துக் கொள்ளும் சிறு கட்டிலின் இரண்டு பக்கங்களையும் ஒருபோதும் கீழே இறக்காமல் தூக்கியே வைக்க வேண்டும். குழந்தை தலையை நுழைத்துக்கொள்ளாதபடி சட்டங்கள் நெருக்கமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

2. எந்தச் சாமானையாவது தன் கையில் எடுத்தால் அது விழாமல் சமாளிக்கக் குழந்தைக்குத் தெரியாது. அதனால் சாமானைக் கை கால்களில் குழந்தை போட்டுக் கொள்ளும்; அல்லது கொட்டிக் கொள்ளும். இப்படி நேராமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

3. குளிப்பாட்டும்போது குழந்தையைத் தனியே ஸ்நானத் தொட்டியில் விட்டுச் செல்லக்கூடாது. ஜலத்தில் அமிழ்ந்து ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிடும். வெந்நீர் சரியான சூடாயிருக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

4. குழந்தை எதிலும் வாயை வைத்துக் கடிக்குமாதலால் ஸேஃப்டி-பின் போன்ற சாமான்களைக் குழந்தையின் கைக்குக் கிட்டாமல் எட்ட வைக்க வேண்டும். வீட்டில் 'ரிப்பேர்' நடந்துகொண்

டிருந்தால் வர்ணம், வார்னீஷ் இவைகளில் குழந்தை வாயை வைத்துவிடாதபடி ஜாக்கிரதை யாய் இருக்கவேண்டும்.

ஒரு வயதில்:

1. குழந்தை தட்டித் தடுமாறி நடந்து போய் எதையும் எடுக்கும் வயது இது. கையில் எடுத்தால் தீங்கு விளையக்கூடிய சாமானைக் குழந்தை எடுத்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. குழந்தை இஷ்டம் போல் போகட்டும் என்று விடவேண்டும். ஆனால் கீழே விழாதபடி மெத்தைப் படி மேலும், கீழும் கதவு அமைத்துச் சார்த்தி வைப்பது நல்லது.

3. குழந்தை எதைக் கண்டாலும் வாயில் போட்டுக்கொண்டுவிடுமாதலால், மருந்துகள், விஷ மருந்துப் புட்டிகள் இவைகளை அதன் கைக்கு எட்டாமல் வைக்கவேண்டும். ஊசி, பித்தான், காசு போன்றவைகளை அப்புறப்படுத்திவிட வேண்டும்.

4. மேஜை மீதிருக்கும் துணி கீழே தொங்கும்படி விடக்கூடாது. அதன்மேல் என்ன இருக்கிறது என்று பார்க்கும் ஆவலில், குழந்தை துணியைப் பிடித்து இழுத்துவிடும். சுடச் சுடக் காபியோ டீயோ மேஜைமேல் இருந்தால் குழந்தை மீது கொட்டிவிடும்.

இரண்டு வயதில்:

1. குழந்தைக்குக் கதவைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் தெரிந்துவிடும். தனியே உள்ளே போய்க் கதவைச் சார்த்திக்கொண்டு பிறகு திறக்கத் தெரியாவிட்டால் ஆபத்து. அறைக் கதவையும் தெருக் கதவையும் மூடிப் பூட்டிவிடுங்கள்.

2. ஜன்னலின் மேலேறிக் குழந்தை கீழே விழுந்துவிடும். ஜன்னலிலிருந்து விழாதபடி பாது காப்பு அமைக்கவேண்டும். மோட்டார்க் கதவையும் பூட்டியே வைக்கவேண்டும்.

3. தண்ணீரைக் கண்டால் அதில் அளைய வேண்டும் என்று குழந்தைக்குத் தோன்றும். குளம் குட்டைக்கு அருகில் குழந்தையைத் தனியே விடலாகாது.

4. கண்ணாடிபோல் உடைந்து சிதறும் பொம்மைகளைக் குழந்தையின் கையில் கொடுக்கக் கூடாது. கத்தி, நெருப்புப்பெட்டி, மின்சாரக் கருவி போன்ற சாமான்களை அதன் கைக்கு எட்டாதபடி வைக்க வேண்டும்.

3 வயதில்:

1. குழந்தை மாடிப்படிமீது ஏறி இறங்கியவண்ணமாய் இருக்கும். இரண்டு பக்கத்திலும் கைபிடிச் சுவர் நன்றாய் இருக்கவேண்டும். படிகளில் விளையாட்டுச் சாமான்கள் எவையும் இல்லாதிருப்பது நலம். படி மிக வழுவழுப்பாகவோ கிழிந்த நார்ப்பாய் விரித்ததாகவோ இருத்தலாகாது.

2. குழந்தை மற்றச் சிறு குழந்தைகளோடு விளையாடும். அது வைத்துக்கொண்டிருக்கும் ரெயில், எஞ்சின் போன்ற விளையாட்டுக் கருவிகளில் ஆணியோ, கம்பியோ கிளம்பிக் குத்தும்படி இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

3. இந்த வயதில் குழந்தைக்கே சிறிது பயம் தெரிந்திருக்கும். வழியில் ஏதாவது சாமான் கிடந்தால் அதன்மீது தடுக்கி விழுந்து விடுவோம் என்று அதுவே ஜாக்கிரதையாக இருக்கும். ஆயினும் அடுப்பின் அருகே அது போகாமலோ, கதவின் இடுக்கில் அதன் கை அகப்

பட்டுக்கொள்ளாமலோ பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. விஷமருந்துப் புட்டிகளை அதன் கைக்கு எட்டாத இடத்தில் வைக்கவேண்டும். வீட்டில் கைத் துப்பாக்கி இருந்தால், அதில் மருந்து போட்டுக் கெட்டித்து வைக்காமல் இருப்பதுடன் குழந்தை கண்ணில் படாமல் உள்ளே ஜாக்கிரதையாகப் பூட்டி வைக்கவேண்டும்.

4 வயதில்:

1. குழந்தை மூன்று சக்கர ஸைக்கிள் வண்டியில் ஏறிவிடத் தெரிந்ததாக இருக்கும். ஓரமாக இருக்கும் நடைப் பாதையில் ஸைக்கிளை விட அதற்குக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

2. குழந்தை பந்தை எறிந்து விளையாடத் தொடங்கும். அப்படி விளையாடுவதற்கு விளையாட்டு மைதானமாக இருந்தால் கவலை இல்லை. பந்தை எறிந்துவிட்டு அதைப் பிடிப்பதற்காகத் தெருவில் குழந்தை பாய்ந்து ஓடிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

3. குழந்தை மரமேறி விளையாடினால், கால்களை நன்றாய் ஊன்றிக் கொண்டு கையினால் அழுத்தமாய்ப் பற்றிக்கொள்வதற்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். போட்டிருக்கும் சட்டைத் துணிகளினால் தொந்தரவில்லாமல் இருக்கிறதா என்பதையும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

4. சிறு கை ரம்பத்தை வைத்துக்கொண்டு மரத் துண்டுகளை அறுக்கக் குழந்தை கற்றுக்கொள்ள முடியும். மற்றக் கருவிகளையும் பத்திரமாய் உபயோகிக்க அறிந்து கொள்ளும். வீட்டுக்குள்ளே பத்திரமாய் நடமாடத் தெரிந்து கொள்ளும்.

[பள்ளிக்கூடம் போகக்கூடிய வயதில் கவனிக்க வேண்டிய பத்திரமான விதிகளை அடுத்த மாத இதழில் வெளியிடுகிறோம்.]

சுலபமான வழி

ஒரு பெண்மணி தன் வீட்டுக் கொல்லையில் கறிகாய்த் தோட்டம் போட்டாள். ஆனால், விதைகள் முளைத்ததும், எது செடி, எது களை என்று தெரியவில்லை.

பழைய கறிகாய்த் தோட்டக்காரர் ஒருவரிடம் சென்றாள். "எது செடி, எது களை என்று எனக்குத் தெரியவில்லையே? அதைக் கண்டு பிடிக்க என்ன வழி?" என்று விசாரித்தாள்.

"அது ரொம்பச் சுலபம், அம்மா. எல்லாவற்றையும் பிடுங்கி எறி, எவை மறுபடியும் முளைக்கவில்லையோ அவை தான் செடி" என்றார் தோட்டக்காரர்.

— 'இல்லஸ்டிரேட்', ஆஸ்லோ.

அழகே உண்மை

டாக்டர் ஜேம்ஸ் எச். கஸின்ஸ்

★

ஆசிரியர் டோக்கியோ யூனிவர்ஸிட்டியில் பல வருஷ காலம் ஆங்கில புரொபஸராக இருந்தவர். கலை இலக்கணத்தை நன்கு அறிந்த நிபுணர். பரந்த மனோபாவம் உடையவர். அருமையான ஆங்கிலக் கவிதைகள் எழுதியிருக்கிறார். இப்போது இந்தியாவையே தாயகமாகக் கொண்டு வாழ்கிறார். ஹிந்து மதக்கொள்கையில் ஈடுபட்டு ஜயராம் கஸின்ஸ் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்.

அழகு என்பது என்ன? அது புலனுக்கு எட்டாத ஒரு கற்பனை என்பது கீதாசிரியன், ப்ளேட்டோ இருவரும் கூறும் லட்சிய ரீதியான இலக்கணம். மனித மனம் கோடித்துக் கொண்ட ஒரு மயக்கமே அது என்பது ஸாக்ரடீஸ், ஜான் மாஸ்பீல்டு போன்றவர்கள் சொல்லும் பிரத்தியட்ச ரீதியான இலக்கணம்.

இயற்கைச் சக்திகளும் நியதிகளும் உருக்கொண்ட விளைவுகளே சகல வஸ்துக்களும் என்ற லட்சிய ரீதியான வாதந்தான் அறிவாராய்ச்சிக்கு ஒத்ததாக இருக்கிறது. ஒவ்வொரு வஸ்துவும் தன்னிலே தானே பரிபூர்ணமானது என்ற பிரத்தியட்ச ரீதியான வாதம் சரி என்று தோன்றவில்லை. வேறு விஷயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், உண்மை இந்த இரண்டு வாதங்களுக்கும் நடுவிலே இருக்கலாம். கலை சம்பந்தப்பட்ட மட்டில், முற்றும் லட்சிய வாதத்திலேயே உண்மை அடங்கி இருக்கிறது.

கலையில் வெளியாகும் உண்மை, புலன்களுக்கு எட்டாத எங்கிருந்தோ வருகிறது; அதற்கு நிமித்த மாத்திரமாக உதவுகிறது மனிதனின் பிரக்ஞை. கலையின் சிருஷ்டிக்கு உபயோகமாகும் பொருள்கள், அந்தப் பொருள்களைக் கொண்டு நிர்மாணம் செய்வதற்குத் தேவைப்படும் பிரத்தியேக முறை இவைகளின் மூலம் அந்த உண்மை வெளியாகிறது. கிறிஸ்துவுக்குப் பிந்திய மூன்றாவது நூற்றாண்டில் வாழ்ந்த ப்ளாட்டினஸ் என்பவர் இந்த

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்; நவம்பர், '52), சென்னை.

அபிப்பிராயத்தை வெளியிட்டார். 18-ஆம் நூற்றூண்டிலும் 19-ஆம் நூற்றூண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்த ஜெர்மன் தத்துவதர்சிகள் இதையே இன்னும் விரிவாக விளக்கினுர்கள்.

அழகே கலைகளைத் தூண்டி விடுகிறதா? அல்லது கலைகளே அழகைப் படைக்கின்றனவா? இது அந்த அந்தக் கலைஞனின் மனேபாவத்தைப் பொறுத்த விஷயம். உணர்ச்சி மிகுந்த கலைஞன், அழகைப்பற்றிச் சிந்திப்பதில்லை; அழகை உணர்ந்து விடுகிருன். ஆகவே அழகுதான் தன் கலைக்குத் தூண்டுகோல் என்று அவன் நினைக்கிருன். கருத்துக்களில் திளைக்கும் கவிஞரைப் போன்ற கலைஞன், தன் பிரக்ஞைக்குப் புறம்பான எங்கிருந்தோ அழகான கருத்துக்கள் வந்து சேர்வதாக எண்ணுகிருன். ஆகவே, புலனுக்கு எட்டாத அருளாலேயே கலை சிருஷ்டியாவதாக அவன் மதிக்கிருன்.

இதெல்லாம் போகட்டும். சிருஷ்டியான கலைக்கு அழகு கொடுக்கும் பண்புகள் எவை என்பதை நாம் ஆராயவேண்டும். கலையிலே உயிர்த் துடிப்பும் உருவ அழகும் இருக்கவேண்டும். இந்த இரண்டும் கலைக்கு அடிப்படையான லட்சணங்கள். ஒருவன் தன் வாழ்க்கையிலே தன்னைச் சுற்றிலும் நிகழும் நிகழ்ச்சிகள், தன் மனத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் ஆகிய இரண்டினுலும் உணர்ச்சி வசப்படலாம். ஆனுல், இது கலை நுட்பம் அல்ல. இதனுல் அவன் குணத்தில் வேண்டுமானுல் பக்குவம் ஏற்படக்கூடும். வெளி உலகத்தில் அழகுக் குறிகளைக் காணவும் அவைகளைக் கொண்டு கலையைச் சிருஷ்டிக்கவும், நல்ல ஆராய்ச்சியும் பயிற்சியும் வேண்டும். இதை இன்று பெரும்பாலோர் உணரவில்லை.

அழகுக் குறிகள் எவை? 'டிஸைன்' (திட்டம்) என்பதை முக்கியமான குறியாகச் சொல்லுவார்கள். இது அவ்வளவு பொருத்தம் அல்ல. என்னைக் கேட்டால், இதற்குப் பதிலாக 'ஆர்டர்' (ஒழுங்கு) என்பதையே முக்கியமான அழகுக் குறி என்று சொல்லுவேன். கலையின் சிருஷ்டியில் எல்லாப் பகுதிகளும் ஒன்ருேடொன்று பொருந்தியிருக்கும் பொருத்தத்தைக் குறிப்பது இந்தச் சொல். கவிதை, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற சூட்சும மான கலைகளுக்கு மட்டும் அல்ல; சிற்பம், ஓவியம் போன்ற ஸ்தூல மான கலைகளுக்கும் இது பொருந்தும். கலையில் இணைந்து ஒன்ருகும் பற்பல பகுதிகளிலும் ஒலி, சொல், கோடு, வர்ணம், அணி, இழை முதலிய அம்சங்கள் இசைபடப் பதியவேண்டும்.

உண்மை, கலை இரண்டுக்கும் உள்ள சம்பந்தத்தை இனிக் கவனிப்போம். சமயம் அல்லது விஞ்ஞானம் சம்பந்தமான ஒரு தத்துவத்தை விளக்குவதாகக் கலை அமையலாம். ஆனுல் அப்படித்தான் அது அமையவேண்டும் என்று நாம் சொல்ல முடியாது. இயற்கையைப் பிரதிபலிப்பதே கலையில் காணும் உண்மை என்று எல்லாரும் ஒப்புக்கொள்கிருர்கள். இயற்கை என்பது புற நிகழ்ச்சி மட்டும் அல்ல; அக நிகழ்ச்சியுந்தான். புற இயற்கையில் தோன்றும் உண்மையைவிட, கலைஞன் தன் அக இயற்கையில் காணும் உண்மைதான் கலையின் சிருஷ்

டிக்கு அதிக முக்கியமாகும். கலைஞர்களின் அக இயற்கையிலே தோன்றும் உண்மைக்கும் சமயத்துக்கும் நேச ஒற்றுமை ஏற்படும் காலங்களிலெல்லாந்தான் மனித சரித்திரத்திலேயே கலை, சமயம் இரண்டும் செழித்தோங்கி யிருக்கின்றன. சமய லட்சியம் உடையவர்கள், கலைச் சுவையோடு தங்கள் உணர்ச்சியை வெளியிடும் மனோ பாவம் அடைவது என்றுமே இயல்பாக இருக்கிறது. ஆகவே, கலையில் வீழ்ச்சி ஏற்படும்போதெல்லாம், சமயமும் நலிவடைந்து விடுகிறது.

வாழ்க்கையில் மனிதனின் புலன்களால் காணும் உண்மையை அப்படியே பிரதிபலிப்பதும் கலையில் அவசியந்தான். ஆனால், இதற்கு இரண்டாவது ஸ்தானமே அளிக்க வேண்டும். கலைஞனின் அக இயற்கையிலே உண்மை தோன்றுதபோதுதான், வாழ்க்கையில் புலன்களால் காணும் உண்மைக்கு அவனுடைய கலையில் பங்கம் நேர்கிறது.

பொருள்களின் இயற்கையான தன்மையை உள்ளது உள்ளபடி கலையில் பிரதிபலிப்பது மூன்றாவது அவசியம். சிற்பம் போன்ற கலைகளில், பொருள்களை உள்ளபடி பிரதிபலிப்பது முதன்மையான அவசியமாயிற்றே என்று தோன்றக்கூடும். அந்தக் கலைகளில்கூட, பொருள்களின் அசல் உருவத்தைத் தான் அப்படியே கொண்டு வருகிறார்கள்; தோற்றத்தை அல்ல. இலக்கியம், நாடகம் முதலிய கலைகளிலோ, இயற்கையை அப்படியே பிரதிபலிப்பது கிடையாது. வாழ்க்கையில் கண்ட எந்த மனிதரையோ, சம்பவத்தையோ தத்ரூபமாய் அவைகளில் சித்திரிப்பதில்லை. பற்பல உதாரணங்களை மனத்தில் கொண்டே, பாத்திரங்களையும் சம்பவங்களையும் இலக்கிய ஆசிரியர்கள் சிருஷ்டிக்கிறார்கள்.

கலைஞனின் அக உண்மையும் இயற்கையில் காணும் புற உண்மையும் கலையிலே இசைந்துவிடும்போது, கலைப்பொருளிலே நிச்சயம் அழகு ஏற்பட்டு விடுகிறது. கீட்ஸ் என்ற கவிஞரின் பிரசித்தமான பின்கண்ட வரிகளில், கலையின் சூட்சுமம்பற்றிய இந்த உண்மையைத்தான் காணுகிறோம்:

> **“அழகே உண்மை; உண்மையே அழகு. உலகில் நீ அறிந்ததெல்லாம்—நீ அறிய வேண்டியதெல்லாம்—இவ்வளவே.”**

அழகு, உண்மை இரண்டையும், அவை இரண்டும் அடிப்படையில் ஒன்றே என்ற தத்துவத்தையும் அறிந்துகொள்ள நேரிடையான வழி, பிரபஞ்சத்தின் சிருஷ்டிச் செயல்களிலே பங்கெடுத்துக் கொள்ளுவதுதான். அப்படிப் பங்கெடுத்துக்கொள்ளும் காரியங்களில் மிகச் சிறந்த ஒன்று, கலைப் பொருள்களைச் சிருஷ்டிப்பதே.

பிடிக்காத வானொலி

பிடிக்காத ரேடியோ பாட்டு, பேச்சுக்கள் ஒரு நாளும் நிற்க மாட்டா. ரேடியோ கேட்பவர், ‘படக்’ என்று தம் ரேடியோவை நிறுத்தும் சத்தம் ஒலிபரப்பு நிலையத்தாருக்குக் கேட்க ஏதாவது வழி கண்டு பிடித்தால்தான் ஒரு வேளை அவை நிற்கக்கூடும்.

—இர்வின் ஹாஃப்மான்

சித்திரச் சிகிச்சை

★

'இதென்ன, நம்பக் கூடியதாக இல்லையே? சித்திரம் எழுதினால் எப்படி அது சிகிச்சையாகும்?' என்றுதானே கேட்கிறீர்கள். இன்றைய சிகிச்சை முறையில் இதுதான் மிகவும் முக்கியமாகும் என்பதை லண்டன் 'எவ்வரிபடீஸ் வீக்லி' என்ற பத்திரிகையில் ஜஃப்ரீ ஹார்ம்ஸ்வொர்த் என்பவர் விவரித்திருக்கிறார். அதை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை. எதிரில் இருப்பது ஓவியர் ஹைமன் ஸேகலின் உருவப் படம்.

இங்கிலாந்தின் மேற்குப் பகுதியில் ஓர் ஓவியர் இருக்கிறார். அவர் பெயர் ஹைமன் ஸேகல். அவர் ஒரு யூதர். 'ஹைமன்' என்றால் ஹீப்ரு மொழியில் உயிர் என்று அர்த்தம். வயது ஏழு இருக்கும்போது அவர் கண் பார்வை போய்விட்டது. இரண்டு வருஷம் இந்த நிலையில் இருந்தார். அப்போது, 'கண் பார்வை திரும்பி வந்தால் நோயாளிகளுக்கு உதவியாக இருக்கப்போகிறேன்' என்று சபதம் செய்துகொண்டார். $12\frac{1}{2}$ வயது இருக்கும்போது, செண்ட் மார்ட்டின் சித்திரப் பாடசாலையில் படிக்க அவருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. இப்படிச் சில வருஷங் கழிந்ததும் 21-ஆம் வயதில் சில வர்த்தகக் கம்பெனிகளுக்கு விளம்பரச் சித்திரங்கள் எழுதிக் கொடுத்துப் பெயர் எடுக்கலானார். 1930-இல் லண்டன் பாதாள ரெயில்வேயில் எங்கே பார்த்தாலும் பி. பி-எதில், ஷெல்-மெக்ஸ், ரோல்ஸ்-ராய்ஸ், 'பீர்தான் சிறந்தது' என்ற விளம்பரச் சித்திரங்கள் பிரமாதப்பட்டன. இவை ஸேகல் எழுதியவைதான். சென்ற மகாயுத்தத்தின்போது ஸேகல் ராயல் எஞ்சினீர்கள் அடங்கிய ராணுவப்பகுதியில் சேர்ந்து கிழக்கு ஆப்பிரிக்காவில் கொஞ்ச நாள் இருந்தார். அப்போது அங்கிருந்த சுதேசி மக்களைப்பற்றி நன்றாகக் கவனித்துப் பல விஷயங்களை அறிந்துகொண்டார். அந்த மக்களின் சுகதுக்கங்கள், அருமை பெருமைகளை உள்ளூற உணர்ந்து பல அபூர்வமான சித்திரங்களை வரைந்தார். நிறவெறியை எதிர்த்து அவர் செய்த பிரசாரங்களில் இவை மிகவும் பயன்பட்டன.

யுத்தம் முடிந்ததும் வர்த்தகக் கம்பெனிகளுக்குப் படம் எழுதுவதை விட்டு, கார்ன்வால் பிர

தேசத்தில் செண்ட் ஐவ்ஸ் என்ற ஊரில் குடியேறினர். அங்கே பல இயற்கைக் காட்சிகளையும், உருவப் படங்கள் முதலியவற்றையும் எழுதி வந்தார். இதோடு சிற்பவேலையிலும் ஈடுபட்டு அதிலும் நல்ல பெயர் எடுத்தார். அப்போது கம்போர்ன் என்ற இடத்திலுள்ள ஓர் ஆரோக்கிய நிலையத்தில் இருந்த நோயாளிகள் அவருடைய திறமையைப் பாராட்டி, அங்கே வந்து போகும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அது முதல் சித்திரத்தினல் நோய்களைப் போக்க முடியும் என்று கண்டுகொண்டு, இந்தத் துறையில் தீவிரமாக ஈடுபடலானர்.

பத்து வருஷத்துக்கு முன்னல் இப்படிச் சொன்னலேகூட வைத்தியர்கள் இது என்ன பைத்தியக்காரத்தனம் என்றுதான் கேலி செய்திருப்பார்கள். விஷயம் புரியாதவர்கள், 'இதென்ன! பில்லி, சூன்ய வேலையாக இருக்கிறதே' என்று எண்ணலாம். ஆனல் ஆட்ரியன் ஹில் என்ற பிரபல ஓவியர் சித்திரத்தினல் நோயைத் தீர்ப்பது சாத்தியம் என்று நிரூபித்துக் காட்டினர்.

ஒரு சமயம் ஆட்ரியனுக்கு ஏதோ சின்ன ஆபரேஷன் ஒன்று நடந்தது. அப்போது அவர் பக்கவாட்டிலேயே படுத்திருக்க வேண்டியிருந்தது. படுக்கையருகில் ஒரு பூந்தொட்டி வைத்திருந்தார்கள். அதைத் தவிர வேறொன்றும் கண்ணெதிரில் தட்டுப் படாததால் இந்த நிலையில் அதிலுள்ள பூஞ்செடியையும் மலர்களையுமே பார்த்துக்கொண்டிக்க வேண்டியிருந்தது. வைத்தியர்கள் உட்காரலாம் என்று சொன்னதும் அவர் அந்தச் செடியை அப்படியே வரைவது என்று தீர்மானித்தார். இது நடந்தது 1938-இல். அவர் எழுந்து உட்கார்ந்து படம் வரை

கிராமத்தை விழுங்கும் நகரம். இது ஒரு பெண் நோயாளி எழுதியது.

வதற்குள் அந்தப் பூஞ்செடியிலிருந்த மலர்கள் நிறம் மாறி வாடி உலர்ந்து போய்விட்டன. ஆயினும், அந்தக் காட்சி மனத்தில் பதிந்துவிடவே, அப்படியே மலரும் செடியுமாக வர்ணத்தில் தீட்டி விட்டார்.

மூன்று வருஷங் கழித்து, அவர் அந்த ஆரோக்கிய நிலையத்துக்குச் சிகிச்சை செய்துகொள்ள அன்றூடம் போய் வரவேண்டியிருந்தது. அப்போது ராணுவத்தைச் சேர்ந்த சில நோயாளிகளுக்குப் பொழுது போவதற்காக அவரைச் சித்திரம் வரையக் கற்றுக் கொடுக்கும்படி அதிகாரிகள் கேட்டுக் கொண்டார்கள்.

நோயாளிகளில் சிலர் பயங்கரமான யுத்தக் காட்சிகளையும், இன்னும் சிலர் கற்பனை ஆடம்பர அழகிகளையும் உற்சாகமாக வரைந்து காட்டினுர்கள். படம் நன்ருக எழுத வராவிட்டாலும் பொதுவாக இந்த அழகிகளின் படங்கள் ஒரு விதக் காம உணர்ச்சியைத் தூண்டும்படி அமைந்திருந்தன. ஆகாய விமானங்களை எழுதியவர்கள் தத்ரூபமாக வரைந்தாலும் கண்டபடி வர்ணந்தீட்டிப் படத்தைக் கெடுத்து விட்டார்கள்.

அவர்களுக்குப் படம் எழுதக் கூடிய திறமை இருந்தது. ஆனுலும், தாம் நிதானமாக ஆராய்ந்து முடிவு செய்வதற்குள் அந்த நோயாளிகள் உடம்பு தேர்ந்து எங்கெங்கோ புறப்பட்டுப் போய் விடுவார்களே என்றுதான் ஆட்ரியன் தயங்கினுர். ஒரு நாள் அங்கே, ரேடியோ மூலம் 'சித்திர சிகிச்சை' என்ற விஷயத்தைப்பற்றிப் பேசுவதென்று தீர்மானித்தார். 1942 ஜூலை மாதம் ஒரு நாள் பிற்பகல், "சித்திரம் நோயைக் குணப்படுத்தும் என்பதை நீங்கள் உள்ளூற நம்பவேண்டும். இந்த நம்பிக்கை ஏற்பட்டால் உண்மையாகவே நோய் குணமாகும்" என்ருர். சில பேர் இதை ஊன்றிக் கேட்டார்கள். இன்னும் சிலருக்கு இதில் நம்பிக்கை ஏற்படவில்லை. இருந்தாலும் சில பேர், 'நம் சொந்த விஷயத்தில் இது பலன் அளிக்கிறதா என்று பார்ப்போமே' என்று தீர்மானித்தார்கள். கைக்கு வந்தபடி படம் வரைய ஆரம்பித்தார்கள்.

விரைவில் பக்கத்தில் எழுதுபவனைப் பார்த்து, நாமும் எழுதலாம் என்று ஒருவன் ஏதோ சித்திரம் வரைய இன்னெருவனும் வரைய, இப்படி எல்லாருமே சித்திரம் வரைய ஆரம்பித்து விட்டார்கள். சிலர் அந்த அந்த அறையையும் அறையில் இருந்த பொருள்களையும் அப்படியே எழுதிப் பார்த்தார்கள். சித்திரத்தின் தராதரம் மாறுபட்டாலும், போர்வை படுக்கையெல்லாம் வர்ணம் சிந்தினுலும், ஒரு விஷயத்தில் நன்மை விளைந்தது. இப்படிப் பொழுதே போகாமல் படுத்துக் கிடக்கிருேமே என்று எண்ணுமல் நோயாளிகள் எல்லாரும் உற்சாகத்தோடு இருந்தார்கள். வைத்தியர்களும் நர்ஸுகளும் எதிர்பார்ப்பது அதுதானே?

ஆட்ரியன் எழுதியதைப் படித்த போது, ஸேகலுக்குத் தாம் சிறு வயதில் கண் பார்வை இழந்து கிடந்த சமயத்தில் உலகமே வெறிச்சென்று இருந்தது நினைவுக்கு வந்தது. ஆகவே, ஸேகல் நோயாளிகளின் மனக்குறையைத் தீர்க்க முனைந்தார். படம் எழுதக் கற்றுக் கொடுப்பதைத் தவிர இன்னும்

சில விஷயங்களிலும் அநுபவப்பட வேண்டும் என்று தெரிந்து கொண்டார்.

நோயாளியைப் பள்ளிக்கூட மாணவனைப்போல் நடத்தினல் அவனுக்கு எரிச்சல்தான் வரும். ஆகவே, இந்த விஷயத்தில் சிறந்த பலன் காணவேண்டுமானல் நோயாளிகளுடைய மனப்போக்கை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். 'நாம் கலைஞரானதால் தனிப்பிறவி. ஆகவே, மற்றவர்களைவிட உயர்வு' என்ற மனேபாவம் கூடவே கூடாது.

சித்திரம் வரைவதால் மனசுக்குத் திருப்தி இருக்கிறது என்று நோயாளிகளுக்குப் பட்டுவிட்டால் போதும்; அப்புறம் ஒரு கவலையுமில்லை. நேரம் போவதே தெரியாது. நடுவே யாராவது டீயோ காபியோ கொண்டு வந்து கொடுத்தால், "இதென்னடா சனியன், குறுக்கே வந்தது!" என்றுகூட அவர்களுக்குத் தோன்றும்.

"இந்த உற்சாகம் அப்படியே நீடித்திருக்கும்படி பார்த்துகொள்ள வேண்டும். நன்ருகப் பூத்துவரும் என்று எண்ணும் ஒரு மலர் திடீரென்று வாடிப்போனலும் போகலாம்; அப்போது அந்த மலர்ச் செடியை வேறு தொட்டியில் வைத்து வளர்க்கிருேம். ஒரு விஷயத்தையே எழுதி வந்தால் நோயாளிக்குச் சலிப்பேற்படலாம்; ஆகவே, வேருென்றை எழுதச் சொல்லலாம் அல்லது வேறு ஏதாவது பொழுது போக்கில் ஈடுபடும்படி சொல்லலாம்" என்கிருர் ஸேகல்.

ஆரம்பத்தில் நோயாளியிடம் ஒரு காகிதத்தில் இரண்டொரு கோடு வரைந்து கொடுத்து விடுவார் ஸேகல்; அதை அவனுக்குத் தோன்றியபடி எழுதி முடிக்க வேண்டும். முடிவில் இப்படி இருக்கும் என்று தெரியாதபடி கை மாறி மாறிப் பல பேர் சேர்ந்து படம் எழுதும்போது, நோயாளிகள் பாடு ஒரே குதூகலமாக இருக்கும். நீடித்த நோயாக இருந்து இடைஞ்சல் எதுவும் இராதபட்சத்தில், சில பேர் கற்பனை செறிய அபாரமாகப் படம் வரைந்துவிடுவார்கள்.

ஆனல் உடம்பு தேறத் தேற இப்படிக் கூர்ந்து கவனித்து எழுதும் திறமை குன்றி விடுகிறது. உடம்பு குணமானதும் யாரும் சித்திரம் எழுதுவதில் அதிகமாக ஈடுபட மாட்டார்கள். இதனல் ஓவியர் கற்றுக்கொடுத்தும் பிரயோஜனமில்லையே என்று எண்ணிவிடக் கூடாது. வைத்தியர்களுக்குத் துணையாக இருந்து நோயாளியைச் சொஸ்தமாக்க வேண்டுமென்பது தானே முக்கியக் கருத்து?

முன் சொன்ன ஆரோக்கிய நிலையத்தில் சுமார் 150 நோயாளிகள் எப்போதும் இருப்பார்கள். ஒவ்வொருவரிடமும் போய் ஸேகல் விசாரிக்கிருர். சில பேர் இந்த மாதிரி பொழுதுபோக்கில் கலந்து கொள்ளாமல் சும்மா இருந்தால் அவர்களிடம் நயமாகப் பேசி அவர்களையும் வழிக்குக் கொண்டு வந்து விடுகிருர்.

லாரியை ஓட்டிவந்த ஓர் ஆசாமிக்கு உற்சாகமூண்டுவிடவே அவன் பலவித லாரிகளைப் பல காட்சிகளுக்கிடையே அமைத்து எழுதிக் காட்டினன். பதினெரு வருஷத்துக்கு முன் விமானக்குண்டு விழுந்து பாழான தன் வீட்டின் ஒன்பது அறைகளையும் அவற்றிலுள்ள சாமான்களையும் ஒரு வாலிபன் அப்படியே எழுதினன். பிறகு தன் வீட்டின் முன் பாகத்தையும்

பின் பாகத்தையும் படம் பிடித்தது போல் ஒரு செங்கல் விடாமல் எழுதிக் காட்டினுன். யோசிக்க யோசிக்க அவனுக்குப் பழைய விஷயங்கள் அவ்வளவு தெளிவாக நினைவுக்கு வந்தன.

ஆட்ரியன் ஹில் என்பவர் பிரபல ஓவியர்கள் எழுதிய சித்திரங்கள் அடங்கிய தபால் கார்டுகளை ஆஸ்பத்திரிகளில் சேகரித்து வைக்கும்படி சொன்னுர். இதனல் நல்ல பலன் ஏற்பட்டது. ஆஸ்பத்திரிச் சுவர்களில் படமே மாட்டக்கூடாது என்று முதலில் ஒரு விதி உண்டு. ஆட்ரியன் ஹில்லின் முயற்சியால் இந்தத் தடையை நீக்கிவிட்டார்கள். இப்போது பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் இப்படி 5,000 படங்கள் இருக்கின்றன. இவைகளை அவ்வப்போது பெண் தொண்டர்கள் மூலம் பல ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பிவிடுகிருர்கள்.

ஆஸ்பத்திரி போன்ற தர்ம ஸ்தாபனம் படம் எழுதுவதற்கான வர்ணம், பிரஷ் இவைகளுக்காகப் பணம் செலவழிப்பதென்ருல் கஷ்டந்தானே? அதோடு இப்படிக் கற்றுக் கொடுக்கும் ஓவியர்களுக்கு சம்பளம் வேறு தந்தாக வேண்டும். இருந்தாலும் மொத்தத்தில் இதனல் நல்ல பலன் என்னவோ இருக்கிறது.

"கலையின் மூலம் நோயாளிகள் மன அமைதி பெறுவதால், சிகிச்சை செய்வதும் எளிதாக இருக்கும். பொழுது போகவில்லையே என்ற சலிப்பு இராது; ஏதாவது உருப்படியாகச் செய்தோம் என்ற திருப்தியும் ஏற்படும். இதுதான் முக்கியம்" என்கிருர் ஸேகல்.

இப்போது சிகிச்சை முறையில் இதுவும் ஓர் அம்சமாக விளங்குகிறது. படம் எழுதலாம் என்று வைத்தியர்கள் நோயாளிகளின் நிலைக்கு ஏற்றபடி யோசனை சொல்லுகிருர்கள். இந்த முறையில் சிகிச்சை செய்துவரும் ஆட்ரியன் ஹில், ஹைமன் ஸேகல் முதலியவர்களையும் இவர்களைப் போன்ற இன்னும் பல ஓவியர்களையும் நாம் பாராட்டவேண்டும். நூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்த ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற பிரபல ஆங்கிலப் பெண்மணி அந்தக் காலத்திலேயே இந்த உண்மையை உணர்ந்திருந்தார்: "நோயுற்றிருக்கும்போது அழகிய பொருள்களை, அதுவும் பல வர்ணம் நிரம்பிய பொருள்களைப் பார்த்து வந்தால் நோய் குணமாகும் என்பது அநேகம் பேருக்குத் தெரியாது. மனசுக்கு மட்டுமன்றி உடம்புக்கும் இவை ஆரோக்கியம் தருகின்றன" என்று அவர் சொல்லியிருக்கிருர்.

எவ்வளவு ஒற்றுமை!

ஒரு விருந்து நடந்துகொண்டிருந்தது. அதற்கு வந்திருந்த பெண்ணெருத்தி, தன் பக்கத்திலிருந்த ஒருவரைப் பார்த்து, "உமக்கு என்ன வேலை?" என்று கேட்டாள்.

"நான் ஒரு நாவலாசிரியன்" என்ருர் அவர்.

"அப்படியா! என்ன ஆச்சரியம்! நமக்குள் இருக்கும் ஓர் ஒற்றுமையைப் பார்த்தீரா? நீர் ஒரு நாவல் எழுதியிருக்கிறீர்; நான் ஒரு நாவல் படித்திருக்கிறேன்" என்ருள் பெண்.

—'தி ஸிட்னிஸென்,' க்ளஸ்டர்.

எல்லாம் மாறிய நாடு

★

மனிதர்களின் துன்பம் எல்லாம் துடைத்து, ஆனந்த வாழ்வு வாழச் செய்ய எத்தனையோ மேதாவிகள் மனோராஜ்ய சித்திரங்களைத் தந்திருக்கிறார்கள். அப்படிச் சித்திரித்தவர்களில் ஒருவர் சாமுவேல் பட்லர். அவருடைய இரண்டு அரிய நூல்களின் பொருளை இங்கே ரா. ஸ்ரீ. தேசிகன் நயம்பட விளக்குகிறார்.

சென்னிமேல் கரங்குவித்து, பெர்னார்ட் ஷா வணங்கக்கூடிய குருநாதன் யார் என்று வினவுவீரானால், சாமுவேல் பட்லர்தான் என்ற குரல் எங்கும் எழும் என்பதில் நிழலாடும் ஐயமுமில்லை. இந்த இரண்டு பேர் நூல்களையும் துருவி ஆராய்ந்து பார்த்தால், எத்தனை தூரம் சாமுவேல் பட்லரின் அடிச் சுவட்டை ஷா பின்பற்றி யிருக்கிறார் என்பது நன்கு புலனாகும். இப்ஸனும் பட்லரும் ஷாவை உருவாக்கினார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

சாமுவேல் இங்கிலாந்தில் நாட்டிங்ஹாம்ஷயரிலுள்ள பிங்காம் என்னும் இடத்துக்கு அருகே உள்ள லாங்கர் என்ற ஊரில் ஒரு பாதிரிக்குப் பிறந்தார். ஷ்ரூஸ்பெரியில் பொதுப் பள்ளிக்கூடத்தில் படித்தார். அந்தப் பள்ளிக்கூடத்துக் காட்சிகள் பல 'எல்லாம் ஒரு குலைக் காய்தான்' (The way of all flesh) என்ற புகழ் பெற்ற புத்தகத்தில் அழியாச் சித்திரங்களாய் அலர்ந்திருக்கின்றன. பிறகு கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் பட்லர் படித்தார். கணிதத்தில் வல்லவராயிருந்தாலும் கிரீக், லத்தீன் இந்த இரண்டு பாஷைகளையும் தமக்குப் பாடங்களாக வகுத்துக்கொண்டு இவைகளில் உயர்ந்த பட்டம் பெற்றார். இந்தத் துறையில் இவர் அடைந்த பழுத்த ஞானம் இவருக்குப் பயனை அளித்தது. ஹோமர் எழுதிய 'இலியத்', 'ஆடிசி' என்ற பெருங்காப்பியங்களை ஆங்கிலத்தில் வசன நடையில் மொழிபெயர்த்தார். 'ஆடிசி'யை ஒரு பெண் எழுதினாள் என்ற விசித்திரக் கருத்தை வெளியிட்டார். சங்கீதத்திலும், ஓவியத்திலும் திளைப்பார். அவைகளின் அழகுகளை அள்ளி அள்ளிப் பருகுவார்.

தமக்குத் தகுந்த தொழிலை வகுத்துக்கொள்ளுவதில், சில இன்னல்களும் இடர்ப்பாடுகளும் குறுக்கிட்டன. கேம்பிரிஜ் விட்டதும், ஒரு பாதிரியாக இவர் அமர வேண்டும் என்பது பட்லரின் தந்தை கொண்ட நோக்கம். ஆனால் பட்லருக்கோ, ஓர் ஓவியப் புலவ

னாய்த் திகழ வேண்டும் என்ற பேரார்வம். இருவருக்குமிடையே பிறந்த லட்சிய முரண்பாட்டால், நியூஸீலாந்துக்கு 1859-ஆம் ஆண்டில பட்லர் குடியேறி, அங்கே ஓர் ஆட்டுப் பண்ணை வைத்தார். நியூஸீலாந்தின் சூழ்நிலைதான் 'எர்வா'னிலும் 'மீண்டும் எர்வா'னுக்கு என்ற நூலிலும் மிக அழகுடன் சித்திரிக்கப் பெற்றிருக்கிறது.

தாம் தம் பண்ணையில் வளர்த்த 'டாக்டர்' என்ற குதிரையின் தன்மைகளையே 'மீண்டும் எர்வா'னுக்கு என்ற நூலில் சிறை செய்திருக்கிறார். 'எர்வா'னில் உள்ள மலைக் காட்சிகள் யாவும் நியூஸீலாந்திலுள்ள மலைகளை நினைவூட்டுகின்றன. 'எர்வான்', 'மீண்டும் எர்வா'னுக்கு என்ற இரண்டு நூல்களின் நயங்களையும் ஆராய்வோம்.

"மலைகளுக்கப்பாலுள்ள நாட்டுக்குப் போக வேண்டும் என்ற ஆசை என்னிடம் வளர்ந்துகொண்டே வந்தது. செபாக் என்ற முதியோனை அந்த நாட்டைப் பற்றிச் சொல்லும்படி பல முறை கேட்டேன். அவன் அதற்கு யாதொரு பதிலும் சொல்லவில்லை. அவன் பார்ப்பதற்கு அழகு வாய்ந்தவனல்ல. அழகின்மை யாவும் சேர்ந்து திரண்டு ஓர் உருவமானால் எந்தக் காட்சி அளிக்குமோ அந்தக் காட்சியை அவன் எனக்கு அளித்தான். இன்றைக்குப் போகலாம், நாளைக்குப் போகலாம் என்று கூறினானே தவிர, தக்க பதிலை அளிக்கவில்லை. பல தரம் மன்றாடிக் கேட்டதன் பேரில் என்னோடு வருவதாக ஒரு நாள் ஒப்புக்கொண்டான்.

"ஊரை விட்டுப் புறப்பட்டோம். முதல் நாள் எல்லாம் சௌகரியமாக இருந்தன. நாங்கள் இருந்த பள்ளத்தாக்கு, கடற்பரப்புக்கு மேல் இரண்டாயிரம் அடிக்கு அதிகம் இருந்தாலும், இன்பமான வெயில் அடித்துக்கொண்டிருந்தது. அங்கே உள்ள ஆற்றின் பரப்பு, சுமார் $1\frac{1}{2}$ மைல் இருக்கும். எங்கே பார்த்தாலும் கல்தான். ஆனால் அந்த ஆற்றில் திடீரென்று நீர் பெருக்கெடுத்தோடும் என்று தெரிந்துகொண்டோம். ஒரு கணவாய்க்கு வந்தோம். அது செங்குத்தாயும், குறுகியும் இருந்தது. அங்கே பாப் என்ற ஆறு மிகவும் அகலமில்லை. அது பாறைகள்மீது மோதி, பேரிடி முழக்கம் செய்தது. மூன்று வாரங்கள் மெல்லத் தேய்ந்தன. எங்கும் துருவிப் பார்த்தோம். ஒரு நாள் செபாக்கைக் காணவில்லை.

"அவனைக் கூவி அழைத்தேன். யாதொரு பதிலையுங் காணேன். சுற்றிலும் உள்ள பாறைகளே எதிரொலி கொடுத்தன. பல மலை அருவிகளைக் கடந்து சென்றேன். 'எர்வா'னின் எல்லைக்கு வந்தேன். அங்கே சில கல்சிலைகள் நின்றன. ஒரு சிலையிலிருந்து ஓர் ஓலம் எழுந்தது. எவ்வளவு மனத் தைரியம் வாய்ந்தவனும் அந்த ஓலத்தைக் கேட்டு உள்ளங் கலங்கியிருப்பான். நான் தைரியத்தைக் கைவிடாமல் மேகம் சூழ்ந்த இடத்தை விட்டுக் கீழே இறங்கினேன். செக்கர் வானத்தின் அழகை என்னவென்று சொல்வது! பலவித வர்ண ஜாலங்களின் அலகிலா விளையாட்டு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. இந்த வனப்பைப் பருகிக்கொண்டே இறுதியில் ஒரு கிராமத்துக்கு வந்து சேர்ந்தேன். அங்கே பலவித மரங்கள் காட்சி அளித்தன. கழனிகள் யாவும் நன்றாய்ப் பயி

ரிடப் பெற்றிருந்தன. ஆடுகள் மந்தை மந்தையாய் மேய்ந்துகொண்டிருந்தன. நாய்களுக்குக் குறைவில்லை. பூனைகள் அங்கே தென்படவில்லை. ஆடவர்கள் மிகவும் அழகு வாய்ந்தவர்கள். பெண்களின் நடையிலும் தோற்றத்திலும் ஒரு காம்பீரியம் இருந்தது.

"பல கிராமங்களைக் கடந்து ஒரு நகரத்தை அடைந்தேன். என்னோடு கூட வந்த ஒருவனுக்கு உடல்நலம் சரியாக இல்லை. இருமிக்கொண்டே இருந்தான். மற்றொருவன் அழகு அற்றவனாகத் தென்பட்டான். அவர்கள் முதலில் அதிகாரி முன் நின்றார்கள். அவர்கள் அந்த ஊர்ச் சிறைச்சாலைக்குப் போயிருக்க வேண்டும். பிறகு என்னை அழைத்தார்கள். உடையின்றி என்னை நிறுத்தி என் உடலைப் பரிசோதனை செய்தார்கள். என் நாக்கைப் பார்த்தார்கள். நாடியை நோக்கினார்கள். கண்களை ஆராய்ந்தார்கள். உடம்பில் நோயில்லை என்று தேர்ந்தார்கள். ஆனால் என் கடிகாரத்தைப் பார்த்தவுடன் அதை அப்புறப் படுத்திவிட்டார்கள். என்னைச் சிறையிலும் வைத்துவிட்டார்கள்."

இந்த விதமாக 'எர்வா'னில் கதை செல்லுகிறது:

'எர்வான்' (Erewhon) என்ற சொல்லைத் திருப்பிப் படித்தால் 'எங்குமில்லை' (Nowhere) என்ற பொருளைத் தரும். 'எர்வா'னில் மக்கள் உடல்நலத்தைப் பேணுகிறார்கள். அழகில்லாதவர்களை எல்லைச் சிலைகளுக்குப் பலியிடுகிறார்கள். இந்தக் காரணம் பற்றியே ஆசிரியரைச் செபாக் பின் தொடரவில்லை போல் இருக்கிறது! இங்கிலாந்தில் அந்தக் காலத்தில் அற்பத் திருட்டுத்தனத்துக்கும் மரணதண்டனை விதித்தார்கள். எல்லாம் இதற்கு மாறாக 'எர்வா'னில் நடக்கின்றன. உடல் வியாதிக்குத்தான் தண்டனையும் சிறைவாசமும். மனச்செம்மை இல்லாதவர்களுக்குத் தகுந்த அழகான இடம் தருவார்கள். பலபேர்கள் அவர்களை அன்போடு விசாரிப்பார்கள்; உபசரிப்பார்கள். மனச்செம்மை இன்மை மக்களை அநாதி காலமாகத் தொடர்ந்து வந்த வியாதியல்லவா? மனச்செம்மை இல்லாதவர்கள் வாழும் இடம் எல்லாரும் விரும்பத் தக்க இடமாயிருக்கும்.

ஒரு காலத்தில் யந்திரங்கள் மனிதனை விரட்டி அடித்துவிடும் போலக் காட்சி அளித்தன. அந்தக் காரணம்பற்றியே, 'எர்வா'னில் யந்திரங்களை மக்கள் வழங்காமல் பொருட்காட்சிச் சாலையில் வைத்துவிட்டார்கள். கைக் கடிகாரம் வைத்திருப்பதைக்கூட அந்த நாட்டில் குற்றமாகக் கருதினார்கள். இந்தச் செயலில் எத்தனை பெரிய உண்மை பொதிந்து கிடக்கிறது பாருங்கள்! மனிதன் கொலைக் கருவிகளைப் பெருக்கிக் கொண்டே போகிறான். ஆனால் முடிவை நோக்கினால், நம் மனத்தகத்தே ஒரு பேரச்சம் பாயுமென்பதில் சந்தேகமில்லை. எந்தப் பூதங்களை மனிதன் படைத்தானோ, அதே மாபெரும் பூதங்கள் அவனை விழுங்கிவிடும் போலக் கோரக் காட்சி அளிக்கின்றன. அறிவு வளர்ந்ததே ஒழிய, அதை அடக்கி ஆளும் அன்பைக் காணோம். அணுக்குண்டின் சக்தியை நோக்கினால், உண்மை நன்கு விளங்கும்.

'எர்வா'னில் மக்கள் நோயைப் பொருட்படுத்துவது போல மரணத்

தைப் பொருட்படுத்துவதில்லை. அந்த நாட்டில் பிணங்களை எரித்து விடுவார்கள். இறந்து போனவர்கள் தமக்கென்று வகுத்துக் கொண்ட புனிதமான இடங்கள் மீது சாம்பலைத் தூவுவார்கள். பெர்னார்ட் ஷாவின் மரண சாஸனத்தை இங்கே நோக்கவேண்டும்.

சிலை எழுப்பும் வழக்கம் அந்த நாட்டில் இல்லை. உயிரோடு இருக்கும்பொழுதே சிலர் தமக்குச் சிலை எழுப்பிக்கொள்ளும் பேதைமையை என்னவென்று சொல்லுவது! தமக்கே மரணச் சடங்கைச் செய்து கொள்ளும் தன்மையை அது ஒக்கும். மேலும் அதை அநாகரிகத்தின் எல்லைக்கல் என்று சாற்றிவிடலாம்.

'எர்வா'னில் சிலையும் நாட்ட மாட்டார்கள்; சரும சுலோகங்களும் வரைய மாட்டார்கள். ஒரு காலத்தில் சிலையெழுப்பும் வழக்கம் தலை விரித்தாடிற்று. நாடு முழுவதும் சிலைமயமாகிவிட்டபடியால், அந்த அநாகரிகமான பழக்கத்தை நிறுத்திவிட்டார்கள்.

மரணத்தைப்பற்றிப் பட்லர் கொண்ட கருத்து இங்கே நோக்கத் தகுந்தது. ஒருவர் மனத்திலும் நிற்காமல் இருப்பதுதான் மரணமாகும். அழியா ஆண்டவன் இருக்கும்வரையில், நமக்கும் மரணமில்லை. அவன் சிந்தையில் நாம் எப்பொழுதும் இருப்போமென்ற உண்மை இதிலிருந்து பிறக்கிறது.

பணத்தைப் பாதிரிகள் இங்கிலாந்தில் வெறுத்தார்கள். பணம் பரமபத நீள்வாசலை மூடிவிடுமாம். பட்லர் இன்னிசை பாடும் பாங்கிகளைச் (The Musical Banks) சித்திரிக்கிறார். பரமபதத்துக்கும் பணத்துக்கும் பகையில்லை, இரண்டும் தேவைதான் என்று சூரிய புத்திரன் (The Sun Child) கூறுகிறான் என்று 'மீண்டும் எர்வா'னுக்கு என்ற நூலில் பட்லர் மொழிகிறார். ஒருவன் 20,000 பவுன் சம்பாதித்திருந்தால், எத்தனை தொண்டுகள் அவன் சமூகத்துக்கு ஆற்றியிருக்க வேண்டும்! அந்தப் பணத்தை ஒரு கலைச் செல்வத்தைப் போலக் கருத வேண்டும். அந்தத் தொகைமீது யாதொரு வரியும் விதிக்கக் கூடாது. மனிதன் சமூகத்துக்குச் செய்த கைங்கரியத்துக்குப் பணம் ஒரு ஞாபகச் சிலையாகும்; உரை கல்லாய்த் திகழும்.

வறுமையை அந்த நாட்டில் ஒரு பெருங் குற்றமாகக் கருதுகிறார்கள். வறுமை மீதல்லவா இன்னல்கள் தழைக்கின்றன! வறுமை இல்லாத நாட்டில் வள்ளலுக்கு இடமில்லை. இதே கருத்தை 'மேஜர் பார்பாரா' (Major Barbara) என்ற நாடகத்தின் முகவுரையில் பெர்னார்ட்ஷா மிகவும் தெளிவாய்க் கூறியிருக்கிறார்.

இன்னிசை பாடும் பாங்கியில் பணம் போட்டவர்களுக்கு அதிலிருந்து வருஷத்துக்கொரு முறை முப்பதாயிரம் பவுன் போனஸ் கிடைக்கும். செல்வத்தை இப்படிப் போற்றுகிறார்கள் அந்த நாட்டில்.

மனிதப் பிறவியைப்பற்றிப் பட்லர் கூறுவதை நோக்குவோம்: பல ஆத்மாக்கள் தாம் புரிந்த வினைகளுக்கு ஏற்றபடி தமக்குத் தகுந்த இடங்களைத் தேடுகின்றனவாம். அவைகளுள் ஒவ்வொன்றும் மனித உள்ளமாகிய கதவைத் தட்டுகின்றன. அப்பொழுதுதான் மக்களிடையே காம இச்சை பிறக்கிறது. இதே கருத்தை வால்மீகியும் வெளியிடுகிறார். யார்

வயிற்றில் தாம் பிறக்கலாம் என்று கடவுள் யோசித்தாராம். இப்படி வால்மீகி குறிக்கிறுர். ஆகவே, பிறக்கும் குழந்தையின் குற்றங் குறைகளுக்குப் பெற்றேர்கள் கட்டுப்பட மாட்டார்கள். பிறவியை அந்த நாட்டிலுள்ளவர்கள் ஒரு நோயெனக் கருதினுர்கள். குழந்தைகள் மனப் பண்புக்கேற்றவாறு தொழிலை நடத்தி வரவேண்டும். பெற்றேர்கள் தங்கள் கருத்துக்களை அவர்கள்மீது சுமத்துவது மிகவும் பாவமாகும். சுதந்தரச் சூழ்நிலையில்தான் அவர்கள் வளர வேண்டும்.

அந்த நாட்டில் பள்ளிகளில் பரீட்சைகள் இல்லை. பரீட்சைகள் போட்டி உணர்ச்சியை எழுப்பும். அதனுல் அழுக்காறு பிறக்கும்; மனக் கசப்பும் தோன்றும். உடல் நலத்தையும், அழகையுந்தான் அந்த நாட்டில் எங்கும் காண்கிறேம். "நம்மை அறியாமலே அறிவு வளர்ந்துகொண்டே போகிறது. நாலும் ஐந்தும் ஒன்பது என்று சிரமத்தோடு விரலை விட்டு எண்ணின நாட்கள் உண்டு. ஆனுல் இப்பொழுது அது இயற்கையாய் வருகிறது. ஒரு காலம் வரும்; அப்பொழுது குழந்தைகளுக்குக் 'கால்குலஸ்' கணிதத்தைப் பிறந்தவுடனே ஆரம்பித்து விடலாம்" என்று பட்லர் கூறுகிறுர். தன்னை அறியாமல் எழுகின்ற உணர்ச்சியோ அறிவோ தான் பூர்ண நிலையை உணர்த்தும் என்று கார்லைல் மொழிகிறுர். பட்லர் கொண்ட கருத்தைத்தான் ஷாவும் வற்புறுத்துகிறுர்.

எல்லாவற்றுக்கும் ஒரு மிதம் வேண்டும். தர்க்க ரீதியில் நாம் சென்றேமானுல், எல்லாம் விபரீதமாய் முடியும். இதை மிகக் கிண்டலுடன் விளக்கிக் காட்டுகிறுர் பட்லர். எல்லாவற்றிலும் சைதன்னியம் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்துவிட்டால், ஒன்றையும் உண்ணக்கூடாது என்ற உண்மை பிறந்துவிடும். 'ஏர்வானி'ல் பாலை மக்கள் அருந்த மாட்டார்கள். பாலைச் சாப்பிட்டால், கன்றுக்குத் துரோகஞ் செய்ததாகும். ஊனை அவர்கள் விரும்ப மாட்டார்கள். அது ஜீவவதையாகும். விதையை உண்ணமாட்டார்கள். அதில் ஜீவன் மறைந்து நிற்கிறது. (ஷா பாலைக் கூட உண்ணவில்லை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.) எல்லாவற்றிலும் ஜீவன் இருக்கிறது. எதைச் சாப்பிட்டால் என்ன என்ற முடிவுக்கு வந்து, ஊனை மக்கள் தின்ன ஆரம்பித்தார்கள் என்று நகைச் சுவை ததும்பப் பேசுகிறுர் பட்லர். அஹிம்சா தர்மத்தைத் தர்க்க ரீதியில் துருவிப் பார்த்தால் விபரீதமாய் முடியும். வாந்திபேதி, கிருமியால் விளைகிறது. அதற்கு மருந்து சாப்பிடக் கூடாது. ஏனென்றுல், கிருமியைக் கொன்ற பாவமாகும். மனிதன் இருப்பதே எத்தனையோ வதைகளுக்கு இடமாகிறது.

ஒன்றை ஒன்று தின்று உயிர் வாழ்கிறது. "வேறு வழியில்லையே என்று கருணையோடு எதையும் நோக்க வேண்டும். அவ்வளவு தான் நாம் செய்யக் கூடியது" என்று நம்மவர்கள் தினம் வேள்வி செய்கிறுர்கள். மிதமில்லாத கதைகளையே நம் நாட்டு இலக்கியத்தில் பார்க்கிறேம். முல்லைக்குத் தேரை ஈதல், குளிரில் நடுங்கும் மயிலுக்குப் போர்வையை அளித்தல், தெய்வத்துக்குப் பிள்ளைக் கறி சமைத்தல், பிள்ளைமீது தேரைச் செலுத்தல், பக்தனுக்காகத் தெய்

வம் தகாதன செய்தல், தெய்வ வழி பாட்டுக்காகக் கஜானனவைச் சூறை யாடுதல் இத்தகைய சம்பவங்கள் நம் முன் எழுகின்றன. பிராணி வதை கூடாது என்ற சட்டத்தை மீறிய மக்களுக்கு மரணதண்டனை அசோகர் காலத்தில் விதித்தார்க ளென்றால், இந்தப் பேதை மையை என்னவென்று சொல்லு வது! உண்மையை நாட்ட வந்த அரிச்சந்திர புராணம் பொய் போலத் தோன்றுகிறது. மித மில்லாது போனால், அறமே கொடி தாய் முடிந்துவிடும்.

'எர்வா'னைவிட்டு ஆசிரியர் ஒரு பெண்ணோடு பலூனில் கிளம்பி விடுகிறார். அவருக்கொரு குழந்தை பிறக்கிறது. ஏற்கனவே ஒரு குழந் தையை 'எர்வா'னில் அவர் வேறு ஒரு பெண் மூலம் பெற்றிருந்தார். இந்த இரண்டு சகோதரர்களும் சந் திக்கிறார்கள் என்று கதையை முடிக்கிறார்.

ஆசிரியர் ஆகாயத்தில் பறந்து சென்றதால், அந்த ஊரில் அவ ரைச் சூரிய புத்திரன் என்று அழைத்தார்கள்; சூரிய புத்திர வேதாந்தமும் தோன்றிவிட்டது. இப்படித்தான் புராணங்கள் தோன்றியிருக்க வேண்டும். மேலும் 'எர்வா'னுக்கு ஆசிரியர் வந்தாலும், சூரிய புத்திர தத்துவம் மறைய வில்லை. அத்தனை ஆழமாய் அது மக்களிடையே வேரூன்றிவிட்டது. சித்திரங்களை நகைச் சுவை எழ வரைந்திருக்கிறார். எந்த இடத் தில் கிண்டலடிப் பேசுகிறார், எந்த இடத்தில் உண்மையைக் கூறுகிறார் என்று சொல்ல முடியாது.

உதாரணமாக, நல்லதைத் திருத் தக் கூடிய மன்றங்கள் 'எர்வா' னில் தோன்றிவிட்டன. "என் நல்லது செய்கிறாய்? தீயதைக் கற் றுக்கொண்டுவா" என்று தண்டனை விதிப்பார்களாம். இப்படி அவர் நகையாடுகிறார்.

ஆனால், இந்த இரண்டு புத்தகங்க ளிலும் தாம் கொண்ட கொள்கை களை நன்கு விளக்கிக் காட்டியிருக் கிறார்.

டார்வின் கொள்கையை இவர் எதிர்த்துப் பேசுகிறார். பர்க்ஸன் கருத்தை ஆமோதிக்கிறார்.

'எல்லாம் குருட்டாம் போக் கிலே நடக்கின்றன; பிரபஞ்சம் ஓர் அர்த்தமற்ற, உணர்ச்சி அற்ற யந்திரம்' என்று டார்வின் சொன்ன கொள்கை இவருக்கு உடன்பாடல்ல. சூழ்நிலையால் நாம் மாறுவதில்லை. நம்முடைய ஆத்ம சக்தியாலேயே எல்லாம் நிகழ்கின் றன. ஒட்டைச்சிவிங்கியின் கழுத்து நீள்வதற்குக் காரணம் இதுவே. அது தன் கழுத்தை நீட்டு வதற்குப் பிரயத்தனஞ் செய்கிறது. அதனால் அதற்குக் கழுத்து நீள்கி றது. புதிய சக்திகளை நம்மிடத்தில் நாம் படைத்துக்கொள்ளலாம். ஆத்ம சக்தியால் ஆயுளை நீடித்துக் கொள்ளக் கூடும் என்று ஷாவும் 'மீண்டும் மதாசலாவுக்கு' என்ற நாடகத்தில் பட்லர் கொண்ட கருத்தையே விரித்துக் கூறுகிறார். ஆனால் அந்தத் தீர னின் உயிரும் போய்விட்டது.

பிரபஞ்சத்தில் ஒரு நோக்கம், ஓர் ஒழுங்கு இருக்கக் காண்கிறோம். அந்த நோக்கம் காலத்தில் விரி வடைந்து உருவாகிறது. ஜடத்தி லிருந்து உயிர் தோன்றாது; உயிரிலிருந்துதான் உயிர் தோன் றும். நாம் ஜடமாகக் கருதக்கூடிய திலும் சைதன்னியம் மறைந்து நிற்கிறது.

கல்லில் துயில்கிற சைதன்னி யம், இலை கொடிகளில் கனவு

காண்கிறது; மனிதனின் மனத்தில் விழிக்கிறது. 'மனித நிலைக்கும் அப்பால் நாம் போக வேண்டும். எல்லாம் இறுதியில் முழுச் சைதன்னியமாய்க் காட்சி அளிக்கும்' என்று ஷா உபதேசம் செய்கிறார்.

சூரியபுத்திர தத்துவத்தை நோக்கினால், சில உண்மைகள் புலனாகும்: "எல்லா எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் பொருள்களுக்கும் ஆதாரமற்ற ஆதாரமாய்க் கடவுள் விளங்குகிறார். கடவுள் உண்டென்று சொல்லுகிறவர்கள் உண்மையை உரைக்கவில்லை; கடவுள் இல்லையென்று உரைப்பவர்களும் உண்மையைப் பகரவில்லை."

"அவனை நான் அறிவேன் என்று சொன்னால், அவனை அறியவில்லை. அவனை நான் அறியவில்லையென்றால் அவனை அறிந்தவனாகிறேன்" என்ற உபநிஷத் வாக்கியங்கள் இங்கே நம் சிந்தையில் ஒலிக்கின்றன.

"ஒவ்வோர் அணுவிலும் அவன் இருக்கிறான். அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் அவன் இருக்கிறான்" என்பது வேதமொழி.

'பார்க்காத நிலையில் கடவுள் இருக்கிறார்; பார்க்கும் நிலையில் கடவுள் தோன்றவில்லை. பிரபஞ்சந்தான் நம் முன் விரிகிறது.' 'கடவுளின்றி மனிதன் இருக்க முடியாது. மனிதனின்றிக் கடவுளுக்கு இடமில்லை' என்ற சுருதியில் சூரிய புத்திர வேதாந்தம் செல்லுகிறது.

இத்தனை கருத்துக்களையும் வேதம் தமிழ் செய்த மாறன் என்ற நம்மாழ்வார் ஒரே பாட்டில் அடக்கிவிட்டார்:

உளனெனில் உளன் அவ
னுருவம் இவ்வுருவுகள்
உளனலனெனில் அவ
னருவம் இவ்வருவுகள்
உளனென இலனென
இவை குணமுடைமையில்
உளனிரு தகைமையொ
டொழிவிலன் பரந்தே!

தோழர் கஷ்டம்

கம்யூனிஸ்ட் தொண்டர் ஒருவர், தம் தலைவருக்கு இந்தக் கடிதத்தை எழுதினர். "அமெரிக்காவில் ஒடுக்கப்பட்ட பாமர மக்களைக் கண்டுபிடித்துப் பிரசாரம் செய்வது மகா கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் வசந்த காலத்தில் எந்நேரமும் தங்கள் கார்களைப் பாலிஷ் செய்துகொண்டேயிருக்கிறார்கள். வெயில் காலத்தில் ரஜா எடுத்துக்கொண்டு எங்கேயாவது உல்லாசமாகப் போய்விடுகிறார்கள். இலை உதிர் காலத்தில் ஃபுட்பால் ஆடப்போகிறார்கள். மழைக்காலத்தில் சதாகாலமும் டெலிவிஷன் அருகே உட்கார்ந்திருக்கிறார்கள். இந்த மக்கள் எவ்வளவு கொடுமையாக ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இவர்கள் உணரும்படி செய்ய என்ன வழி என்பதைத் தயை செய்து தெரிவியுங்கள்."

—'ஃப்யூச்சர்'

சீதையின் அக்கினிப் பிரவேசம் ★

பட்டாபிஷேகமான பிறகு விபீஷணன் ராமனிடம் வந்தான். வரும் வழியில் விபீஷணனுக்கு அரக்கர்கள் அநேக விதமான காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவற்றையெல்லாம் ராமனுக்கே அவன் அர்ப்பணம் செய்தான். ராமனும் விபீஷணனுக்குத் திருப்தி ஏற்படுவதற்காக அவற்றை ஏற்றுக் கொண்டான். பிறகு சீதையை அழைத்து வரும்படி ஹநுமானை ராவணனின் அரண்மனைக்கு அனுப்பினான்.

ஹநுமான் உடனே இலங்கையில் நுழைந்தான். அங்கே அரக்கர்கள் அவனை உபசரித்துக் கொண்டாடினார்கள். தாமதியாமல் ராவணனின் அரண்மனைக்குள் புகுந்தான். அங்கே அசோக மரத்தடியில் உடல் அழுக்கடைந்து, அரக்கிகள் சூழச் சீதை அமர்ந்திருப்பதை அவன் கண்டான். அடக்கத்துடன் அவளை அணுகி வணக்கம் செய்தான். மாசற்ற அவள் முகத்தை நோக்கி, "தேவி, ராமபிரான் க்ஷேமமாக இருக்கிறார். ராவணனைக் கொன்றாகிவிட்டது. தங்களுடைய க்ஷேமத்தை விசாரித்துவிட்டுப் பிறகு இதைச் சொல்லச் சொன்னார்: 'அதிருஷ்டவசத்தால் நீ உயிரோடு இருக்கிறாய். நமக்கு வெற்றி கிட்டிவிட்டது. நீ கவலையை விட்டுவிடு. ராவணனைக் கொன்றுவிட்டேன். இலங்கை நம் வசமாகி விட்டது. நான் உன்னை மீட்பதாகப் பிரதிக்கினை செய்தேன். கடலில் அணை கட்டி இரவு பகல் தூங்காமல் அந்தப் பிரதிக்கினையை நிறைவேற்றினேன். இலங்கையை விபீஷணனுக்கு அளித்துவிட்டேன். ஆகவே, நீ ராவணன் வீட்டில்

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

இருப்பதாகக் கவலை கொள்ள வேண்டாம். நீ இருப்பது உன் வீடு என்று எண்ணிக்கொள்ளலாம்.' —அவர் உங்களைக் காண விரும்பு கிருர்'' என்ருன்.

சீதை அதிக மகிழ்ச்சியால் பேச முடியாமல் இருந்தாள். காரணம் விளங்காமல் ஹநுமான், ''தேவி, என்ன யோசிக்கிறீர்கள்? என் என்னிடம் பேசாமல் இருக்கிறீர் கள்?'' என்று கேட்டான்.

மகிழ்ச்சியினுல் குரல் தழுதழுக் கச் சீதை, ''ஹநுமானே, என் கணவரின் வெற்றியைக் கேட்ட தும், 'இவ்வளவு நல்ல செய்தி கொண்டு வந்தாயே; உனக்கு என்ன சம்மானம் கொடுப்பது?' என்றுதான் யோசிக்கிறேன்'' என்ருள்.

ஹநுமான் கை கூப்பி அவளை வாழ்த்திப் பிறகு, ''அம்மா, தாங் கள் உத்தரவிட்டால் முன்னே தங்களைத் துன்புறுத்திய அரக்கி களைக் கொன்று விடுகிறேன். சொல்லுங்கள்'' என்ருன்.

அதற்குச் சீதை, ''வானர வீரனே, தங்கள் அரசன் சொன் னதைச் செய்யும் அடிமைகளின் மேல் யாராவது கோபப்படுவார் களா? அவர்கள்மேல் தவறில்லை. என் வினைப் பயனை நான் அநு பவித்தேன். யார்தான் உலகில் தவறு செய்யமாட்டார்கள். கொலை காரனைக்கூட நல்லவர்கள் மன்னிக்கத்தான் மன்னிப்பார் கள்'' என்ருள்.

ஹநுமான், ''நீங்கள் ராமபிரா னுக்கு எற்ற மனைவிதான்'' என்று அவளைக் கொண்டாடினுன்; ''ராம பிரானிடம் நான் என்ன சொல்ல வேண்டும்? சொல்லுங்கள்'' என்ருன்.

"என் கணவரைப்பார்க்க வேண்டும்; அவ்வளவுதான்" என்ருள் சீதை. ஹநுமான், "அப்படியே" என்று சொல்லி மகிழ்ச்சியுடன் ராமனிடம் வந்து அவளுடைய விருப்பத்தைத் தெரிவித்தான்.

இதைக் கேட்டதும் ராமன் யோசனையில் ஆழ்ந்தான். அவன் கண்களில் நீர் நிரம்பியது. நீண்ட பெருமூச்சு விட்டான். பூமியைப் பார்த்தான். பிறகு, அருகில் இருந்த விபீஷணனை நோக்கி, "சீதை ஸ்நானம் செய்துவிட்டுச் சிறந்த ஆபரணங்கள் அணிந்ததும் உடனே இங்கே அழைத்து வா" என்று உத்தரவிட்டான்.

உடனே விபீஷணன் அந்தப்புரம் சென்று தன்னைச் சேர்ந்த பெண்டுகளிடம் இதைத் தெரிவித்தான். தானே நேரிலும் சென்று, "தேவி, விரைவில் குளித்துவிட்டுச் சிறந்த ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு வாகனத்தில் ஏறுங்கள். ராமபிரான் தங்களைக் காண விரும்புகிருர்" என்ருன்.

அதைக் கேட்டுச் சீதை, "குளிக்காமலே அவரைப் பார்க்க விரும்புகிறேன்" என்று தெரிவித்தாள். அதற்கு விபீஷணன், "தங்கள் கணவர் தங்களைக் குளித்துவிட்டே வரும்படி உத்தரவிட்டிருக்கிருர்" என்று தெரிவித்தான்.

உடனே, "அப்படியே" என்று சொல்லிக் குளித்து ஆடையணிகள் அணிந்து சீதை புறப்பட்டாள்.

விபீஷணன் முன்னுல் சென்று ராமனிடம் இதைத் தெரிவித்தான். 'அரக்கன் வீட்டில் எப்படித்தான் இவ்வளவு காலம் சீதை வாழ்ந்திருந்தாளோ?' என்று ராமனுக்கு மகிழ்ச்சி, வருத்தம், கோபம் மூன்றும் ஒருங்கே வந்தன.

அப்போது விபீஷணன் சீதையைக் காணக் குவிந்திருக்கும் குரங்குகள், கரடிகள், அரக்கர் கூட்டம் இவற்றை அதட்டி விலகும்படி செய்தான். உடனே ராமன் மனம் நொந்து, விபீஷணனை நோக்கிக் கோபத்தோடு, "என்னைச் சேர்ந்தவர்களை ஏன் இப்படி என்னைக்கூட மதிக்காமல் விரட்டுகிருய்? பெண்களுக்கு வீடும் ஆடையும் கோட்டைச் சுவரும் திரையும் அணியல்ல. அவர்களுக்கு ஒழுக்கமே அணியாகும். யுத்தகளத்தில் கஷ்டநிலையில் என்முன்னே இருக்கும் சீதையை மற்றவர் பார்த்தால் ஒன்றும் தவறில்லை. ஆகவே, அவளை அழைத்து வா" என்ருன்.

விபீஷணன் வணக்கத்தோடு உடனே சீதையை ராமன் முன் அழைத்து வந்தான். சீதை வெட்கத்தால் தனக்குள்ளே மட்கி மடிவது போல் ராமன் எதிரில் நின்ருள். அவள் தன் முகத்தை மறைத்துக்கொண்டு, "ஆரிய புத்திரரே!" என்று ராமனை அழைத்து வருத்தம் தாங்காமல் அழுதாள். அன்போடும் மகிழ்ச்சியோடும் ராமனின் முகத்தை அந்தக் கற்பரசி பார்த்தாள். ராமன் தன் அருகில் இருந்த சீதையை நோக்கிச் சொல்லலானுன்:

"சீதா, பகைவனைக் கொன்று உன்னை மீட்டுவிட்டேன். என் வீரத்தால் செய்யவேண்டியது இது தான். எனக்கு நேர்ந்த அவமானத்தையும் பகைவனையும் ஒருங்கே அழித்துவிட்டேன். அவமானத்தைப் பொறுத்துக்கொண்டிருப்பவன் ஆண்பிள்ளையா? ஹநுமான் கடலைக் கடந்து இலங்கையை அழித்ததும், பெருஞ்சேனையுடன் சுக்கிரீவன் போரில் செய்த உதவியும், தமையனை விட்டு என்னையே

தஞ்சம் என்று வந்தடைந்த விபீஷணனுடைய முயற்சியும் இப்போது பயன் அளித்துவிட்டன'' என்றான். அப்போது சீதையின் கண்கள் பயந்த பெண்மானின் கண்களைப் போல் திகைப்புற்றன. அவற்றில் நீர் நிரம்பியது.

இந்த நிலையில் அவளைக் காண ராமனுடைய கோபம் நெய்விட்டு வளர்த்த தீயைப்போல் மேலும் பொங்கி எழுந்தது. புருவங்களை நெரித்து, "சீதா, க்ஷத்திரிய தர்மத்தைக் காக்கவும், அவமானத்தை விலக்கவும் புகழ்பெற்ற என் வம்சத்தின் இழிவை அகற்றவும் நான் போர் புரிந்தேன்; உனக்காக அல்ல. நீ என் எதிரில் இருப்பது என் கண்ணுக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? கண்வலி உடையவனுக்கு விளக்கு வெளிச்சம் கண்ணைக் கூசித் துன்புறுத்துகிற மாதிரிதான். ஆகையால், நீ போய்வரலாம். உனக்கு அநுமதி கொடுத்து விட்டேன். உன்னால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. ராவணன் மடியில் புரண்டு அவனுடைய கொடிய கண் பார்வைக்கு இலக்கானவள் நீ. உன்னைத் திரும்ப ஏற்க மாட்டேன். எனக்கு உன்னிடம் பற்றுதல் இல்லை. உன் இஷ்டப்படி எங்கே வேண்டுமானாலும் நீ போகலாம். லட்சுமணனிடமோ பரதனிடமோ சுக்கிரீவனிடமோ விபீஷணனிடமோ இருந்துகொள்ளலாம். தேவதைகளுக்குரிய அழகும் வசீகரமும் உள்ளவள் நீ. உன்னைத் தன் வீட்டிலேயே வைத்திருந்த ராவணன் பொறுமையோடு இருந்திருப்பானா?'' என்றான்.

இந்தக் கொடிய சொற்களைக் கேட்ட சீதை கண்ணீர் உகுத்தாள். யானை தன் துதிக்கையால் உலுக்கிய ஸல்லகி என்னும் கொடியைப் போல் நடுங்கினாள். ஜனத்திரளுக்கு நடுவிலே இதுவரையில் கேட்டிராத இந்தக் கடுஞ்சொல்லைக் கேட்டு மட்கி மறைவது போல் ஆனாள். அவள் முகத்தில் கண்ணீர் பெருகியது. அதைத் துடைத்துக்கொண்டு தொண்டை அடைக்கச் சொன்னாள்:

"வீரரே! அறிவற்ற சாதாரண மனிதன் தன் மனைவியிடம் பேசுகிறமாதிரி ஏன் இப்படித் தகாத வார்த்தைகளைப் பேசுகிறீர்கள்? நீங்கள் நினைப்பது போல் நான் இல்லை என்பதை என் கற்பின்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். சாதாரணப் பெண்களைப் போல் என்னை எண்ணுதீர்கள். பலாத்காரமாக ராவணன் என்னைத் தொட்டால் அது என் தவறு? அது விதியின் செயல். என் உள்ளந்தான் எனக்கு வசப்பட்டது. எப்போதும் மாறாமல் உங்கள் நினைவாகவே இருக்கிறேன். இத்தனை நாள் கூடப் பழகிவந்தும் என் குணம் உங்களுக்குத் தெரியாவிட்டால் நான் இருந்து என்ன பலன்? ஹநுமானை அனுப்பியபோதே இதைத் தெரிவித்திருந்தால் உடனே உயிரை விட்டிருப்பேனே! உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் இவ்வளவு சிரமமும் ஏற்பட்டிராது. ஜனக மகாராஜா பெயரளவில்தான் என் தந்தை. நான் உண்மையில் பூமியிலிருந்து பிறந்தவள். அந்த உயர்ந்த பிறப்பையும் தூய ஒழுக்கத்தையும் நீங்கள் சற்றும் பொருட்படுத்தவில்லையே! அறியாத வயதில் என்னைக் காப்பாற்றுவதாகச் சொல்லிப் பாணிக்கிரகணம் செய்ததையும் மதிக்கவில்லையே!'' என்று சீதை வருத்தம் நெஞ்சை அடைக்கக் கண்ணீர் சொரிந்தபடி சொன்

னாள். பிறகு தலைகுனிந்து கவலையில் ஆழ்ந்து நிற்கும் லட்சுமணனை நோக்கி, "லட்சுமணா, சிதையை அடுக்கு. அதுதான் என் வருத்தத்துக்கு மருந்து. இந்த அபவாதத்தோடு வாழ நான் விரும்பவில்லை. இவர் என்னைப் பலபேர் முன்னால் புறக்கணித்து விட்டார். இந்த நிலையில் அக்கினிப் பிரவேசம் செய்வதுதான் ஏற்றது" என்றாள்.

உடனே லட்சுமணன் கோபத்தோடு ராமனைப் பார்த்தான். ராமனுக்கும் அது சம்மதம் என்று தெரியவே உடனே பதில் பேசாமல் சிதையை அடுக்கித் தீ மூட்டினான். சீதை குனிந்த தலையுடன் இருக்கும் ராமனை மெதுவாக வலம் வந்து தீயை அணுகிக் கை கூப்பிச் சொல்லலானாள்:

"என் மன மொழி மெய்களால் இவரைத் தவிர மற்ற எவரையும் ஒரு கணமும் நாடவில்லை என்பதை உலக சாட்சியான அக்கினி பகவான் தெளிவு படுத்தட்டும்" என்று சொல்லித் தீயை வலம் வந்து அதில் நுழைந்தாள்.

அங்கே கூடியிருந்த எல்லாரும் நடுக்கத்துடன் இந்தக் காட்சியைக் கவனித்தார்கள். பெண்கள் சீதையின் நிலையை உணர்ந்து கதறினார்கள். தேவரும் தானவரும் கந்தர்வரும் இதைக் கண்டு திகைத்தார்கள். குரங்குகளும் அரக்கர் கூட்டமும், "ஹா" என்று கத்தின. தர்மாத்மாவான ராமன் சீதையின் சொற்களையும் அங்கே உண்டான சத்தத்தையும் கேட்டுக் கண்ணில் நீர் ததும்பத் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். குபேரன், யமன், இந்திரன், வருணன், பரமசிவன், பிரம்மா ஆகியோர் விமானத்தில் ஏறி இலங்கைக்கு வந்து ராமனிடம், "நீங்கள் மகாவிஷ்ணு என்பதை மறந்தீர்களே? அப்படியிருந்தும் சாதாரண மனிதனைப் போல் சீதையை இப்படி அசட்டை செய்கிறீர்களே!" என்றார்கள்.

ராமன் பிரம்மாவை இதைத் தெளிவுபடுத்தும்படி சொன்னான்.

பிரம்மா, "நீங்கள்தான் பகவானான நாராயணன்; சீதைதான் லட்சுமிதேவி" என்றார்.

அப்போது அக்கினி, சிறிதும் நிறம் மாறாதபடி அதே ஆடை ஆபரணங்களுடனும் பூமாலையுடனும் சீதையை மடியில் ஏற்றிக் கொண்டு ராமனெதிரில் தோன்றினான்.

"ராமா! இவள் உன்னைத் தவிர மற்ற எவரையும் நினைக்கவில்லை. இவளிடம் சிறிதும் மாசு இல்லை. நான் உத்தரவிடுகிறேன். சீதையை ஏற்றுக்கொள். மறுத்துக் கூறாதே" என்றான்.

ராமன் இதைக்கேட்டு மகிழ்ச்சியுற்றான்; சற்றே தியானத்தில் ஆழ்ந்திருந்தான்; பிறகு, "சீதையினிடம் மாசில்லை என்பது எனக்கும் தெரியும். ஆனால், 'முட்டாளான ராமன் காமவசப்பட்டு ராவணன் வீட்டிலிருந்த சீதையை யோசியாமல் அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டான்' என்று உலகம் சொல்லும். உலகத்துக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்றுதான் இப்படிச் செய்தேன். மனத்தினால்கூட ராவணன் சீதையைக் கெடுக்க முடியாது என்று எனக்குத் தெரியும். சூரியன் ஒளியைவிட்டு விலக முடியுமா? உத்தமனான மனிதன் கீர்த்தியை விட முடியுமா? அப்படியே நானும் சீதையை விட முடியாது. உலகம் வழிபடும் உங்கள் சொல்லை இதோ நிறைவேற்றுகிறேன்" என்று சொல்லிச் சீதையை ஏற்றுக் கொண்டான்.

அணுக்குண்டு அநுபவம்

★

அணுக்குண்டுபற்றிப் பத்திரிகைகளில் வெகு அலட்சியமாய்ச் செய்திகள் வருகின்றன. ஹிரோஷிமா நகரில் வெடித்த அணுக் குண்டு எவ்வளவு வேதனை விளைத்தது என்பதை ஒரு ஜப்பானியச் சிறுமி 'பீஸ் ந்யூஸ்' என்ற லண்டன் பத்திரிகையில் அப்படியே எழுதியிருக்கிறாள். 'ஸர்வோதயம்' இதை மொழிபெயர்த்துத் தந்திருக்கிறது.

குண்டு வீச்சு அதிகமாகிக் கொண்டே இருந்ததால் நானும் என் தாயும் மிஜாகினு தீவிலுள்ள ஓர் உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டோம். 4-ஆம் தேதியன்று ஒரு விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

ஆகஸ்டு 6-ஆம் தேதி காலைச் சிற்றுண்டியை முடித்துவிட்டுத் திரும்பிப் போவதென்று பேசிக்கொண்டிருந்தோம். திடீரென்று கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒன்று தோன்றியது. மிகவும் பதற்றத்துடன் "என்ன நேர்ந்தது?" என்று தாயைக் கேட்டேன்.

அப்போது பயங்கர வெடிகுண்டு வெடிக்கும் சப்தம் கேட்டது. எங்கும் ஒரே இருள் சூழ்ந்துவிட்டது. ஒரு பெரிய பாரத்தைச் சுமப்பது போல், உடம்பெல்லாம் வலிக்க ஆரம்பித்தது.

"அம்மா!" என்று என் பலம் கொண்ட மட்டும் கத்தினேன். "செகுகோ" என்று என்னை என் தாய் அழைப்பது காதில் விழுந்தது. ஆனால் அவள் குரல் மிகவும் கம்மியிருந்தது.

"இங்கே இருக்கிறேன்" என்றேன்.

"உடனே ஓடி வா" என்றாள் என் தாய்.

முழுப் பலத்துடன் வேகமாக நடந்தேன். வெளியே வந்ததும் என் தாயைப் பார்த்தேன்.

"அம்மா, சீக்கிரம் எழுந்திரு!" என் கையை நீட்டினேன். ஆனால் அவள் அசையவே இல்லை.

"வலிக்கிறதே! உடம்பெல்லாம் வலிக்கிறதே!" என்று கதறினாள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. சற்றுக் கவனித்தேன். அவளுடைய வலது காலின் மேல் ஒரு மரக்கட்டை விழுந்திருந்ததைக் கண்டேன். முடிந்தமட்டும் அதை நகர்த்த நான் செய்த முயற்சி பலிக்கவில்லை.

"உதவி! உதவுங்கள்!"

அநேகரின் தீனக் குரல்கள் கேட்டன. நானும் அழுதேன்; கத்தினேன். உதவிக்கு வருவோர் எவருமில்லை. தீ வெகு வேகமாகப் பரவி நெருங்கிக்கொண்டிருந்தது. "அம்மா, சீக்கிரம் கிளம்பு, அம்மா!" என்று பைத்தியம் பிடித்தவள் போல் கத்தினேன்.

அவள், "நீ முதலில் ஓடு; நான் பின்னால் வருகிறேன்" என்றாள் பதற்றத்துடன். நெருப்பு வெகு

மூலம்: ஸர்வோதயம் (தமிழ், நவம்பர் '52), திருப்பூர்.

சமீபத்தில் வந்துவிட்டது. என் ஆடைகள் எரிந்துவிட்டன. மழைத் தண்ணீர்த் தொட்டியில் உடனே குதித்தேன். அந்தத் தொட்டியில் வேறு நான்கு ஐந்து பேர்கள் இருந்தார்கள். தொட்டித் தண்ணீர் சூடாகவே இருந்தது. அதில் குதித்த சில நிமிஷத்தக்கெல்லாம் நினைவிழந்துவிட்டேன்.

என் கண்களைத் திறந்து பார்த்த போது, பாவம், ஒரு ஸ்திரீ தூக்கத்தில் ஆழ்ந்திருப்பவள்போல் இருந்தாள். ஆனால் அவள் தண்ணீரில் இறந்து கிடந்தாள். எனக்கு ஒரே பயமாகிவிட்டது. அருகிலே போய்க்கொண்டிருந்த ஒருவரை உதவிக்கு அழைத்தேன்.

அவர் என்னைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்தார்; தங்குவதற்கு ஓர் இடமும் பார்த்துக் கொடுத்தார். என் கைகளில் தீயினால் சுட்ட புண்கள் பல இருந்தன. என் இருதயத்திலும் முதுகிலும் வலி அதிகமாயிருந்தது. எங்கள் விடுதி ஒரு பள்ளிக்கூடம். அதன் ஒரு மூலையில் தினமும் ஏராளமான பிரேதங்களை எரிக்கும் துர்நாற்றம் சகிக்கவே முடியவில்லை.

என் தாயைப் பார்ப்பதற்காக ஒன்றிரண்டு நாளில் ஹிரோஷிமாவுக்குப் போனேன். சூரிய வெப்பம் மிகவும் கடுமையாக இருந்தது. பாதையில் மனிதர்கள், நாய்கள், குதிரைகள் இப்படிப் பல பிரேதங்கள் கிடந்தன. அழகிய, சுறுசுறுப்பான நகரம் பாழடைந்து சுடுகாடாகக் காட்சியளித்தது. இறந்தவர்களின் எலும்புத் துண்டுகளைச் சிலர் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். ஐந்து தினங்களுக்குப் பின், "உன் தாய் இறந்துவிட்டாள்" என்று என் பாட்டி சொன்னாள்.

என் தாயின் எலும்புகளை எடுத்துக்கொண்டு வந்தார் என் மாமா. என் தந்தையைத் தவிர உறவினர்களெல்லாரும் இறந்துவிட்டதால் என் பாட்டியே என்னை வளர்ப்பதென்று முடிவாயிற்று.

மழை நாள் வந்தது. என் மாமா என்னை அழைத்துச் சென்றார். அவரிடமிருந்தபோது 3, 4-ஆம் வகுப்புக்களில் படித்தேன். 4 வருஷங்களுக்குப் பின் எனக்கு க்ஷயரோகம் வந்தது. செஞ்சிலுவை ஆஸ்பத்திரியில் 5 மாதம் இருந்தேன். இந்த நோய்க்குக் காரணம் அணுக் குண்டுதானாம்.

என்னைப் பார்ப்பதற்காக என் தந்தை திடீரென்று ஒரு நாள் வந்தார். மிகவும் குதூகலத்துடன் அவருடன் மறுபடியும் ஹிரோஷிமாவுக்குப் போனேன். நகரத்தைப் புதுப்பித்திருந்தார்கள். என் தாய் இறந்த இடத்தில் புதிய வீடு ஒன்று இருந்தது.

"தாயே, நான் மறுபடியும் ஹிரோஷிமாவுக்கு வந்துவிட்டேன். என் வாழ்வில் இனி மகிழ்ச்சிதான்" என்றுவேண்டினேன்.

அணுக்குண்டினால் கழுத்திலும், காலிலும், முகத்திலும் தீவடுக்களுடன் செல்லுபவர்களைத் தினந்தோறும் டிராமிலும், தெருவில் நடந்து செல்லும்பொழுதும் பார்க்கிறேன். அவர்களிடம் ஓடிப்போய் ஆறுதல் சொல்ல ஆசைப்படுகிறேன். யுத்தத்தின் கொடுமைகளை நேரில் கண்டு அநுபவித்து அல்லல்பட்ட நாங்கள், உலகில் நண்பர்களாக வாழவும், நிரந்தர சமாதானம் நிலவ ஒன்றுபட்டு உழைக்கவும் மனப்பூர்வமாக விரும்புகிறோம்.

உலக சமாதானத்தைப் பாதுகாக்க ஏற்பட்ட ஸ்தாபனத்தின் விவரம்.

ஐ. நா. ஸ்தாபனம்

★

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் போன்ற மாபெரும் உலக அமைப்பு எதவும் இதுவரையில் உலகில் தோன்றியதில்லை. அது இணையற்ற உலக அமைப்பாக இன்று விளங்குகிறது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆறு முக்கிய உறுப்புக்கள் கொண்டது. அவை: (1) பொதுச் சபை (ஜெனரல் அசெம்பிளி), (2) பாதுகாப்புக் கழகம் (செக்யூரிட்டி கவுன்ஸில்), (3) பொருளாதார-சமூகக் கழகம் (எகனமிக் அண்டு சோஷல் கவுன்ஸில்), (4) தர்மகாத்தா சபை (டிரஸ்டீஷிப் கவுன்ஸில்), (5) சர்வதேச நீதி மன்றம் (இண்டர்னேஷனல் கோர்ட் ஆவ் ஜஸ்டிஸ்), (6) தலைமைக் காரியாலயம் (செக்ரடேரியட்).

பொதுச் சபை: ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாடுகள் அனைத்தும் சேர்ந்ததே பொதுச் சபை. எந்த நாடும் ஐந்து பிரதிநிதிகளுக்கு அதிகமாக அனுப்ப முடியாது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபன சாசனத்தில் கண்ட பொருள்கள்பற்றிப் பொதுச் சபை ஆராயலாம். பொதுச் சபையின் வேலை பெரும்பாலும் அதன் உட் கழகங்களால் நடைபெறுகிறது.

பாதுகாப்புக் கழகம்: பாதுகாப்புக் கழகம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 11 உறுப்பினரைக் கொண்டது. ஐந்து பேர் நிலையான உறுப்பினர்; மற்றவர் இரண்டு ஆண்டுக்கொருமுறை பொதுச் சபையால் தெரிந்தெடுக்கப்படுவோர். சீனா, பிரான்ஸ், ஸோவியத், பிரிட்டன், அமெரிக்கா ஐந்தும் நிலையான உறுப்பினர். சர்வதேச சமாதானத்தைப் பாதுகாப்பதற்குரிய முக்கியப் பொறுப்பை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப் பொதுச் சபை இதற்கு வழங்கியிருக்கிறது.

பொருளாதார - சமூகக் கழகம்: பொதுச் சபை தெரிந்தெடுத்த உறுப்பினரைக் கொண்டது இந்தக் கழகம்; மூன்று ஆண்டு உறுப்பினராயிருக்கும் பொருட்டு ஆறு பேரை ஆண்டுதோறும் தெரிந்தெடுப்பார்கள். வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, பொருளாதார - சமூக முன்னேற்றம் கருதுவது, இனம், மொழி, சமயம் முதலிய வேறுபாடின்றி யாவருக்கும் மனித உரிமைகள் கிடைக்க ஏற்பாடு செய்வது இவை இந்தக் கழகத்தின் கடமைகள். இந்தக் கழகம் பல உட்கழகங்களின் துணையால் வேலை செய்கிறது.

தர்மகர்த்தா சபை: தர்மகர்த்தா பிரதேசங்களை ஆளும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன உறுப்பு நாடுகளும், தர்மகர்த்தா பிரதேசங்களை ஆளாத பாதுகாப்புக் கழகத்

மூலம்: குமரி மலர் (தமிழ்; நவம்பர் '52), சென்னை.

தின் நிலையான உறுப்பினர்களும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மூன்ருண்டுக்கு ஒரு முறை தெரிந்தெடுக்கும் மற்ற உறுப்பினர்களும் தர்மகர்த்தா சபையின் அங்கத்தினராக இருப்பார்கள்.

சர்வதேச நீதி மன்றம்: சர்வதேசச் சட்டத்துக்கு இணங்கத் தகராறுகளை முடிவு செய்வதே சர்வதேச நீதி மன்றத்தின் வேலை. பொதுச்சபைக்கும், பாதுகாப்புக் கழகத்துக்கும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விசேஷ ஸ்தாபனங்களுக்கும் இந்த நீதிமன்றம் ஆலோசனை சொல்லும்.

தலைமைக் காரியாலயம்: இதன் முக்கிய நிர்வாக அதிகாரியைத் தலைமைக் காரியதரிசி என்பார்கள். பொதுச்சபை ஏற்படுத்தியுள்ள விதிகளுக்கு இணங்க இவர் மற்றவர்களை நியமிக்கிருர்.

உலக மக்களின் தீர்ப்பு: உலக சமாதானத்தைப்பற்றிய விவகாரங்களைக் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபன உறுப்பு நாடுகள், பொதுச் சபையில் உறுதியாகப் பேசுகின்றன. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பலனை எந்த நாடும் உலக மக்களின் தீர்ப்புக்குத் தப்ப முடியாது. ஆக்கிரமிப்பையும் சர்வதேச வரம்பு கடந்த நடத்தையையும் தடுத்து நிற்கும் முதன்மையான பெரிய ஆயுதம் இதுவே. இதுவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மாபெரும் சக்தி.

தீராத மனேவியாதி

ஒருவனுக்கு ஏதோ மனேவியாதி. அவன் எந்த நேரமும் இரண்டு காதிலும் ஒவ்வொரு விரலைக் 'கார்க்' போட்டதுமாதிரி வைத்து மூடியபடி நடப்பான். ஏன் என்று கேட்டால், "காதிலே ஈ புகுந்து இரைந்துகொண்டேயிருக்கிறது; என்னைப் பைத்தியம் பிடிக்கச்செய்கிறது" என்பான்.

மனவைத்திய நிபுணர் எத்தனையோ தந்திரங்களை அநுஷ்டித்துப் பார்த்தும் அவனைத் திருத்த முடியவில்லை. கடைசியாக அவனுக்கு மயக்க மருந்து கொடுத்து, காதை 'ஆபரேஷன்' செய்வதுபோல் பாவனை செய்தார்.

மயக்கம் தெளிந்து அவன் எழுந்ததும், "ஆபரேஷன் செய்ததில் ஈ அகப்பட்டு விட்டது" என்று சொல்லி, ஈ ஒன்றைக் காட்டி, காதுக்கு மருந்து போட்டு அனுப்பினர். நோயாளியும் சந்தோஷத்துடன் வெளியே சென்ருன்.

சில நாளைக்கெல்லாம் அதே ஆளை வீதியிலே மன வைத்தியர் கண்டபோது, முன்போலவே அவன் காதை விரலால் மூடிக்கொண்டு நடப்பதைக் கண்டார்.

"இதென்ன? உன் காதிலிருந்த ஈயை நான்தான் எடுத்து விட்டேனே?" என்று கேட்டார்.

"வாஸ்தவம். அதை நீங்கள் எடுத்துவிட்டீர்கள். ஆனல், வேறு ஈ காதிலே புகாதபடி நான் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் இந்த ஏற்பாடு" என்ருன் அந்த ஆள்.

—க்ரெக் ஹார்னி

ஏமாந்த போலீஸ்காரன்

★

ஜன நெருக்கம் நிறைந்த மார்க்கெட்டில் ஒரு ஜேபடித் திருடன் திருடிக்கொண்டிருந்தான். புதிதாக வேலைக்கு வந்த போலீஸ்காரன் ஒருவன் இதைக் கவனித்துவிட்டான். கையும் களவுமாகத் திருடனைப் பிடித்துக்கொண்டான்.

ஸ்டேஷனுக்குப் போகும் வழியில் ரொட்டிக் கடையொன்றைத் திருடன் பார்த்தான்; "ஐயா, மிகவும் பசியாக இருக்கிறது. உள்ளே சென்று ஒரு ரொட்டி வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன். அநுமதி தாருங்கள்" என்று சொல்லி அந்தக் கடைக்குள் சென்றான். பிறகு திரும்பி வரவே இல்லை. போலீஸ்காரனே கடைக்குள் சென்றான். திருடனின் அங்க அடையாளங்களைச் சொல்லி விசாரித்தான். "அந்த மனிதன் வெகு நேரத்துக்கு முன்பே பின்வாசல் வழியே சென்று விட்டானே" என்று பதில் வந்தது.

போலீஸ்காரன் பேசாமல் திரும்பினன்.

சில தினங்களுக்குப் பிறகு போலீஸ்காரன் அதே திருடனை மறுபடியும் பிடித்தான். அதே வழியில் இருவரும் சேர்ந்து சென்றார்கள். பழைய ரொட்டிக் கடை வந்தது. திருடன் முன் போலவே, "எனக்கு இன்று மிகவும் பசி. உள்ளே சென்று ஒரு ரொட்டி வாங்கிக்கொண்டு உடனே வந்து விடுகிறேன்" என்று அநுமதி பெற்றான்.

திருடன் கடைக்குள் சென்றதும், போலீஸ்காரன் அந்தக் கட்டிடத்தைச்சுற்றிச் சென்று பின் வாசல் பக்கம் போய் நின்றுகொண்டான். பத்து நிமிஷத்துக்கு மேலாயிற்று. போலீஸ்காரன் கடைக்குள் சென்று திருடனைப்பற்றி விசாரித்தான். "அவன் அப்போதே முன் வாசல் வழியாகச் சென்று விட்டானே" என்று அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள்.

மூன்றாவது முறையாக அந்தத் திருடன் அதே போலீஸ்காரனிடம் சிக்கிக்கொண்டான். "ஒரு ரொட்டி வேண்டும். பசியாக இருக்கிறது" என்று மெல்லிய குரலில் போலீஸ்காரனைக் கேட்டான்.

போலீஸ்காரன் பலமாகச் சிரித்தான். "இந்தத் தடவை உன் வேலை பலிக்காதப்பா! ரொட்டி வாங்குவதற்கு அணாவைக் கொடு. நான் போய் வாங்கி வருகிறேன். அதுவரைக்கும் நீ இங்கேயே இரு" என்று சொல்லிவிட்டுத் தானே ரொட்டி வாங்கக் கடைக்குள் சென்றான்.

ரொட்டியுடன் போலீஸ்காரன் கடையிலிருந்து வெளியே வந்தான். அதுவரைக்கும் தெருவிலே நிற்கத் திருடனுக்கு என்ன பைத்தியமா? அவன் போயே போய்விட்டான்.

—காப்பிரைட்; 'ஃபோரம்,' பம்பாய்.

இந்த அழகான இந்து தெய்வச் சிலைகள் இலங்கையில் கிடைத்திருக்கின்றன.

அபூர்வச் சிற்பங்கள்

★

இலங்கையில் உள்ள பௌத்தர்களின் புண்ணிய ஸ்தலங்களுள் மகியங்கனை என்னுமிடத்தில் உள்ள தாதுகோபமும் ஒன்று. (புத்தருடைய பல், நகம் போன்ற ஏதாவது ஒன்றை வைத்துக் கட்டிய கோயிலுக்குத் தாதுகோபம் என்று பெயர்.) சிறிது காலத்துக்கு முன்புதான் புதைபொருள் ஆராய்ச்சியாளர் இதைத் தோண்டி எடுத்தார்கள். இதுவரை கண்டெடுத்த கலைப் பொருள்களிலேயே மிகவும் உயர்ந்த பொருள்கள் இந்தத் தாதுகோபத்தில் கிடைத்திருக்கின்றன. இந்தத் தாதுகோபத்தை முன்பிருந்த முறையிலேயே சீர்திருத்திக் கட்ட வேண்டுமென்று மகியங்கணைத் தாதுகோபப் புனருத்தாரண சங்கத்தார் உத்தேசித்திருக்கிறார்கள். இது முன்பு எந்த உருவத்தில் இருந்ததோ அதைப்போன்ற 'மாடல்' உரு ஒன்றை அமைத்துக் கொடுக்கும்படி இந்தச் சங்கம் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவிடம் கேட்டிருக்கிறது. பல அரசர்கள் இதை அடிக்கடி திருத்திக் கட்டியிருக்கிறார்கள். பிறகு இது காலப்போக்கில் பூமியில் புதைந்துவிட்டது. எனவே, இதன் சரித்திர கால உருவ வேறுபாடுகளை அறியும் நோக்கத்துடன்

அசுவினி தேவ வெண்கலச் சிலையில் ஒன்று

மூலம்: ஸ்ரீலங்கா (தமிழ்: அக்டோபர், '52), இலங்கை அரசாங்க இலாகா, கொழும்பு.



அசுவினி தேவர் வெண்கலச் சிலையில் மற்றொன்று

இதைப் பூமியிலிருந்து தோண்டி எடுத்திருக்கிறார்கள்.

தாதுகோபத்தைச் சுற்றி முன்பு அடிக்கடி செப்பனிடும் வேலைகள் பல நடந்திருக்கின்றன. அதனால் இதைச் சுற்றி எங்கும் செங்கற் குவியல்கள் கிடந்தன. தாதுகோபத்தின் பழைய நிலையை அறிவதற்காகச் சுற்றுப் புறமெங்கும் தோண்டவே அடித்தளத்திலிருந்து 22 அடி உயரத்துக்குமேல் தாதுகர்ப்பம் (தாதுகோபத்தின் முக்கியப் பகுதி) தென்பட்டது. இது மகியங்கனைச் சரித்திரத்தின் ஆரம்பகாலத்தைச் சேர்ந்ததோ இல்லையோ தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும் கோபுரத்தை அமைத்த பிறகு தாதுகர்ப்பத்தை மூடிவிட்டதால் இது இருப்பதே மக்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. இதை மூன்று பெரிய கற்கள் மூடி மறைத்திருந்தன. முதலில் ஒரு கல்லை அப்புறப்படுத்தினார்கள். செங்கற் சுவர்களின் உள்ளே தாதுகர்ப்பம் இருப்பது தெரிந்தது. அந்தக் காலத்தில் மக்கள் உபயோகித்து வந்த பூஜைப் பொருள்கள் பல அங்கே இருந்தன. சுவர்களில் வர்ணச் சித்திரங்களும் தெரிந்தன. புராதன இலங்கையில் தாதுகர்ப்பச் சுவர்களை வர்ணச் சித்திரங்களால் அலங்கரித்து வந்தார்கள் என்று இலங்கைச் சரித்திர ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். என்றாலும் இங்கே கண்டவை போன்ற சுவர் வர்ணச்சித்திரங்கள் இருந்திருக்கும் என்று யாரும் நினைத்ததில்லை. மூடியிருந்த கற்பலகைகளை அப்புறப்படுத்தியதும் பல சுவர்ச் சித்திரங்களின் வர்ணம் மங்கியிருப்பது தெரிந்தது.

தாதுகர்ப்பம் செங்கற்களால் கட்டியது; 4 அடி சதுரமும் 3 அடி 9 அங்குல உயரமும் உள்ளது. மத்தியில் பெட்டியைப் போன்ற பாத்திரம் ஒன்று இருந்தது. இதன் நான்கு மூலைகளிலும் காவல் காத்து நிற்கும் வெண்கலக் குதிரை வீரர்களின் உருவங்கள் வைத்திருந்தன. பெரிய பாத்திரத்தின் மேற்கில் இதே உருவத்துடன் கூடிய சிறிய பெட்டியொன்று இருந்தது. சுவர்களின் நான்கு மூலைகளிலும் இரும்புச் சூலங்களும், தங்கக் கொடிகளும் இரும்புக் கம்பிகளில் பொருத்தியிருந்தன. செம்பினால் செய்த முக்காலியில் ஒரு செம்பும் விளக்கும் சங்கும் வைத்திருந்தன. ஒவ்வொரு குழியிலும் ஒன்றே

இரண்டோ புத்தர் உருவங்களும் இருந்தன. இவற்றைத் தவிர நாணயங்கள், நகைகள், ரத்தினங்கள் ஆகியவைகளும் அழகு செய்தன. கல்பெட்டியில் ஸ்தூபியொன்றும் வேறு சில பொருள்களும் இருந்தன.

இங்கே கண்டெடுத்த நான்கு வெண்கலக் குதிரை வீரர் உருவங்கள் இதுவரை இந்தியாவிலும் இலங்கையிலும் எங்கும் கிடைக்காதவை. இந்த உருவங்களில் ஒன்று மிகவும் சிறந்த முறையில் அமைந்த வார்ப்படம். குதிரை வீரன் கேடயமும் வாளும் கையிலேந்தி நிற்கிறான்; பின்புறத்தில் ஒரு பெண் நிற்கிறாள். இது ஒரு பெண்ணை ஏதோ ஆபத்திலிருந்து காப்பாற்றும் வீரனின் உருவம் என்று தோன்றுகிறது. இவர்களை அசுவினி தேவர்கள் என்று நான் கருதுகிறேன். குழிகளில் இருக்கும் புத்தர் உருவங்களில் ஒன்றைக் கருங்கல்லில் செதுக்கியிருக்கிறார்கள். இதன் பின்புறத்தில் பால மன்னர்களின் காலத்தைச் சேர்ந்த நாகர எழுத்துக்களில் புத்த தர்மம் பொறித்திருக்கிறது. வட கிழக்கு இந்தியாவிலிருந்து இது இலங்கைக்கு வந்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். அமராவதிக் கல்லில் செதுக்கிய மற்றொரு புத்தர் உருவமும் இருக்கிறது. கி. பி. 1014 முதல் 1044 வரை ஆண்ட ராஜேந்திர சோழனின் காலத்து வெள்ளி நாணயங்களும் மத்திய காலத்துத் தங்க நாணயங்களும் இங்கே கிடைத்திருக்கின்றன. இங்கே கிடைத்த மற்றப் பொருள்களின் காலத்தை இன்னும் அறிய முடியவில்லை. பொதுவாக, தாதுகர்ப்பம் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கருதலாம். இலங்கைச் சரித்திரத்தைத் தெரிவிக்கும் மகாவம்சத்தில் முதலாம் விஜயபாகு (கி. பி. 1058-1114) என்னும் மன்னன் மகியங்கணையில் உள்ள விஹாரத்தைத் திருத்திக் கட்டினான் என்று ஒரு குறிப்பு இருக்கிறது. 11-ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய சோழ மன்னர்களினால் இலங்கையின் பல பௌத்த புண்ணிய ஸ்தலங்கள் சீர்குலைந்தன. அவற்றுள் மகியங்கணைத் தாதுகோபமும் ஒன்று. சோழர்களிடமிருந்து நாட்டை வென்ற முதலாம் விஜயபாகு பட்டத்துக்கு வந்ததும் முதல் முதலாக, பாழடைந்த மகியங்கணையைச் சீர்திருத்தியிருக்கலாம். இவன் காலத்திலேயே தாதுகர்ப்பத்தில் பல அரிய பொருள்கள் சேர்ந்திருக்கலாம். பால, அமராவதி முறையில் செதுக்கிய புத்தர் உருவங்களும் நாணயங்களும் மிகவும் பழையனவாக இருக்கின்றன. இவற்றைத் தவிர, கிடைத்த வேறு பல பொருள்களும் புராதனமானவை என்பது உறுதி.

இங்கே சிதைந்து கிடந்த வர்ணச் சித்திரத் துண்டுகளை எல்லாம் ஒன்று சேர்த்து முறையாக அமைத்தார்கள். அப்போது இலங்கையில் உள்ள மற்ற வர்ணச் சித்திரங்களோடு ஒப்பிடக் கூடிய பல உருவங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. ஒரு சித்திரத்தில் புத்தர் ஞான நிலையில் இருக்கும் போது மூவுலகங்களிலிருந்து பிரம்மாவும் பிற தேவர்களும் வந்து மரியாதை செலுத்துகிறார்கள். இப்படிப் புத்தரை வழிபடும் தேவர்களிடையே

விஷ்ணு இரு கைகளிலும் மலர்த் தட்டேந்தி நிற்கிறார்; பரமசிவன் சூலத்தைக் கையில் ஏந்தியிருக்கிறார். விஷ்ணுவின் முழு உருவத்தையும் கண்டுபிடிக்க 7 துண்டுகளைப் பொருத்தவேண்டி யிருந்தது. தேவர்கள் தவிர இன்னும் பல உருவங்களும்இதில் இருக்கின்றன. இந்தச் சித்திரங்களை மிகவும் உயர்ந்த முறையில் தீட்டியிருக்கிறார்கள். இவை 11-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என்று சொல்ல இடமுண்டு.

இதுவரை மகியங்கணையிலிருந்து கிடைத்திருக்கும் புராதனப் பொருள்கள் கலை, சித்திரம், சிற்பம் ஆகிய எந்தத் துறையிலும் மிகச் சிறப்புற்றும் சரித்திரப் பெருமையோடு விளங்குகின்றன.

மனுஷத்தனம்

ஒரு பஸ்ஸில் ஒரு 'சீட்' பாக்கி இல்லாமல் பிரயாணிகள் உட்கார்ந்துவிட்டார்கள். பஸ் புறப்பட்டது; பிறகு அது முதல் முதலாக நின்ற இடத்தில், டிரைவருக்குப் பின்னால் 'சீட்'டில் இருந்த ஒரு பிரயாணி இறங்கிப் போய்விட்டார். சில புதிய பிரயாணிகள் உள்ளே ஏறினார்கள். அவர்களில் முதலில் வந்தவர் தள்ளாத கிழவர். அவர் அந்தக் காலி 'சீட்'டில் போய் உட்கார்ந்தார்.

அடுத்தபடியாகப் பஸ் வேறிடத்தில் நின்றபோது ஒரே ஒரு பிரயாணிதான் ஏறினார். அவர் வாலிபர்தான் என்றாலும் நொண்டி. மிகவும் சிரமப்பட்டு உள்ளே வந்தார். எங்காவது காலி 'சீட்' இருக்கிறதா என்ற சுற்றிப் பார்த்தார். இராது போகவே டிரைவருக்குப் பின்னால் இருக்கும் இரும்புக் கம்பத்தைப் பிடித்துக்கொண்டு நின்றார்.

அப்போது அந்தத் தள்ளாத கிழவர் மெல்ல எழுந்து தம் 'சீட்'டில் அந்த நொண்டி வாலிபனை உட்காரச் சொன்னார்.

"வேண்டாம், தாத்தா. நீங்களே உட்காருங்கள்" என்றான் வாலிபன். கிழவர் புன்சிரிப்போடு, "பரவாயில்லை; உட்காரப்பா, உன்னைப்போல ஆசாமிக்கு இடங்கொடுக்காமல் இருக்கலாமா?" என்றார். வாலிபன் காலி 'சீட்'டில் சாய்ந்தான். இன்னொரு மூலையிலிருந்து இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பெண் மற்றப் பிரயாணிகளை ஒருதரம் வெறுப்போடு பார்த்துவிட்டுத் தன் 'சீட்' டிலிருந்து எழுந்து, "தாத்தா, நீங்கள் இப்படி வந்து உட்காருங்கள்" என்றாள்.

கிழவர், "பரவாயில்லை, அம்மா. நீ உட்கார்" என்றார்.

அந்தப் பெண், "இல்லை, தாத்தா, உங்களைப்போன்றவர்களுக்கு இடம் விடாவிட்டால், அது மனுஷத்தனமா?" என்றாள் எல்லாருக்கும் கேட்கும்படி.

கிழவர் அந்த இடத்தில் வந்து உட்கார்ந்து அவளை மனமார ஆசீர்வதித்தார். அவர் முகத்தில் அப்போது இருந்த ஆனந்தம் சொல்லி முடியாது.

—ராபர்ட் எச். ப்ரால்

டாக்டரே, சௌக்கியமா?

★

டாக்டர்களுக்கு எத்தனையோ கேஸ்; நமக்கோ நம் உடம்பு. அவர்களிடம் போய்க் கால்வலிக்க நிற்கும் போது, நம் மனத்தில் சில சமயம் பெரிய எரிச்சல் உண்டாகிறது. அதை எதிரொலி செய்கிறார் கோரி ஃபோர்டு என்பவர், 'நேஷன்ஸ் பிஸினெஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் எழுதியுள்ள இந்தக் கட்டுரையில்.

வருஷக்கணக்காக நான் வாய் திறவாமல் என் உடம்பை டாக்டரிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவர் அதில் ஊசி ஏற்றியிருக்கிறார்; பல பகுதிகளைப் படம் எடுத்திருக்கிறார்; அமுக்கிப் பார்த்திருக்கிறார்; எத்தனையோ விதமான மருந்துகளை உள்ளுக்கும் வெளிக்கும் கொடுத்திருக்கிறார். மணிக்கணக்காக டாக்டரின் அறையில் முணுமுணுக்காமல் உட்கார்ந்து எனக்குப் பழக்கம் உண்டு. பிறகு அவர் கூப்பிட்டதும் அமைதியாகப் போய் என் உடல் கோளாறுகளைத் துளியும் மறைக்காமல் சொல்லுவேன்.

சுழலும் நாற்காலியில் சாய்ந்து கொண்டு, அவர் மேஜைமேல் விரலால் தாளம் போடுவார். பெரிய கொட்டாவி விட்டுக் கொண்டே, "நீங்கள் நன்றாக இளைப்பாற வேண்டும்; வேறு ஒன்றும் இல்லை!" என்பார்.

எனக்கு எந்த நோயாக இருந்தாலும் அவர் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டிருப்பது எனக்குப் பிடிப்பதில்லை. அவரும் என்னைப் போலவே துயருற்ற முகத்தோடு இருந்தால் நல்லது என்று தோன்றும். அவர் வாயில் தர்மாமீட்டரை வைத்துவிட்டு நான் பேசலாமா என்று நினைப்பேன்.

அவரிடம் எனக்குப் பிடிக்காத மற்றொரு விஷயம், நான் போகும் போது அவர் இருக்கமாட்டார். அப்படி இருந்தாலும் இன்னும் யாரையாவது பரிசோதித்துக் கொண்டிருப்பார். நான் வெளி அறையில் காத்திருப்பேன். கடிகாரம் ஓடிக்கொண்டேயிருக்கும். டாக்டர் வீட்டுக்கு வந்து காத்திருந்த நேரத்தில் நான் ஏதாவது வேலை செய்திருந்தேனானால், அந்த வருமானத்தைக் கொண்டே டாக்டர் பில்லுக்குப் பணம் கொடுத்திருக்கலாம்.

ஒரு நாள் இப்படித்தான் எனக்கு ஜலதோஷம் பிடித்துக் கொண்டது. அதைப்பற்றி டாக்டரைக் கேட்கலாமென்று தீர்மானித்தேன். என் மனைவி என்னைத் தொந்தரவு செய்ததால்தான் நான் டாக்டருக்கு ஃபோன் செய்தேன். ஃபோனில் பேசிய உதவி டாக்டர், "இன்று நீங்கள் டாக்டரைப் பார்க்க முடியாது. அடுத்த வியாழக்கிழமை பகலில் 1-15-க்கு வாருங்கள்" என்றார். எந்த டாக்டருமே நோயாளிகள் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று சொல்ல மாட்டார்.

நான் அன்று ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு, சொந்த வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அரை மணிநேரம் முன்னதாகவே டாக்டர் வீட்டுக்குப் போனேன். போனதுமே வேலை முடிந்துவிடும் என்று எண்ணி, வெளி அறையில் உட்கார்ந்தேன். அந்த அறையில் எனக்கு முன்னால் ஒரு கிழவர் வந்து உட்கார்ந்திருந்தார். அவருக்கு ஏதோ பயங்கரமான தொத்து நோய்போல இருந்தது. போதாக் குறைக்கு அவர் என் முகத்துக்கு நேராக ஓயாமல் இருமினார். பொழுதுபோக்குக்குஅங்கே சில வைத்தியப் பத்திரிகைகளும், 1887-ஆம் வருஷத்து ஜூன் மாதத்திய பூகோளப் பத்திரிகையும் இருந்தன.

சரியாக 1-15-க்கு நான் டாக்டரை எதிர்பார்த்தேன். 1-25-க்கு எழுந்து அந்த அறையிலேயே குறுக்கும் நெடுக்கும் உலாவினேன். அங்கே வந்த டாக்டரின் வேலையாள் என்னைக் கடுமையாகப் பார்த்தான். 1-45-க்கு நான் துணிச்சலோடு வெளியே வந்து அவனைப் பார்த்து, "டாக்டர் எப்பொழுது வருவார், தெரியுமா?" என்று கேட்டேன். அவன் கிண்டலாகச் சிரித்துக்கொண்டே பதில் சொல்லாமல் போய்விடவே, நான் மறுபடியும் அந்த அறைக்குள் போய் உட்கார்ந்து, ஏழாவது தடவையாக, 'கால் பிளாடர் நோயை'ப் பற்றிய ஒரு கட்டுரையைப் படிக்கலானேன்.

பத்து நிமிஷம் கழித்து வாசலில் ஒரு கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம், "ஐயா உங்களைப் பார்ப்பார்; வாருங்கள்" என்று வேலையாள் கூப்பிட்டான். நான் டாக்டரின் அருகில் சென்று நாற்காலியில் உட்கார்ந்தேன்.

அப்பொழுது டாக்டர் யாருடனோ ஃபோனில் பேசிக்கொண்டிருந்தார். கவலைக்கிடமான நிலையில் அந்த நோயாளி இருப்பதாகத் தெரிந்தது. ரத்தம் பாய்ச்சுவதைப் பற்றியும், பிராண வாயுவை ஏற்றுவதுபற்றியும் டாக்டர் பேசினார். இந்த நிலையில் என் லேசான ஜலதோஷத்தைப்பற்றி எப்படிச் சொல்வது என்று திகைத்தேன்.

டாக்டர் தமது மூக்குக் கண்ணாடியின் வழியே என்னை உறுத்துப் பார்த்து, "உங்களுக்கு என்ன செய்கிறது?" என்றார்.

நான் மென்று விழுங்கியபடி, "கடுமையான ஜலதோஷம் என்னைப் பிடித்துக்கொண்டு......" என்று இழுப்பதற்குள், டெலிபோன் மணி அடித்தது.

டாக்டர் மறுகோடியில் இருந்த உதவி டாக்டரோடு பேசினார். யாருக்கோ சற்று நேரம் முந்தித்தான் ஆபரேஷன் ஆகி, நோயாளியின் நிலைமையில் பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன; அதைச் சரிப்படுத்துவதுபற்றி டாக்டர் விஞ்ஞான முறையில் பேசினார்.

இதையெல்லாம் பார்த்ததும் எனக்கு ஜலதோஷம் இருப்பதாகவே தெரியவில்லை. "இங்குள்ளவர்களைப் பார்த்ததுமே இதோ நான் ஆஸ்பத்திரிக்கு வருகிறேன்" என்று சொல்லி டாக்டர் ஃபோனை வைத்தார்.

பிறகு என்னைப் பார்த்துக் குனிந்து, "நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்றார்.

"ஒன்றுமில்லை, டாக்டர்! நான் மிகவும் ஆரோக்கியத்தோடு இருக்கிறேன். இந்த வழியே

போகும்போது உங்களைப் பார்த்துப் போகலாம் என்று எண்ணினேன். போய் வருகிறேன்'' என்று சொல்லி, உடனே அங்கிருந்து புறப்பட்டேன்.

நான் போனபோது வாசலில் இருந்த வேலையாள், ''டாக்டர் உங்களுக்கு பில் அனுப்புவார்!'' என்றான்.

உடனே எனக்கு முழங்காலில் வலி எடுப்பது போல் இருந்தது. டாக்டர் ஏதாவது மேலுக்குத் தடவ மருந்து கொடுப்பார் என்று மறுபடி உள்ளே போனேன்.

டாக்டரிடம் என் வலியைச் சொன்னதும் அவர் முழங்காலைப் பலமாகக் குத்திப் பார்த்தார்; தலையை ஆட்டிவிட்டு, ''சட்டையைக் கழற்றுங்கள்'' என்றார்.

கோட்டினுள்ளே கிழிந்திருந்த சட்டையை நான் டாக்டருக்குக் காண்பிக்க வேண்டியிருந்தது. ''முழங்காலில் வலி என்றால் லேசல்ல; சரியாக உடல் முழுவதையும் பரிசோதனை செய்ய வேண்டும்'' என்று கூறி, அவர் என் உடலின் ரத்த அழுத்தம், எடை முதலியவற்றைக் குறித்துக் கொண்டார். ரத்தப் பரீட்சைக்காகக் கொஞ்சம் ரத்தமும் எடுத்துக் கொண்டார். என் வயது, உயரம், பருமன் எல்லாவற்றையும் எழுதினார். அவரிடமிருந்து வீட்டுக்குப் புறப்பட்டபொழுது எனக்கு ஒரே சோர்வாக இருந்தது.

அவர் சொன்னபடி மறுநாள் அவரிடம் போனேன். ஒரு பெரிய காகிதத்தில் என் உடலைப்பற்றிய சகல விஷயங்களையும் அவர் ஆராய்ச்சி செய்து வைத்திருந்தார். ''உங்களுக்கு ஒன்றுமில்லை, ஸார்! முழங்காலில் கொஞ்சம் சுளுக்கு இருக்கிறது'' என்றார்.

இதனால்தான் எனக்கு டாக்டர்களைப் பிடிக்கவே இல்லை. எனக்கு என்ன தேவை டாக்டர்களிடம் போக? எனக்குள் பெருமை பூரிக்கிறது. ஆனால், இதென்ன? என்னவோ எனக்குத் தலை சுற்றுகிறதே; கண்ணெதிரே மின்மினி பறக்கிறதே; நாக்கு வறள்கிறதே; கால்கள் தடுமாறுகின்றனவே!

இது என்ன வியாதியோ? அடுத்த வியாழக்கிழமை பகல் 1-15 மணிக்கு மீண்டும் டாக்டரைப் பார்க்கலாமா?

குடி நீரும் கோழி முட்டையும்

பெட்டைக் கோழிகளுக்குக் குடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டால், அவைகள் முட்டை இடுவது குறையும். ஏனென்றால், கோழி முட்டைகளில் 65 சதவிகிதம் தண்ணீர்தான் அடங்கியிருக்கிறது.

'ஸையின்ஸ் டைஜெஸ்ட்'

காகிதத்தில் சிக்கனம்

பல்கேரிய உள்நாட்டு மந்திரி, காகிதச் சிக்கனத்துக்காக ஓர் உத்தரவு போட்டிருக்கிறார். ''கைது செய்யப்பட்ட அதிகாரிகளின் பெயர்களை இனிமேல் பத்திரிகைகளில் பிரசுரிக்கக் கூடாது; கைது செய்யப்படாத அதிகாரிகளின் பெயர்களையே இனிப் பிரசுரிக்க வேண்டும்'' என்பதுதான் அந்த உத்தரவு.

—'காரொனெட்'

இடியும் மின்னலும்

★

'இடி கேட்ட நாகம்போல்' என்று பயத்துக்கு உவமை சொல்லுவார்கள். நாகந்தானா இடிக்குப் பயப்படுகிறது? யாருமேதான் பயப்படுகிறார்கள். இடி அபாயத்துக்குத் தப்ப விஞ்ஞானிகள் சொல்லும் யோசனைகள் அடங்கிய இந்தக் கட்டுரைக்கு ஆதாரம்: (1) 'ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட்'; (2) 'பாப்புலர் ஸயின்ஸ்.'

சோ என்று மழை கொட்டுகிறது. கடும் புலிபோல் புயல் சீறியடிக்கிறது. சடபட சடார் என்று இடி இடிக்கிறது. இந்த நிலையில் யாருக்குத்தான் பயமாக இராது? இடியும் மின்னலும் பலமாயிருக்கும்போது, வீட்டில் உள்ளவரும் சரி, வெளியே உலவுகிறவரும் சரி, நடுங்குவது இயற்கை. இடி அபாயத்தில் சிக்காதிருக்க ஒவ்வொரு நாட்டிலும் பலவித எச்சரிக்கைகளை மக்கள் கைக்கொள்கிறார்கள். இடி இன்ன இடத்தில்தான் விழும் என்பதுபற்றி மக்களுக்குச் சில நம்பிக்கைகள் உண்டு. அவைகள் எல்லாம் சரி என்று சொல்வதற்கில்லை.

"இடி இடிக்கும்போது, ஜன்னலுக்குப் பக்கத்தில் நிற்காதே. எல்லா ஜன்னல்களையும் மூடிவிடு. மழைச் சாரல் வழியாக இடி வீட்டுக்குள்ளே நுழைந்துவிடும்" என்று சொல்வோர் உண்டு. இடியும் மின்னலுமாயிருக்கும் நேரத்தில், கையிலே கத்தரிக்கோல், கத்தி போன்ற இரும்புச் சாமான்கள் இருக்கக்கூடாது என்பவரும் உண்டு. படுக்கையில் படுத்துக்கொண்டு ஜன்னலையெல்லாம் மூடிவிட்டால் இடி ஒன்றும் செய்யாது என்று நினைப்பவர் இருக்கிறார்கள். இப்படி என்னென்னவோ அபிப்பிராயங்கள் உலவுகின்றன. ஆனால், இவையெல்லாம் ஆதாரமற்றவை என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்.

அமெரிக்காவில் ஒரு பெண் ஒரு ஸோபாவில்தான் படுத்துக்கொண்டிருந்தாள். வெறும் படுக்கையைவிட மர ஸோபா எவ்வளவோ பத்திரமானது. அப்படியிருந்தும் இடி தாக்கி அவள் மாண்டுபோனாள். இடி நேரே யாவது அவளுடைய வீட்டில் விழுந்ததா? அதுகூட இல்லை. வெளியே நின்ற ஒரு மரத்தின் மீது விழுந்தது. துணி உலர்த்து

வதற்காக அதில் கட்டியிருந்த ஒரு கம்பி வழியாக வீட்டுக்குள் நுழைந்தது. சுவரோடு ஒட்டிக் கிடந்த ஸோபாமீது தாவி, அந்தப் பெண்ணைக் கொன்றுவிட்டது. திறந்தோ மூடியோ ஜன்னல் எதுவுமே அங்கே இல்லை. கண நேரத்தில் பெண் மாண்டுவிட்டாள். பக்கத்திலே ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவளுடைய கணவர் சிறிது நேரம் அப்படியே நடுங்கித் திகைத்துப் போனார்.

இதிலிருந்து ஒரு விஷயத்தை நாம் முக்கியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டும். இடி என்பது என்ன? அது மின்சார சக்தி. பூமியைத் தேடி வருகிறது. அப்படி வரும்போது, எந்த வழியிலே மிகவும் குறைந்த எதிர்ப்பு இருக்கிறதோ அந்த வழியாக வருகிறது. ஜன்னலை விட்டுச் சமையலறைக்குள் ஒருவன் போய் நிற்கலாம். அங்கே இரும்புப் புகைக்கூண்டிருந்தால், அதுதான் அதிக அபாயமாகும். சுவர் ஓரத்தில் நிற்பதும் அபாயந்தான். வீட்டின் நடுக் கூடத்திலே நிற்பது தான் கூடியவரைக்கும் பத்திரமானது.

டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தால், இடி அபாயம் நேரக் கூடும். வீட்டுக்குப் பக்கத்திலே உள்ள உயரமான கம்பத்தின் வழியாக டெலிபோன் கம்பி வரலாம். கம்பத்தில் பாய்ந்து கம்பி வழியாக வீட்டுக்குள்ளே இடி நுழைந்துவிடலாம். ஆகவே, இடியும் மின்னலுமாக இருக்கும் போது டெலிபோனில் பேசாதிருப்பது நலம். ரேடியோ வைத்திருக்கும் வீட்டில் ஏரியல் கம்பி போட்டிருக்கிறதே, அதுவும் அபாயந்தானே என்று கேட்கலாம். அந்தக் கம்பியினால் அப்படி அபாயம் நேர்வது மிகவும் அபூர்வம். ரேடியோ ஏரியல் கம்பி மிக மெல்லியதாக இருக்கிறது. இடி அதைத் தாக்கியதும் அந்த வேகம் தாங்காமல் கம்பி உருகிப் போகிறது. இதுதான் அந்தக் கம்பியால் அதிக அபாயம் நேராதிருப்பதற்குக் காரணமோ என்று தோன்றுகிறது. என்றாலும் ரேடியோ ஏரியல் கம்பியருகே நிற்காமல் எச்சரிக்கை கொள்வதும் நல்லதுதான்.

'நீங்கள் மின்னலைப் பார்த்துவிட்டால், இடிக்குத் தப்பினீர்கள்' என்று விஞ்ஞானிகள் சொல்வது வழக்கம். மின்னல் ஒளி எழும்போதே இடியோசையும் எழுகிறது. ஆனால், ஒளி அதிக விரைவாக நம்மிடம் வருகிறது. ஒலியோ மெதுவாக வருகிறது. மின்னல் மின்னியதற்கும் இடியோசைக்கும் இடையே எத்தனை ஸெகண்டுகள் சென்றனவோ அந்த ஸெகண்டுகளின் எண்ணிக்கையை 1,100 என்ற எண்ணால் பெருக்குங்கள். அந்தப் பெருக்குத் தொகை என்னவோ அத்தனை அடி தூரத்துக்கப்பால்தான் இடி இடித்தது என்று நீங்கள் தீர்மானிக்கலாம். உங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் மின்னிய பிறகு இடிக்கும் இடி முந்தியே எங்கேயோ விழுந்து தீர்ந்தது என்று நீங்கள் நிச்சயம் செய்துவிடலாம்.

ஆனால், இடி எட்ட விழுந்ததால், உங்கள் இருப்பிடத்துக்கு அபாயமே இல்லை என்று நீங்கள் சந்தோஷப்பட்டுவிட முடியாது. நாலு வீடு தள்ளி விழுந்த இடி, உங்கள் வீட்டிலே தீயைக் கிளப்பி விடக்கூடும். இடி என்பது மின்சார சக்தி என்று முன்னமே

உங்களுக்குத் தெரியும். அது சிறிது தூரத்துக்கப்பால் பூமியில் பாயும்போதே உங்கள் வீட்டில் உள்ள இரண்டு சாதாரணக் கம்பிகளில் மின்சார கரண்ட் எழச் செய்யும். இதை 'இண்ட்யூஸ்டு கரண்ட்' என்று சொல்லுவார்கள். சமதூரத்தில் இருக்கும் இரண்டு கம்பிகளில் இப்படி 'இண்ட்யூஸ்டு கரண்டு' பாயும்போது, அவைகளுக்கிடையே மின்சாரப் பொறி பறக்கும். அந்தப் பொறியால் தீ விபத்து உண்டாகலாம்.

இடி பலவித லீலைகளைப் புரிந்து விடுகிறது. ஐக்கிய அமெரிக்காவின் தெற்குப் பகுதியில், ஒரு மாதாகோயிலின் புகைக் கூண்டில் இடி விழுந்தது. அதன் அடியிலிருந்த அடுப்புக் கதவைப் பெயர்த்தது. பக்கத்திலிருந்த சமய பாடசாலை அறைக்குள் நுழைந்தது. அங்கிருந்த சாமான்களையெல்லாம் கலகக்காரக் குண்டர்களைப் போல் உடைத்து நொறுக்கி நாலுபக்கமும் வீசி எறிந்தது. அப்படி நொறுங்கிய ஒரு நாற்காலியின் கால் ஒன்று அறையின் மச்சில் போய் ஸிமெண்டில் குத்திப் பதிந்து அப்படியே தொங்கியது. நல்ல வேளையாக அப்போது கலாசாலையில் பாடம் நடந்துகொண்டிருக்கவில்லை; யாருமே இல்லை.

இடி நேரே வந்து தாக்கும் போது அளவுகடந்த உஷ்ணம் ஜனிக்கிறது. ஒரு பச்சை மரத்தில் இடி விழுந்தால், அதில் உள்ள சாறெல்லாம் கண நேரத்தில் பொங்கி ஆவியாய்ப் போய்விடும். செங்கல் புகைக் கூண்டில் இடி விழுந்தால், அந்தச் செங்கல் ஈரமெல்லாம் ஆவியாகிப் புகைக் கூண்டு வெடித்துத் துகள் துகளாகி விடும்.

இடி சில சமயம் மிகவும் குறும்புத்தனமாக நடந்துகொள்ளும். கானடா நாட்டில் ஒரு விபரீதம் நிகழ்ந்தது. ஒரே பெஞ்சியில் மூன்று பேர் அடுத்தடுத்து உட்கார்ந்திருந்தார்கள். இடி இடித்து நடுவில் இருந்தவனைக் கொன்றது. அவனுக்கு இடது புறம் இருந்தவனைச் சுட்டுக் காயப்படுத்தியது; வலது புறம் இருந்தவனை மட்டும் ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டது. மாண்டவனின் உடம்பில் இடி தாக்கிய அடையாளம் ஏதுவுமே இல்லை. இடியால் மாண்டவர்களின் உடம்பே பெரும்பாலும் இப்படித்தான் சுத்தமாக இருக்கும். ஆனால், காயம் பட்டவனின் கால் இரண்டும் ஒரே கொப்புளமாய்க் கொப்புளித்து விட்டது. அவனுடைய கால் சட்டையும் ஒரு கால் பாதரட்சையும் கிழிந்துவிட்டன.

குல்ஸா என்னும் இடத்தில் பாட்ரீஷியா வில்ஸன் என்ற பதினாலு வயதுப் பெண் ஒருத்தி பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருந்தாள். இடி விழுந்து, அவளுடைய ரெயின் கோட்டை நண்டபிண்டலாய்க் கிழித்துக் கந்தலாக்கி விட்டது. "புஸு புஸு என்று உடம்பில் ஏதோ ஊர்வதுபோல் தோன்றியது. தலையில் கொஞ்சம் வலி எடுத்தது. ஒரே கணத்தில் எல்லாம் சரியாய்ப் போய்விட்டது. நான் பள்ளிக் கூடம் சென்றேன்" என்றாள் அந்தச் சிறுமி.

இந்த விசித்திரங்களின் மர்மம் என்ன? எதிர்ப்பு மிகவும் குறைந்த ஒரு வழியிலே இடியின் மின்சாரம் பாய்கிறது. நேரே அந்த வழியில் உள்ளவரைக் கொல்கிறது. மிகவும் பக்கத்தில் உள்ள

வரைக்கூடத் தாக்காமல் விட்டுச் சென்றுவிடுகிறது. இவ்வளவு தான்.

மழை பெய்யும்போது வானத்தில் பளிச்சிட்டு ஒலிக்கும் அத்தனை இடிகளும் பூமியில் விழுவதில்லை. சில இடிகளே பூமியில் விழுகின்றன. மேல் தளத்தில் உள்ள ஒரு மேகத்துக்கும் அதற்குக் கீழே உள்ள ஒரு மேகத்துக்கும் மின்சாரம் பாய்ந்து இடி முழங்குவதுண்டு. அந்த இடிகள் அங்கேயே தீர்ந்து விடுகின்றன. எதாவது ஒரு மேகத்துக்கும் பூமிக்கும் இடையே மின்சாரம் பாயும்போது தான் பூமியில் இடி விழுகிறது. மொத்தம் இடிக்கும் இடிகளில் இப்படிப் பூமியில் விழுபவை சொற்பமே.

இன்னொரு வேடிக்கை: வானத்திலிருந்து பூமிக்கு மின்னல் அதிக வேகமாய்ப் பாய்வதாக நமக்குத் தோன்றலாம். உண்மை அது அல்ல. எலக்ட்ரான் என்ற மின் அணுக்கள் பாய்வதே மின்சாரம். 'நெகட்டிவ் சார்ஜ்' (எதிர் மின் ஏற்றம்) உள்ள பொருளிலிருந்து 'பாஸிட்டிவ் சார்ஜ்' (நேர் மின் ஏற்றம்) உள்ள பொருளுக்குத் தான் எலக்ட்ரான்கள் பாய்கின்றன. இடியின்போது மேகத்தில் ஏறியிருப்பது 'பாஸிட்டிவ் சார்ஜ்.' பூமியில் உள்ளதுதான் 'நெகட்டிவ் சார்ஜ்'. ஆகவே, மின்னல் தாவுவது உண்மையில் பூமியிலிருந்து மேகத்துக்கே. மணி ஒன்றுக்கு 2 கோடியே 20 லட்சம் மைல் வேகத்தில் இப்படித் தாவுகிறது. இதை அறியும்போது நமக்கு ஆச்சரியமாக இல்லையா?

இதெல்லாம் போகட்டும். இடி அபாயம் நேராமல் தப்பித்துக் கொள்ள என்ன வழி? இப்போதெல்லாம் எங்கும் இடி தாங்கி (லைட்னிங்-கண்டக்டர்) கட்டியிருக்கிறார்கள். இடி தாங்கி என்றால் வேறொன்றும் அல்ல. பெரும்படியாகச் சொன்னால், மின்னல் சுலபமாய்ப் பாயக்கூடிய தடித்த உலோகக் கம்பி ஒன்றின் ஒரு முனையை மிக உயரமாக ஆகாயத்தில் நிறுத்தி, மறு முனையைத் தரைக்குக் கொண்டு வந்து பூமிக்குள் ஆழமாகப் புதைத்துவிடுகிறார்கள். அதாவது இடிக்குச் சுலபமான பாதை அமைத்துவிடுகிறார்கள். பூமியை நோக்கி வரும் (உண்மையில் பூமியிலிருந்து வானத்துக்குத் தாவும்) இடி, அக்கம்பக்கமுள்ள வீடு முதலியவைகளைத் தாக்காமல் இந்தக் கம்பி வழியாகச் சென்று விடுகிறது.

"இடி இடிக்கும்போது, சாலையிலே நிற்கும் தனி மரத்தின் கீழே போய் அடைக்கலம் புகாதே" என்று சொல்வார்கள். உங்களைச் சுற்றிலும் உங்களைவிட உயரமான ஒரு பொருளும் இல்லாத வெற்றிடத்தில் நீங்கள் நிற்பதும் இதேபோல் அபாயந் தான். வெற்றிடத்தில் நிற்பது, தனி மரத்துக்கு நேர் கீழே போய் நிற்பது இரண்டும் அபாயமே. இரண்டுக்கும் ராஜியாக, தனி மரத்துக்குச் சிறிது சமீபத்தில் போய் நிற்பதுதான் நலம். பல மரங்கள் இருக்கும் தோப்பில், மிக உயரமான மரத்தை விட்டு விலகி நிற்பது நலம்.

இதைப்போலவே கம்பி வேலிகளை விட்டுத் தூர விலகிவிட வேண்டும். கம்பி வேலிகளில் மின்னலின் மின்சாரம் சுலபமாய்ப் பாயும். அவைகளின் இரும்புத் தூண்கள், மின்னலைக் கவரும்.

தனி வீட்டில் போய்ப் புகுந்து கொள்வதும் அபாயந்தான். தண்ணீர்க் குழாய் போட்டு, மச்சிலிருந்து இடி தாங்கிக் கம்பி அமைக்கப் பெற்ற நவீன மோஸ்தர் வீடு தனித்திருந்தாலும் பெரும்பாலும் இடி அபாயம் நேராது.

சுருக்கமாக ஒரு நிபுணர் பின் கண்ட எச்சரிக்கைகளைச் சொல்லுகிறார்:

இடி இடிக்கும்போது, பைஸிக்கிளில் போக வேண்டாம்; வயலில் வேலை செய்ய வேண்டாம்; வெளியே திரிய வேண்டாம்.

வெளியிலே அகப்பட்டுக் கொண்டால், அதிக உயரமில்லாத ஒரு வீட்டுக்குள் புகலடையுங்கள்; அல்லது தரையோடு தரையாகப் படுத்து விடுங்கள்.

உயரமான தண்ணீர் 'டாங்கி'கள், கம்பி வேலிகள் உயரமான பாறைகள் இவைகளுக்கு அருகே செல்லாமல் தூர விலகி இருங்கள்.

தண்ணீரில் நீஞ்சிக்கொண்டிருந்தால், சட்டென்று கரையேறுங்கள்; படகில் சென்று கொண்டிருந்தால், உடனே தரைக்கு அதை வலித்துக் கொண்டு வந்துவிடுங்கள். தண்ணீருக்குள்ளோ, அதற்கு மேலேயோ இருப்பது அபாயம்.

வீட்டுக்குள்ளே இருந்தால், உயரமான இரும்படுப்பு, புகைக் கூண்டு, மாடி, தண்ணீர்த் தொட்டி, கதவு, ஜன்னல் இவைகளை விட்டு விலகி இருங்கள்.

கார், பஸ், ரெயில் வண்டி இவைகளில் இருந்தால், வெளியேற வேண்டாம். இவைகள் கூடியவரைக்கும் பத்திரமானவை. இவைகளிலிருந்து இறங்க நேர்ந்தால், ஒரு கால் இவைகளிலும் மறு கால் பூமியிலும் ஒரு கணங் கூட இருக்காதபடி சட்டென்று குதித்து விடுங்கள்.

யாரையாவது இடி தாக்கி, ஸ்மரணையற்றுக் கிடந்தால், செத்துவிட்டதாக எண்ணிக் கை விட்டு விட வேண்டாம். செயற்கை முறையில் மூச்சு ஊட்டிப் பாருங்கள். மூச்சு வந்த பிறகு தீக் காயங்களுக்குச் சிகிச்சை செய்யத் தொடங்கலாம்.

புதிய காஷியர்

வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனத்துக்குள் ஒரு வியாபாரி அவசரம் அவசரமாக நுழைந்தார். "நான் ஒரு காஷியரைத் தேடுகிறேன்" என்று பரபரப்புடன் சொன்னார்.

"ஏன்? நேற்றுத்தான் ஒருவரை உங்களிடம் அனுப்பினோமே!"

"ஆமாம்; அனுப்பினீர்கள். அவரைத்தான் இப்போது தேடுகிறேன்."

— 'போர்க்குவாய் பால்', ப்ரன்ஸல்ஸ்.

ஆஸ்பத்திரியிலும் குழந்தைகளை வேடிக்கையும் விளையாட்டுமாய் நடத்துகிறார்கள்!

ஆரோக்கியமும் ஆனந்தமும்

★

நோயாளிக் குழந்தைக்கு வேண்டியவை இந்த மூன்றுந்தான்: 'அதன் தாய் கூடவே இருக்க வேண்டும்; தன்னை யாரும் அடித்து மிரட்ட மாட்டார்கள், அன்போடுதான் இருப்பார்கள் என்று அவ்வப்போது சொல்லி உற்சாக மூட்டி வரவேண்டும்; உடம்பு குணமாகி வருகிறது என்று அதற்குத் தெம்பு ஊட்ட வேண்டும்' - குழந்தைகளின் மனத்.தத்துவ சம்பந்தமாக ஆராய்ந்த அன்னா ஃப்ராய்டு இப்படிச் சொல்லியிருக்கிறார்.

லண்டனிலுள்ள கைஸ் ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் டாக்டர் ரோனால்டு மக்கீத் என்பவர் இந்த உண்மையைத் தம் அநுபவமூலம் கண்டறிந்து வருகிறார். நோயாளிக் குழந்தைகள் ஆஸ்பத்திரியில் நீண்ட நாள் இருந்தாலும் சரி, கொஞ்ச காலமே இருக்க வேண்டியிருந்தாலும் சரி, என்ன பலன் ஏற்படுகிறது என்பதைப் பல வருஷமாக அவர் ஆராய்ந்து வருகிறார். 'தாயையும் வீட்டையும் விட்டுப் பிரிந்திருப்பதால்தான் குழந்தையின் உடம்பு குணமாக நாளாகிறது என்பது அவர் அநுபவம்.

குழந்தையின் மனத்தில் குறை எதுவும் இராதபடி அதன் உடம்பு விரைவில் குணமாக வேண்டுமானால், பெற்றோர்கள் அதை அடிக்கடி வந்து பார்த்துப் போக அநுமதிக்க வேண்டும்; நாமேகூட அவர்களை இப்படி வந்துபோகும்படி சொல்ல வேண்டும். கைஸ் ஆஸ்பத்திரியில் மூன்று வருஷமாக இப்படித் தினந்தோறும் பெற்றோர்

நாக்கை நீட்டுவதில் சிறுவனுக்கு ஒரு களிப்பு

மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம் நெ. 15), ஸெண்ட்ரல் ஆஃபீஸ் அவ் இன்ஃபர்மேஷன், லண்டன்.



எல்லாக் குழந்தைகளுக்குமே ஆடுங் குதிரையிடம் மிகுந்த விருப்பம்

களுக்குத் திருப்தி ஏற்படுகிறது. தாய்மாரோ நெருங்கிய உறவினரோ வந்து பார்க்காத குழந்தைகளின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். இந்த விஷயத்தில் ஆங்கில டாக்டர்கள் எவ்வளவு சிரத்தையாக இருந்து உழைக்கிறார்கள் என்பதைச் சமீபத்தில் சினிமா படமாக எடுத்து, சிச்செஸ்டரிலுள்ள குழந்தை ஆரோக்கிய நிலையம் ஒன்றில் காட்டினார்கள். 'இரண்டு வயதுக் குழந்தை ஆஸ்பத்திரிக்குப் போகிறது' என்ற தலைப்புள்ள இந்தப் படத்தை 40 நிமிஷ நேரம் காட்டினார்கள். லண்டனிலுள்ள டாவிஸ்டாக் கிளினிக் என்ற ஆரோக்கிய நிலயத்தில் சில காலம் ஆராய்ச்சி செய்து வந்த ஜேம்ஸ் ராபர்ட்ஸன் என்பவர் எடுத்த படம் இது. எட்டு நாள் அந்த நிலயத்தில் வந்து தங்கிச் சிகிச்சை பெற்ற ஒரு குழந்தை எப்படி நர்ஸுகளோடு பழகுகிறது, தன் பெற்றோர் வந்து பார்க்கும்போது எப்படி நடந்து கொள்கிறது என்று அதில் விவரமாகக் காணலாம்.

"நாலு வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு அடிக்கடி அவர்களின் தாய்மார் வந்து பார்த்தால் என்ன உற்சாகம் தெரியுமா? அதனால் விரைவில் உடம்பு தேறி விடுகிறது" என்று கைஸ் ஆஸ்பத்திரியில் குழந்தைகள் பகுதியில் நர்ஸ் வேலை பார்க்கும் மிஸ் டன்காம்ப் என்ற பெண்மணி சொல்கிறாள். சின்னஞ் சிறு குழந்தைக்கு என் அது ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமென்று என்ன தான் தெளிவாகச் சொன்னாலும் புரியுமா? தன்னை எதற்காகவோ இப்படி வதைக்கிறார்கள் என்று தான் அது எண்ணிக்கொண்டிருக்கும். ஆனால் தன் தாய் அவ்வப்போது வந்து கவனித்துக் கொண்டே யிருந்தால் அதற்குச் சற்று ஆறுதலாக இருக்கும்.

கைக் குழந்தைளாக இருந்தால் தாய்மார் ஒரு நாளைக்குப் பலதரம் பால் கொடுக்கவும் குளிப்பாட்டவும் ஏதாவது சொல்லிச் சமாதானப் படுத்தவும் ஆஸ்பத்திரிக்கு வர வேண்டியிருக்கும். சில சமயம் அங்கேயேகூட இருக்கவேண்டி வரும். இதனால் குழந்தைக்கு நன்மை ஏற்படுவதோடு தாய்க்கும் மன நிம்மதி இருக்கும்.

கைஸ் ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறவர்கள் எல்லாருமே

குழந்தை சந்தோஷமாகக் காலந் தள்ளத் தங்களால் என்ன என்ன செய்ய முடியுமோ அவ்வளவும் செய்கிறார்கள். பெரிய டாக்டராக இருந்தாலும் சரி, காவலாளாக இருந்தாலும் சரி, ஏதாவது ஒரு குழந்தையோடு குலாவிக்கொண்டு தான் இருப்பார்கள்.

நோயாளிகளாகக் கிடக்கும் இந்தமாதிரி குழந்தைகளுக்குச் சில சமயம் போது போகாது. இதற்காகக் கைஸ் ஆஸ்பத்திரியில் ஒரு சின்னப் பள்ளிக்கூடமே நடத்துகிறார்கள். இங்கே தங்கள் சக்திக்கேற்றபடி படுக்கையில் சாய்ந்துகொண்டோ நாற்காலியில் உட்கார்ந்துகொண்டோ குழந்தைகள் தாங்கள் அரைகுறையாக விட்ட பாடத்தைத் தொடர்ந்து படிக்கலாம். தங்களை யாரும் வற்புறுத்திப் படிக்கச் சொல்லாவிட்டாலும் உடம்பு சற்றுக் குணமானதும் தாங்களாகவே படிப்பில் கவனம் செலுத்துகிறார்கள். சீக்கிரமாகவும் விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளுகிறார்கள். வீட்டுக்குத் திரும்பும்போது பெற்றோர்களிடம் தாங்கள் படிப்பில் முன்னேறியிருப்பதைக் காட்டுவதில் அவர்களுக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?

இப்போதெல்லாம் இங்கிலாந்திலுள்ள மற்ற ஆஸ்பத்திரிகளிலும் தினந்தோறும் பெற்றோர் வந்து போக அநுமதிக்கிறார்கள்; பெற்றோர்களே குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளவும் வசதி செய்து கொடுக்கிறார்கள்.

இத்தனை பேர் அடிக்கடி வந்து போனாலும் வெளியிலிருந்து அப்படி ஒன்றும் தொத்து நோய்கள் ஆஸ்பத்திரியில் பரவிவிட்டதாகத் தெரியவில்லை.

வீராவேசப் பிரதிநிதிகள்

நம் பார்லிமெண்டில் எல்லாம் உப்புச் சப்பில்லாமல் விவாதம் செய்துகொண்டிருக்கிறார்களே, இப்படி அல்ல ஃப்ரெஞ்சு மக்களின் பிரதிநிதி சபையான டெபுடிகள் சேம்பர். இதோ இது அதன் 1951-ஆம் ஆண்டின் ரெக்கார்டு:

ஸோஷலிஸ்டுகள்தான் ரொம்ப நல்லவர்கள். எதிரிகளைப் 'பொய்யர்' என்று 97 தடவை மட்டும் திட்டினார்கள்.

கம்யூனிஸ்டு வசவுகள் இவை: 'அயோக்கியன்' என்று 100 தடவை; 'கொலைகாரன்' என்று 179 தடவை; 'ஃபாஸிஸ்ட்' என்று 272 தடவை; 'வெட்டியான்' என்று 272 தடவை; 'துரோகி' என்று 8 தடவை; அச்சிடத்தகாத திட்டுக்கள் 311 தடவை.

வலதுசாரிக் கட்சியினர் திட்டியது 'ஸ்டாலின் டவாலிகள்' என்று 32 தடவை; 'ஊசல் கறி வியாபாரிகள்' என்று 17 தடவை; 'வெறியர்கள்' என்று 21 தடவை; 'துரோகிகள்' என்று 21 தடவை; 'அயோக்கியர்கள்' என்று 128 தடவை; 'காலிகள்' என்று 120 தடவை.

கம்யூனிஸ்டுகளும் அவருடைய எதிரிகளும் சபையிலே 37 தடவை குஸ்திச் சண்டையும் போட்டார்கள்.

—எல். எஸ்., 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்.'

காதலர் தூதன்

சீலா சட்டர்ஜீ

இந்த அம்மாளின் கதைகளில் பெரும்பாலும் அலாதியான ஒரு கிண்டல் இருக்கும். இதுவும் அப்படிப்பட்ட ஒன்றுதான்.

"நீ அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாது, சுமி!" என்றார் அவனுடைய தந்தை விரஜநாதர்.

"என் அப்பா, நான் அவளை மணப்பதற்கு என்ன தடை?" என்று கல்லதனமாகக் கேட்டான் சுமித்திரன்.

"அது நம்முடைய குலத்துக்கு விரோதம்; நம்முடைய சாதிக்கு விரோதம்!" என்று சொல்லி, அந்த விஷயத்தை விரஜநாதர் அசட்டையாகத் தள்ளிவிட்டார். மங்கோலிய வம்சத்துத் தமது கம்பீரமான முகத்தை அவர் தினசரிப் பத்திரிகைக்குள்ளே மறைத்துக்கொண்டு, கிரிக்கெட் பந்தயத்தைப்பற்றிய விவரத்தை உரக்கப் படித்தார். மகன் தம் எதிரில் நிற்பதையே அவர் இப்படி மறந்துவிட முயன்றார்.

சுமித்திரன் நேராகத் தன் படுக்கையில் போய்த் தொப்பென்று விழுந்தான். அவனுக்கு இனி வாழ்விலே சுவை இருப்பதாகத் தெரியவில்லை. சுவரில் புழுபூச்சிகளை நோக்கித் தாவும் பல்லியைப் பார்த்தபடி அவன் படுத்திருந்தான். தந்தையைவிடச் சற்று உயரம் என்பதைத் தவிர, அவனுடைய உருவம் அவருடைய உருவத்தைப் போலவே இருந்தது. பக்கத்து வீட்டு அஞ்சலியைத்தான் அவன் காதலித்திருந்தான். அவள் அப்பொழுது பி. ஏ. ஹானர்ஸ் கடைசி வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். இனிமையான குரல். நன்றாக நடனமாடுவாள். சுமித்திரனுடைய கண்ணுக்கு அவள் நிறைந்தவளாகத்தான் இருந்தாள். ஆனால் தந்தையை எதிர்த்தோ அவருடைய வீட்டை விட்டு விலகியோ அவளை மணந்துகொள்ளும்படியான தீவிரம் அவனுக்கு இல்லை.

காதலர்களுடைய சம்பிரதாயத்துக்கு ஏற்றபடி தான் தற்கொலை செய்துகொண்டு, துளியும் இரக்கமில்லாத தந்தையை நன்றாகத் தண்டிக்கவேண்டும் என்று அவன் கருதினான். 'நீணிலந் தன்னை நீத்துப் போனபின்..' என்ற ரவீந்திரரின் பாடல் அவன் நினைவுக்கு வந்தது. அப்பொழுது என்ன ஆகும்? அஞ்சலி மனமுடைந்து புலம்புவாள். அவளுடைய நீண்ட கருங்கூந்தல் முதுகிலே புரளும். தனக்குப் பொருத்தமான அந்த ஊதா நிறச் சேலையை அவள் அணிந்துகொள்வாள். அதிகாரதோரணையிலேயே வாழ்ந்த தந்தை தம் செயலுக்கு வருந்தி அவனிடம் மன்னிப்புக் கேட்பார். சுமித்திரன் அதாவது அவனுடைய உடலற்ற

காப்பிரைட்: அமிர்தபஜார் (ஆங்கிலம்: 9-11-'52), கல்கத்தா.

ஆத்மா, இந்தக் காட்சி அனைத்தையும் பார்க்கும்.

இதெல்லாம் சரி; இந்த உயிரைப் போக்குவதற்கு வழி என்ன? விஷத்தை உண்பதா, குளத்திலே மூழ்குவதா, தூக்குப் போட்டுக்கொள்வதா அல்லது ரத்த நரம்புகளை வெட்டிக்கொள்வதா? இரண்டு கையாலும் மென்னியை நெரித்துக்கொண்டால் என்ன என்று சுமித்திரன் நினைத்துப் பார்த்தான். உடனே மூச்சு அடைக்கும்; தலை சுற்றும்; கழுத்து வலிக்கும்; அப்பப்பா, என்ன பயங்கர வேதனை! பெருமூச்சு வாங்க அவன் எழுந்து உட்கார்ந்தான்.

'சேச்சே! இப்படியெல்லாம் சாகவே கூடாது. வாழ்வு எவ்வளவு இனிமையானது! நமக்கோ இளம் வயசு. ஒருவருக்காக நாம் ஏன் சாக வேண்டும்? அதற்கு மாறாக, நம் வாழ்க்கையை ஓர் உயர்ந்த நோக்கத்துக்காக அர்ப்பித்துவிடலாமே! நமக்குக் கல்யாணமே வேண்டாம். காதல் முறிவு ஏற்பட்ட இளைஞர்களுக்கு நாம் பெருதவி செய்யலாம். நமக்குக் கிடைக்காத இன்பத்தைப் பிறருக்குக் கிடைக்கச் செய்யலாம்' என்று அவன் நினைக்கலானான்.

அவன் அஞ்சலியை மணக்கப் போவதில்லை என்று தெரிந்ததும் அவளுடைய பெற்றோர் இனி அவளை அவனோடு சேர விட மாட்டார்கள். ஆகையால் சுமித்திரன் அவளுக்குத் தன் காதலையெல்லாம் அள்ளிக் கொட்டி ஒரு நீண்ட கடிதம் எழுதினான். அடுத்த பிறவியில் கட்டாயம் சந்திப்போம் என்று அந்தக் கடிதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

இதற்குப் பிறகு அஞ்சலி அவனை எங்காவது தெருவில் சந்தித்தால் கண்களால் சுட்டுவிட்டு வேகமாகப் போய்விடுவாள். அவனுடைய தப்பு எதுவுமே இல்லை என்பது அந்த முட்டாள் பெண்ணுக்குப் புரியவில்லை. அவனோ தன்னுடைய பெருந் துன்பத்திலே ஆழ்ந்து எப்போதும் துயரமே வடிவாக இருந்தான். அவனிடத்தில் வருகிறவர்கள் அவனுடைய சோர்ந்த முகத்தில் ஒரு புன்னகையையும், வாயில் தேன்மொழியையும் கண்டார்கள். இன்பத்தை இழந்த இளங்காதலர்களுக்கு அவன் உதவ விரும்புவதை அவன் நண்பர்கள் எங்கும் விளம்பரப்படுத்தினார்கள். அதனால் இளைஞர்கள் அவனைப் பேட்டி காண வந்தார்கள்.

தார்ஜீலிங்குக்குப் போய், கொஞ்ச காலம் உல்லாசமாக இருந்தால் சோர்வு போய்விடும் என்று அவன் எண்ணினான். அவனுடைய தந்தையும் அதை மறுத்துப் பேசவில்லை. இரண்டொரு நாளில் அங்கே புறப்படுவதற்காக அவன் கம்பளிச் சட்டை முதலியவற்றை மூட்டை கட்டினான். அப்பொழுது அவனுடைய படுக்கையறையில் சொல்லாமல் கொள்ளாமல் ஓர் இளைஞன் நேராக வந்து நின்றான். சுமித்திரனுக்கு அவன் வந்தது சங்கடமாகத்தான் இருந்தது. எப்படி இந்த வேலைக்காரன் முன்னதாக அறிவிக்காமல் அவனை உள்ளே விட்டான்? ஆனால் இனி என்ன செய்வது? சுமித்திரன் வீரன்போல நிமிர்ந்து நின்று முகத்திலே முறுவலை வரவழைத்துக் கொண்டான். அந்த இளைஞனைப் பார்த்தவுடனே சொல்லப்போவது தெரிந்து

விட்டது. பல நாளாகத் தூக்கமில்லாதிருந்த அவன் கண்களைச் சுற்றிக் கறுப்பு வளையம் புலப்பட்டது. தலைமயிரைச் சீவிப் பல நாட்கள் ஆகியிருந்தன. உடைகளைப்பற்றி அவன் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

"உட்காருங்கள்" என்றான் சுமித்திரன்.

"என் பெயர் அநிருத்தன். நீங்கள்தான் எனக்கு உதவ வேண்டும். இல்லாவிட்டால் தற்கொலை தான் வழி. இதோ பாருங்கள்!" என்று சொல்லி, அவன் தன் சட்டைப் பையிலிருந்து ஓர் ஈய டப்பியை எடுத்தான. "பொட்டாஷியம் ஸயனேட்!" என்று கூறிய போது அவன் நாக்கு வறண்டது.



அவன் நெஞ்சழுத்தக்காரன் என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது. சுமித்திரன் தன் கம்பளிச் சட்டையைப் பெட்டிக்குள் திணித்துவிட்டு, "இப்படி அவசரப் பட்டால் நடக்குமா?" என்றான் அமைதியாக.

"வேறு வழி இல்லையே, ஸார்?"

"நான் சொல்வதைக் கேளுங்கள். நானும் ஒரு காலத்தில் காதலித்தது உண்டு; அப்புறம்.."

"அந்தக் கதை எனக்கும் தெரியும், ஸார்! உங்களைவிட எனக்கு உணர்ச்சி வேகம் அதிகம்."

"காதலின் உயர்வைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?" என்று கோபிப்பது போன்ற பாவனையில் சுமித்திரன் கம்பீரமாகப் பேசினான். அடுத்த கணமே அவன் தன்னை அடக்கிக்கொண்டு, "சரி, உங்களுக்கு நான் என்ன உதவிசெய்ய வேண்டும்?" என்றான்.

"இரண்டு வருஷமாக நான் பிரீதாவைக் காதலித்தேன். அவளுக்கும் என்னிடம் மாறாத காதல். ஆனால் இப்பொழுது, எங்கும் வழக்கமாக நடப்பது போல, அவளுடைய பெற்றோர்கள் தடை செய்கிறார்கள்."

"சாதி வித்தியாசந்தானே காரணம்?"

"இல்லை, நாங்கள் இருவரும் ஒரே சாதிதான். நான் அவளுக்கு ஏற்றவனல்ல என்று அவர்கள் சொல்கிறார்கள். பிரீதாவை என்னோடு தனித்து வந்துவிடும்படி நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். வறுமையிலும் நாங்கள் ஆனந்தமாக வாழ்வோம்."

"நீங்களே அவளிடம் நேரில் இதைச் சொல்லலாமே!"

"இரவும் பகலும் அவளுக்குக் காவல் போட்டிருக்கிறார்கள். கடிதங்கள் அத்தனையையும் உடைத்துப் பார்க்கிறார்கள். டெலிபோனில் அவளோடு பேசினால் டபக்கென்று ரிசீவரை வைத்துவிடுகிறார்கள். அவள் வீட்டில் என்னை வர விடுவதே இல்லை."

சுமித்திரனுக்கு மனம் கனிந்தது. 'பாவம், இவன் இவ்வளவு வருத்தப்படுகிறானே!' என்று எண்ணி, "பிரீதாவின் விலாசத்தை என்னிடம் கொடுங்கள். நீங்கள் வீட்டுக்குப் போய் நிம்மதியாகத் தூங்குங்கள். என்னால் முடிந்த அளவு செய்கிறேன். அவளுடைய பெற்றோரைப் பார்த்து நேரில் பேசுகிறேன்" என்றான்.

அநிருத்தன் வெளியே போனதும், இளங் காதலர்களின் நிலையைக் குறித்துச் சுமித்திரன் நீண்ட நேரம் வருந்தினான். இப்படிப்பட்ட பெற்றோர்களை ஒரு கடுஞ் சிறையில் அடைத்து, தம் மக்களின் காதல் விவகாரத்தில் அவர்கள் தலையிடாதபடி செய்துவிட்டால் என்ன என்றுகூட அவனுக்குத் தோன்றிற்று. அவன் தார்ஜீலிங் பயணத்தை உடனே ரத்து செய்தான். இந்த இளைஞனுடைய உயிரைக் காப்பது பெருஞ்செயல் அல்லவா?

அவன் பிரீதாவுக்கு டெலிபோன் செய்தான். யாரோ கடுமையான குரலில், "அந்தப் போக்கிரி அநிருத்தன்தானே பேசுவது?" என்று சொல்லி, ரிசீவரைப் பட்டென்று வைத்துவிட்டார்கள். சுமித்திரன் மறுபடி அவளைக் கூப்பிட்டுத் தான் இன்னான் என்பதை முதலிலேயே சொன்னான். பிரீதா போனுக்கு வந்து, இன்னிசைக் குரலில், "யாரது பேசுவது?" என்றாள். "நான் என்

துர்ப்பாக்கிய நண்பன் அநிருத்தனுக்காகப் பேசுகிறேன்'' என்றான் சுமித்திரன்.

''சுத்த அபத்தப் பேச்சு!'' என்று மொழிந்து, அந்த இன்னிசைக் குரல் அங்கிருந்து போய்விட்டது.

''ஏதாவது பயன் உண்டா?'' என்று அநிருத்தன் அவனை அடுத்த நாள் கேட்டான்.

''இதற்குள் ஏமாற்றமடைந்துவிட்டீர்களா என்ன? நீங்கள் அந்த விஷத்தின் வழிக்குப் போயிருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.''

''இல்லவே இல்லை; நான் சொன்ன சொல் தவறுகிறவன் அல்ல!''

''நான் இன்றைக்கு அந்தப் பெண்ணின் தந்தையைப் பார்க்கப் போகிறேன். உங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டாம். நான் ஏற்கனவே கபிலன், தினகரன், சம்பு முதலிய பலருக்கு உதவியிருப்பது உங்களுக்குத் தெரியும். என்னிடம் நம்பிக்கையோடு இருங்கள்.''

நாகரிகமான உடையினால் பெரியோர்களுக்குத் தன்னிடம் அபிமானம் விழும் என்பதைச் சுமித்திரன் நன்றாக அறிந்தவன். ஆதலால் அவன் தும்பைப் பூப் போன்ற வெண்மையான உடையணிந்து, பஞ்சாபி ஷர்ட்டின் மேல் ஒரு முத்துமாலை புனைந்துகொண்டான். அந்தச் சமயத்துக்கு அவன் தன் தந்தையின் காரை வாங்கிக்கொண்டான். பிரீதாவின் விலாசத்தை ஒரு சீட்டில் குறித்துக்கொண்டான்.

மத்தியதரக் குடும்பத்தார் வாழும் கண்ணியமான ஓர் இரண்டடுக்கு வீட்டில் அவள் வசித்து வந்தாள். அந்தப் பக்கத்தில் பெரும்பாலும் ரிடையரான அதிகாரிகளே இருந்தார்கள். பிரீதாவின் தந்தையும் அவர்களில் ஒருவர். அவருடைய பெயரை அநிருத்தன் சுமித்திரனுக்குச் சொல்லவில்லை. அவனும் அது அவசியமில்லாததால் கேட்கவில்லை. வேலைக்காரன் வீட்டுக்குள் தன்னை அழைத்துச் சென்றதும், தனக்குத் தெரியாத ஒருவரைப்பற்றிச் சுமித்திரன் குறிப்பிட விரும்பவில்லை. ஆகையால் அவன் மிகுந்த சங்கடத்தோடு பிரீதாவைப் பற்றியே விசாரித்தான். ''அதே ஐயா தானா இவர்?'' என்ற இன்னிசைக் குரலுக்கு, ''இல்லை, இவர் வேறு. பார்க்க மிகவும் ஜோராக இருக்கிறார்!'' என்று வேலைக்காரன் சொன்னான்.

பிரீதா வெளி அறைக்கு வந்தாள். அவள் உயரமாகவும் ஒல்லியாகவும் இருந்தாள். அவளுடைய கண்ணைப் பார்த்தால் கொஞ்சம் பொல்லாதவள்போல் இருந்தது. அவள் சிவப்பாகவும் அழகாகவும் இருந்தாள். சிரிக்கவேயில்லை. அவனுடைய நெஞ்சத்தின் ஆழத்தை அறிய விரும்பியவள் போல உற்றுப் பார்த்தாள்.

''நீங்கள் உட்காரலாமே!'' என்று மரியாதையாகப் பேசினான் சுமித்திரன். பிரீதா தன்னையே பார்க்க வந்திருப்பதுபோல அவனுக்குத் தோன்றிற்று. அவள் தன்னோடு சகஜமாய்ப் பேசவேண்டுமென்று, அநிருத்தனைத் தவிர மற்ற விஷயங்களை அவன் வரிசையாக எடுத்தான். ''உங்கள் தகப்பனார் வீட்டில் இருக்கிறாரா?'' என்று நடுவிலே கேட்டான். ''இல்லையே?'' என்று அவள் அமைதியின்றிப் பதில் சொன்

னாள். அவன் ஏன் வந்திருக்கிறான் என்பதை அவள் அறிய விரும்பினாள்; ஆனால் கேட்பதற்கு அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

"மிகவும் ஆபத்தில் கிடக்கும் ஒருவனுக்கு உதவி செய்ய நான் இங்கே வந்திருக்கிறேன்" என்று அவன் சொன்னதும், அவள் நிச்சிந்தையாக முறுவல் பூத்து, "அநிருத்தரைப்பற்றியா?" என்றாள்.

அவள் அநிருத்தனைக் காதலிப்பது இப்போது நன்றாகத் தெரிந்துவிட்டது. சுமித்திரன் தன் வேலையை இனி எளிதில் முடித்துவிடலாம். காதலின் உயர்ந்த நோக்கத்தைப் பற்றியும், தூய்மையைப் பற்றியும், பெற்றோரின் தடையை எதிர்த்து அவனை அவள் மணந்துகொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும், வறுமையைப் பொருட்படுத்தாமல் காதலின் மேன்மையை நிலைநாட்டி அவள் அவனுடன் வாழ வேண்டியதைப் பற்றியும் அவன் பெரிய பிரசங்கம் செய்தான்.

"அநிருத்தர் உங்களுக்கு மிகவும் வேண்டியவர்போல இருக்கிறது! எத்தனை நாளாக அவரை உங்களுக்குத் தெரியும்?"

"இரண்டு மூன்று நாளாகத் தெரியும். நாங்கள் நெருங்கிய நண்பர்கள். அவன் என்னுடைய சிறந்த நண்பன்" என்று கூறி, அவன் அவளை உற்றுப் பார்த்தான்.

அதற்குள் நடுத்தர வயதுள்ள ஒரு கனவானும் பெண்மணியும் அந்த அறையில் நுழைந்தார்கள். "இவர்கள் என் பெற்றோர்" என்று பிரீதா அறிமுகப்படுத்தினாள். அவள் தாய் சுமித்திரனைச் சந்தேகக் கண்ணோடு பார்த்தாள்.

"இவருடைய பெயர் எனக்குத் தெரியாது" என்று பிரீதா சகஜமாகச் சொன்னாள். அப்பொழுது அவள் தாய் சுமித்திரன் அருகில் உட்கார்ந்துகொண்டு, தன் கணவரைப் பக்கத்தில் அமரும்படி சமிக்ஞை செய்தாள்.

"இதற்கு முன்னால் என் பெண்ணை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று மூக்குக் கண்ணாடியின் வழியே சுமித்திரனைப் பார்த்துக்கொண்டு அவள் கேட்டாள்.

"ஒரு விழாவில் அவளைப் பாடக் கூப்பிடுவதற்காக வந்திருக்கிறேன்."

"அவளுக்குப் பாடவே தெரியாதே!"

"அப்படியானால் என்னிடம் சொன்னவர்கள் தப்பாகச் சொல்லியிருக்கிறார்கள்" என்று அவளோடு பல நாள் பழகியவன் போலச் சுமித்திரன் பேசினான்.

பிரீதாவின் தாய் ஒன்றும் விளங்காதவள் போல விழித்தாள். சுமித்திரன் போவதற்கு எழுந்து, "நான் சீக்கிரமே இன்னொரு நாளைக்கு வருகிறேன்" என்றான்.

"உங்கள் வீடு எங்கே?" என்று பிரீதாவின் தந்தை கேட்டார்.

"ஹரவிலாஸ் தெருவில் இருக்கிறேன். என் தகப்பனாரின் பெயர் விரஜநாதர்." தந்தை மிகவும் புகழ் பெற்றவராதலால் அவருடைய பெயரைச் சுமித்திரன் இந்த ஆபத்தான சமயத்தில் கூறினான். அதற்குத் தக்க பயன் ஏற்பட்டது.

"நில்லுங்கள், சற்று நில்லுங்கள்! துவாரபுரம் ஜமீன்தார் விரஜநாதர்தானே?"

"ஆமாம்."

"அடடா! நாங்கள் பழைய நண்பர்களாச்சே! காலேஜில் படித்த நாளிலிருந்து அவரை

எனக்குத் தெரியும். நீங்கள் இப்படியே போகக்கூடாது!'' என்று பிரீதாவின் தகப்பனுர் அவனை நிறுத்திஞர். அவள் தாய் பட்சணமும் தேநீரும் கொண்டுவந்து வைத்தாள்.

அநிருத்தன் ஒவ்வொரு நாளும் துரத்தவே சுமித்திரன் அவர்கள் வீட்டுக்குப் போய், பிரீதாவின் தந்தை ஓயாமல் பழைய நாள் சரித்திரத்தைச் சொல்வதை அலுக்காமல் கேட்டான். அவளுடைய தாய் வெவ்வேறு பத்திரிகைத் தலையங்கங்களை ஒப்பித்துத் தற்கால அரசியலைப் பற்றிப் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டான். இனிமேல் தாராளமாகச் சொல்லலாம் என்ற நிலை வந்ததும், அவர்களிடம் அநிருத்தனைப்பற்றிப் பேசினுன்.

"ஐயைய, அவன் பஞ்சைப் பயலாச்சே! அவனுடைய சித்தப்பா அவனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார். உங்களுக்குத் தெரியாதா? அவர்தான் அவனை வளர்த்தவர். இப்போது அவன் அவருக்கே அடங்குவதில்லை. அவனுக்குப் படிப்பில்லை. எஸ். எஸ். எல். ஸி. க்கு மூன்று தடவை போய் பாஸ்செய்தான். அக்கம் பக்கத்துப் பெண்களுக்கு அவன் ஓயாத தொல்லை கொடுப்பான். பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு அவன் அவர்களைப் பார்த்துக் கைதட்டிக் கண்டபடி பேசுவான். ஒரு தடவை அவன் நல்ல அடி வாங்கினுன்; ஆயினும் புத்தி வரவில்லை'' என்ருர் பிரீதாவின் தந்தை.

வேறு வழியில்லாமல் வீடு திரும்பிய சுமித்திரன், அநிருத்தனைப்பற்றிய தன் கொள்கைகளை மாற்றிக் கொண்டான். உலகம் மக்களிடம் மிகவும் கடுமையாக நடந்து கொள்கிறது. அது மதிக்கும் பொருள்கள் அனைத்தும் குப்பை. அநிருத்தனிடம் அன்பு இல்லையா, உணர்ச்சி இல்லையா? கலாசாலைப் படிப்பினுல் என்ன பயன்? நேரே பிரீதாவிடம் பேசுவதுதான் சரி என்று சுமித்திரன் தீர்மானித்தான். இந்தப் பரீட்சையில் அநிருத்தன் தேர்ச்சி பெறுவான். அவனுடைய வற்றிய கையில் இருந்த பொட்டாஷியம் ஸயனேட் டப்பி ஞாபகத்துக்கு வரவே, சுமித்திரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அடுத்த ஞாயிறன்று பிரீதாவின் பெற்ருேர் ஒரு கல்யாணத்துக்குப் போகும் செய்தி சுமித்திரனுக்குத் தெரிந்திருந்தது. பிரீதா வீட்டில் தான் இருக்கப் போகிருள். ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்தில் அவள் அநிருத்தனேடு தனியே ஓடிப் போகும் ஏற்பாட்டை அவன் செய்ய எண்ணினுன். மணமானதும் பெற்ருேர்களின் கோபம் போய் விடும். இது உலக இயல்பு.

அவன் தனிமையில் பிரீதாவைப் போய்ப் பார்த்தான். "அநிருத்தன் நம்பிக்கையை இழந்துவிட்டான். இனி நாள் கடத்துவதில் பயனில்லை. அடுத்த வெள்ளிக்கிழமை நான் வாசலில் டாக்ஸியோடு வருகிறேன். நீ உன் பெற்ருேருக்குத் தெரியாமல் பெட்டி பேழையுடன் கிளம்பிவிடு. ரிஜிஸ்திரார் ஆபீசுக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன். காதலுக்காக நீ என்ன தியாகம் செய்தாலும் அது முடிவில் உனக்கு அளவில்லா இன்பத்தையே தரும்'' என்ருன்.

"இதில் உங்களுக்கு அநுபவம் இருக்கிறதுபோலும்! என் காலை வேளையில் போகக் கூடாது?''

"அப்பொழுது கண்டுபிடித்து விடுவார்கள்."

"நான் வீட்டிலிருந்து காதலனோடு ஓடுகிறேன் என்று ஜனங்களுக்கு எப்படித் தெரியும்? நான் எங்கோ படம் பார்க்கப் போவதாக அவர்கள் நினைக்கலாமே!"

"அநிருத்தனுக்கு நள்ளிரவு தான் சரியான நேரமாகப் படுகிறது. அதனால்—."

பிரீதா அவனை ஒளி வீசிய தன் கண்களால் உற்றுப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

"வெள்ளியன்று நள்ளிரவில் இங்கே வருவேன்" என்றான் சுமித்திரன். பிரீதா சரியென்று தலையசைத்தாள்.

வெள்ளிக்கிழமை மாலையில் அநிருத்தன் சுமித்திரனுடைய வீட்டுக்குச் சென்று, அங்கிருந்து இருவரும் இரவில் பிரீதாவின் வீட்டுக்குப் போவதாக ஏற்பாடு. சுமித்திரன் மணிக்கணக்காகக் காத்திருந்தும் அநிருத்தன் வரவே இல்லை. ஆறாத் துயரத்தோடு சுமித்திரன் நள்ளிரவிலே பிரீதாவின் வீட்டுக்குப் புறப்பட்டான். அநிருத்தன் ஒருவேளை அங்கே இருக்கலாமென்று நினைத்தான்.

சுமித்திரன் போனபொழுது பிரீதா, தன் வீட்டு வெளிவாசலில் கையில் ஒரு பெரிய பெட்டியோடு காத்திருந்தாள். அவள் கறுப்புச் சேலை உடுத்திருந்தாள். முகத்தைத் தலைப்பினால் மூடிக்கொண்டிருந்தாள். இந்த நிலையில் அவளைக் கண்டதும் சுமித்திரனுடைய உடல் சிலிர்த்தது. உண்மையான காதலும் விபத்தும் தீரமும் கலந்த திடுக்கிடும் சம்பவம் இது. ஆனால் அநிருத்தன் இந்தக் காட்சியைச் சுவையற்றதாக்கி விட்டான். சுமித்திரன் அவளிடம் என்ன சொல்வது?

"சீக்கிரம், இதை எடுத்துக் காரில் வையுங்கள்" என்று பெட்டியை நீட்டியபடி, பிரீதா அவன் காதோடு முணுமுணுத்தாள். இருவரும் டாக்ஸியில் உட்கார்ந்த பிறகு, அநிருத்தன் வராமையை அவன் அவளுக்குத் தெரிவித்தான். அவனுக்கு என்ன ஆபத்தோ? இனி அவள் என்ன செய்வது? அவள் இருட்டிலே செய்வகையறியாது விழித்தாள். அவளுடைய பட்டுச் சேலையின் முனை காற்றில் அடிபட்டு அவன் முகத்தின்மேல் வீசியது. அதனால் அவனுக்குப் புதிய துன்பம் சேர்ந்தது. அநிருத்தனுக்காக அல்ல அந்தத் துன்பம்; அது அவனுடைய சொந்தத் துன்பம். பிரீதா தன்னையே காதலித்தால் எவ்வளவு நல்லது; பொறுப்பற்ற இந்த அநிருத்தன் இவ்வுலகில் பிறக்காமலே இருந்திருந்தால் எவ்வளவு நல்லது என்று அவனுக்குத் தோன்றிற்று.

அதற்குள் பிரீதா அவனை உறுத்துப் பார்த்து, "நீங்கள் நல்லவர்கள் என்றால் ஒரே ஒரு காரியந்தான் செய்ய முடியும்" என்றாள்.

"என்ன?" என்று சுமித்திரன் சோர்வோடு கேட்டான். அவனுடைய உல்லாசம் இப்பொழுது இருந்த இடம் தெரியவில்லை.

"நீங்கள் என்னை மணந்து கொள்ள வேண்டும். நான் மணமாகாத பெண். வீட்டை விட்டு உங்களோடு வந்திருக்கிறேன். நான் அநிருத்தனுக்காக வந்தேன் என்று சொன்னால் உலகம் அதை நம்புமா?"

"அதெப்படி என்னால் முடியும்? என் தகப்பனார் இருக்கிறாரே..."

"எனக்குந்தான் தகப்பனர் இருக்கிறார். 'தாய் தந்தையரை நான் மதிப்பதில்லை; அதெல்லாம் பழங் காலக் கொள்கை' என்று நீங்கள் சொன்னீர்களே!"

"அப்படியா! என் தகப்பனரை நீ பார்த்ததில்லை. அவர் மிகவும் கண்டிப்பானவர். அவர்.."

"நீங்கள் என்னை மணந்து கொள்ளா விட்டால் அடுத்த போலீஸ் ஸ்டேஷனில் உங்களை ஒப்படைத்துவிடுவேன். நீங்கள் என்னை வலுவில் அழைத்து வந்ததாக அங்கே கூறுவேன். நாளைப் பத்திரிகையில் இதைப் பார்த்தால் உங்கள் தகப்பனர் என்ன சொல்வார்?"

சுமித்திரன் தன்னை அறியாமல் அஜாக்கிரதையாக விஷப்பாம்பின் வாலைப் பிடித்துவிட்டானு என்ன? வியப்பினலும் அதிர்ச்சியினலும் அவனல் பேசவே முடியவில்லை. பிறகு அவன் மென்று விழுங்கிக் கொண்டே, "பாவம், அநிருத்தன் செத்தே போய்விடுவான். நான் உன்னை மணந்ததை அறிந்ததும் அவன் தற்கொலை செய்துகொள்வான். நிரபராதியான ஒருவனைக் கொன்ற பாவம் உன்னைச் சாரும். உன் வாழ்க்கையில் ஒரு நாளும் அமைதியே இராது. செத்துப் போன அநிருத்தனுடைய முகம் உன்னைச் சுற்றியே வட்டமிடும்!" என்றான். அவன் குரல் உருக்கமாக இருந்தது.

"இன்று மாலையில் அவனுக்கு நல்ல அடி விழுந்திருக்கும்! அந்த ஸயனேட் டப்பியை வைத்துக் கொண்டு அவன் சுமார் ஒரு டஜன் பெண்களைப் பயமுறுத்தியிருக்கிறான். எவளும் அவனை மணந்து கொள்ளவில்லை. அவன் இன்னமும் உயிரோடு இருக்கிறான். அந்த டப்பி என்ன என்பதை நீங்கள் நேரில் பார்த்தீர்களா?"

அவள் தன் மணிபர்ஸிலிருந்து ஈய டப்பியை எடுத்து, "இதைத் தானே அவன் கையில் பார்த்தீர்கள்? இது காலியான ஊசிப் பெட்டி!" என்று சொல்லி, அதை வண்டிக்கு வெளியே எறிந்தாள்.

"அப்படியானல் இன்று என் என்னோடு வந்தாய்? என்னை மணந்தால் நீ மிகவும் ஏழையாகத் தான் இருப்பாய்" என்றான் சுமித்திரன். பிரீதாவைப் போன்ற ஆபத்தான மனைவியை மணந்து அவன் என்ன செய்வது?

"அநிருத்தனை மணந்தாலும் நான் ஏழையாகத்தானே இருக்க வேண்டும்?"

"உன் தகப்பனர் என்ன சொல்லுவாரோ?'

"காதலுக்காகத் தியாகம் செய்வதால் கடைசியில் இன்பமே கிடைக்கும்!"

இதைச் சொல்லியதும் பிரீதா கிண்டலாக அவனைப் பார்த்து நகைத்தாள்.

"பிரீதா, என்னை நீ பைத்தியமாக்கிவிட்டாயே?" என்று கூறி அவன் அவளை அணைத்துக்கொண்டான்.

அந்த நள்ளிரவிலே அவளுடைய நறுமணக் கூந்தலில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு, அவன் தன் தந்தையின் கண்டிப்பான முகத்தை அகமனத்திலிருந்து விரட்டிவிட்டான். ஆயினும் அந்த முகம் அந்தக் காரிருளிலும் பிரீதாவுக்கும் காதலுக்குமிடையே எட்டிப் பார்த்தது.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'பிலிமிண்டியா' அக்டோபர் இதழில் வெளியானவை.

கேள்வி: கல்யாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயமாகின்றன என்று ஆஸ்திகர்கள் நம்புகிறார்களே!

பதில்: அது சரிதான்; ஆனால் வாழ்க்கை என்னவோ நரகத்தில் தான்.

*   *   *

கே: உயிரோடிருக்கும் தலைவருக்குச் சிலை எழுப்பினால், அந்தச் சிலை எதைக் குறிக்கும்?

ப: அவர் செத்துப் போகும்போது அதிகக் கூட்டம் வராது என்பதை.

*   *   *

கே: அயல் நாட்டு உதவியினால் இந்தியா வளவாழ்வு பெறுமா?

ப: அபாயமான சமயத்தில் மற்றவர் ரத்தத்தை ஏற்றுவது நல்லதுதான்; ஆனால் நெடு நாள் வாழ வேண்டுமானால் சொந்த ரத்தம் விருத்தியாக வேண்டும்.

*   *   *

கே: கடவுளை நினைக்கத் தூண்டுபவை எவை?

ப: துன்பமும் கடனும். கடன் நவீன காலத்துச் சிருஷ்டி.

*   *   *

கே: இமாலயம் திடீரென்று மறைந்து போனால்?

ப: முன்பே மறைந்து விட்டதே! அதன் பழைய புகழ்தான் நம்மைக் காப்பாற்றி வருவது.

*   *   *

கே: நாட்டுக்காக உங்கள் உயிரைத் தியாகம் செய்வீர்களா?

ப: மாட்டேன். நான் நாட்டுக்காக வாழ்ந்து உழைப்பேன். பல பேர்வழிகள் தேசியப் பாட்டுக்களில் தங்கள் பெயர் வர வேண்டுமென்று நாட்டுக்காக உயிரை விடுகிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் தியாகமெல்லாமே நாட்டுக்கு முன்னேற்றத்தை உண்டாக்கவில்லை. ஒருவன் தன் நாட்டுக்காகச் சாவதைவிட வாழ்வது தான் கஷ்டமானது.

*   *   *

கே: எப்போது உங்களுக்குக் கனவு பிடிக்கிறது?

ப: எப்போதுமே பிடிக்காது. கனவெல்லாம் பொய். விழித்துக் கொண்டிருக்கும்போதே பல பொய்களைப் பார்க்கும்போது தூங்கும் போது பார்ப்பானேன்?

*   *   *

கே: இந்தியாவில் இப்போதும் பணம் பெருத்த மகாராஜாக்களும் மகாராணிகளும் இருக்கிறார்களா?

ப: ஞாபகக் குறியாகச் சில பேர்வழிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் படாடோபமும் பதவியும் இழந்து நிற்கிறார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கடைசி அநாதைக் குழந்தைகள் அவர்கள்.

*   *   *

கே: சிரமப்பட்டு உழைத்தால் அதிருஷ்டம் வருமா?

ப: உழைப்பு என்பது கடமை; அதிருஷ்டமோ அருள்.

புத்தகப் பகுதி

காரும் தேரும்

கி. வா. ஜகந்நாதன்

சங்க நூல்களில் **பழந்** தமிழர் வாழ்வு பற்றிய அரிய சித்திரங்கள் **அமைந்திருக்கின்றன.** தமிழிலக்கியப் புலமை இல்லாதவர்களுக்கு அவைகள் **புரிவது** கடினம். அந்தச் சங்க நூற் காட்சிகளைச் சிறிதே தமிழறிவு படைத்தவருங்கூடப் **புரிந்துகொள்ளும்படி** முறையாகச் சில நூல்கள் எழுதி வரும் ஆசிரியர், **'இன்ப மலை'** என்ற பெயருடன் அகநானூற்றுப் பாடல்கள் ஐந்தை **விளக்கும் ஐந்து** கட்டுரைகளடங்கிய புதிய நூல் ஒன்றை எழுதி இப்போது வெளியிட்டார். அதில் உள்ள ஒரு கட்டுரை இது.

காப்பிரைட்: இன்பமலை (தமிழ்ப் புத்தகம்). விலை ரூ. 3-0-0, வெளியிட்டோர்;
அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை-18.

காரும் தேரும்

★

கார்காலம் வந்தது.

வருவார்வருவார் என்று தம்மைப் பிரிந்து சென்ற காதலரை நினைந்து தம் இல்லிலே இருந்து கடமை யாற்றும் காதலிமாரின் அகத்திலே உவகையும் முகத்திலே முறுவலும் தழைக்கக் கார்காலம் வந்தது.

காதலர் தம் காதலியரைப் பிரிந்து செல்லுவதற்குக் காரண மான செயல்களை நிறைவேற்றி விட்டுத் தம் காதலியரைக் காணும் அவாவோடு மீள்வதற்கு உரிய காலம் அது.

வெம்மை நிறைந்த காலத்தில் வெம்மையான நிலத்தைக் கடந்து வெம்மையான வறுமையையும் பகையையும் போக்க எண்ணித் தலைவியருடைய உள்ளம் வெதும் பத் தம் உள்ளமும் வெம்மைபெறப் பிரிந்து சென்றவர்கள், மழையால் நிலம் குளிர்ந்து வளம்பெறக் காடு கவின் பெறத் தம் முயற்சி நிறைவு பெற வீடு நலம்பெற மீண்டு வரும் காலம் அது.

கார்காலம் எங்கும் அழகைச் செய்திருக்கிறது. காடு முழுவதும் கண் கொள்ளாக் காட்சி. ஆவி, இடி, மின்னல் ஆகியவையெல்லாம் சேர்ந்து தொகுதியாகவுள்ள மேகங்கள் நன்றாக மழை பெய் தன. வேகமாகத் தாரைகளைப் பொழிந்தன. அதனால் நாடெங் கும் இருந்த வெப்பம் தீர்ந்தது. நீரில்லாமல் தவித்த இடங்களெல் லாம் இப்போது பொலிவு பெற் றன. அந்தப் புலம்பு (வருத்தம்) முதுகுகாட்டி ஓடியே போய்விட் டது. அது புறங் கொடுத்துப் போய்விட்ட தென்றால் ஞாலம் முழுவதும் மலர்ச்சி அடையத் தடை என்ன? மலர்ந்த ஞாலத்தில் புலம்பானது புறங்கொடுப்பக் கருவி வானம் (தொகுதியாகிய மேகம்) கதழ்கின்ற (விரைகின்ற) பெரிய உறைகளை (துளிகளை)ச் சிதறக் கார் காலமானது கவின் பெற்ற கானத்தை உண்டாக்கி யிருக்கிறது.

கானத்தின் கவினைச் சிறிது பார்க்கலாமா?

அதோ முல்லைக் கொடி. கான மும் அதைச் சார்ந்த நிலமும் முல்லைத் திணையின்பாற் படும். அந்தத் திணைக்குப் பெயர் வந்ததே முல்லையினால்தான். அந்த முல்லை நன்றாக வளம் பெற்றால்தானே முல்லை நிலம் தன் பெயரைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்? முல்லை நிலத்துக்கு வாய்ப்பான பருவம் கார்காலம். அந்தக் காலத் தில் அந்த நிலம் தன் முழு அழ கோடு பொலிந்து விளங்கும்.

இப்போது கவின் பெற்ற கானத்தில் முல்லை அரும்பு விட் டிருக்கிறது. கொடி முழுவதும் முல்லை அரும்பு கூர்கூராகத் தலை நீட்டிக்கொண்டிருக்கிறது. அதன் கூரிய நுனி விளக்கமாகத் தோன்றுகிறது. இனி மலர்ந்து காடு முழுவதும் முல்லை மணம் கமழப் போகிறது.

கார் காலத்திலே மலரும் வேறு மரங்களும் இங்கே இருக்கின்

றன. தேற்று மரத்தின் மலர்களும் மலர்கின்றன. மெல்லிய அரும்புகள் அவிழ்ந்து மலர்ந்து மணக்கின்றன. தேற்றுவுக்கு இல்லம் என்று ஒரு பெயர் உண்டு. பச்சைக் காம்பை உடைய கொன்றை மலர்களும் மேன்பிணி (மெல்லிய அரும்புக் கட்டு) அவிழ்கின்றன. மணமும் நிறமும் வளமும் மென்மையும் உடைய மலர் செறிந்த காட்டுக்கு இப்போது உண்டான அழகே தனிச்சிறப்புடையது. முல்லையும் தேற்றுமரமும் கொன்றையும் முன்பே இங்கே வளர்ந்திருந்தாலும், இப்போதுதான் அவை அழகாகப் பூத்துக் குலுங்குகின்றன. செறிந்த தழையும் மலர்ந்த மலரும் நிரம்புவதற்குக் காரணம் கார்காலந்தான். ஆகவே, இந்த அழகை அந்தக் கார்காலந்தான் உண்டாக்கியது என்று சொல்வது பிழையாகுமா?

காட்டிலே வாழும் விலங்குகள் பல. முல்லை நில வாசிகளாகிய விலங்குகளில் மான்களும் சேரும். கார்காலம் வந்துவிட்டால் வீட்டிலுள்ள மானனைய மகளிருக்கு மகிழ்ச்சி உண்டாகிறதோ இல்லையோ, காட்டிலுள்ள மான்களுக்கு உண்டாகும் களிப்புக்கு எல்லையே இல்லை. மழை பெய்தமையால் நிலப்பரப்பு முழுவதும் புல் நன்றாக முளைத்து வளரும். சலசல வென்று நீர் ஓடும். நல்ல பசிய புல்லை உண்டு தெள்ளிய நீரைப் பருகுவதுதான் மான்களுக்கு விருந்துண்ட மகிழ்ச்சியைத் தரும். மற்றப் பருவங்களில் ஏதோ கிடைத்ததை உண்டு வாழ்ந்தன. கார்காலத்திலோ பச்சைப் பசேலென்று வளர்ந்த அறுகம் புல்லைக் கறித்து உண்பதும், ஓடும் தண்ணீரைப் பருகுவதும், ஆண் மானும் பெண் மானும் கூடி விளையாடுவதுமாக அவற்றின் வாழ்க்கையிலே திருவிழாக் காலம் வந்ததுபோல இருக்கும்.

தண்ணீர் அரித்துக் கொண்டு ஓடுவதனால் அங்கங்கே பள்ளங்களில் பருக்கைக் கற்கள் இருக்கும். அந்தப் பரல்களையுடைய பள்ளத்திலெல்லாம் மான்கள் துள்ளி ஓடும். கவலையின்றிப் புல்லும் நீரும் உண்ணக் கிடைத்துவிட்டால் அந்தப் பேதை மான்களுக்கு வேறு என்ன வேண்டும்? ஆடை வேண்டுமா? அணி வேண்டுமா? வீடு வேண்டுமா? வித்தை வேண்டுமா? எளிதிலே மனம் நிறைவு பெறும் குழந்தைகளைப் போல அவை களித்துக் கலந்து குலாவிக் குதித்து ஓடுகின்றன.

அவற்றின் உடம்புகள் மென்மையாகப் பட்டுப்போல் இருக்கின்றன. ஆனல் அந்த மென்மையான விலங்குகளுக்கு இறைவன் மிகவும் வன்மையான பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறான்; ஆண் மான்களுக்குப் பெரிய கொம்புகளைக் கொடுத்திருக்கிறான். அவை மிகவும் வலிமையுடையவை. அவற்றின் பலத்துக்கு இரும்பை உவமையாகச் சொல்லலாம். அது மாத்திரம் அல்ல. இரும்புக் கம்பியை முறுக்கினல் எப்படி இருக்குமோ, அப்படி அந்தக் கொம்புகள் தோன்றுகின்றன. தோற்றத்தாலும் வன்மையினாலும் இரும்பு போல உள்ள பெரிய கரிய மருப்புக்களை உடைய இரலைகள் கார்காலத்தில் கானத்தில் பரலையுடைய பள்ளங்களிலெல்லாம் துள்ளி விளையாடுகின்றன.

கார்காலம் மலர்க் கொடிக்கும் மரத்துக்கும் ஊட்டந் தந்து,

மானினத்துக்கும் உவகையைத் தந்திருக்கிறது. மழையைப் பொழிந்து அதனாலே காட்டில் அழகைப் பொழிந்திருக்கிறது.

முல்லை வைந்நுனை தோன்ற,
இல்லமொடு
பைங்காற் கொன்றை
மென்பிணி அவிழ,
இரும்பு திரித்தன்ன
மாயிரு மருப்பின்-
பரல் அவல் அடைய -
இரலை தெறிப்ப,
மலர்ந்த ஞாலம்
புலம்புபுறம் கொடுப்ப
கருவி வானம்
கதழ்உறை சிதறிக்
கார்செய் தன்றே
கவின்பெறு கானம்.

இந்தக் கார்காலத்தை எதிர் நோக்கியிருந்தாள் ஒரு காதலி. இல்வாழ்விற்கு வேண்டிய பொருளை ஈட்டும் பொருட்டு அவளுடைய காதலன் வேறு ஊருக்குச் சென்றான். "கார் காலத்தில் வந்துவிடுவேன்" என்று உறுதிமொழி கூறி அகன்றான். காதலி இல்லற வாழ்வில் செய்தற் குரிய கடமைகளை நன்கு நிறை வேற்றுகிறவள். அறத்திற்கும் இன்பத்திற்கும் பொருள் எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணர்ந்தவள். தன் காதலனைச் சில காலம் பிரிந்திருக்க நேர்ந் தாலும், அந்தப் பிரிவு பின்னால் மிகுதியான பயனைத் தருவதற்கு ஏதுவாக இருப்பதைத் தெளிந்து, அவன் செல்வதைத் தடுக்கவில்லை. தனக்கும் பிரிவினால் துன்பம் உண்டானாலும் அறத்தைக் கருதிப் பொறுத்திருக்க வேண்டும் என்று எண்ணினாள்.

அவன் பிரிந்து சென்ற பிறகு தான் பிரிவின் துன்பம் அவளுக்கு அநுபவத்தில் தெரியவந்தது. ஆயி னும் கடமையை உணர்ந்து அதை வெளிப்படுத்தாமல் பொறுத்து ஆற்றிக்கொண் டிருந்தாள். கற் புடைய மகளிர் இவ்வாறு தம் கண வர் பிரிந்த காலத்தில் கடமை யுணர்ச்சியோடு வீட்டிலே இருந்து வாழ்வதே முல்லை நிலத்துக் குரிய நிகழ்ச்சி. அதை முல்லைத் திணையின் உரிப்பொருள் என்று புலவர்கள் சொல்வார்கள்.

இங்கே காதலி தன் துயரை வெளிக்காட்டாமல் இருந்தாலும் அவளுடன் நெருங்கிப் பழகும் ஆருயிர்த் தோழிக்கு உண்மை தெரியும். தலைவன் தான் கூறிய உறுதி மொழிப்படியே கார்காலத் தில் வந்துவிடுவான் என்ற நம் பிக்கை இருந்தது. ஆகவே, கார் காலத்தை அவர்கள் எதிர்நோக்கி யிருந்தார்கள்.

கார்காலம் வந்துவிட்டது. முன்னே சொன்னபடி கவின் பெற்ற கானத்தை உண்டாக்கும் கார்ப்பருவம் வானம் மழை பொழி யவும், ஞாலம் வெப்பத்துக்கு விடை கொடுக்கவும் வந்துவிட்டது. அதைக் கண்டாள் தோழி. அவர் கள் வாழும் ஊர் முல்லை நிலத்து ஊர். ஆகவே, கவின் இழந்து வாடிய கானம் இப்போது கவின் பெற்றதைக் கண்ட தோழிக்கு, "இனித் தலைவர் வந்துவிடுவார்" என்ற மகிழ்ச்சி உண்டாயிற்று.

அதோடு தலைவன் வந்துகொண் டிருக்கிறான் என்ற செய்தியும் அவளுக்குக் கிடைத்தது. இனி அவள் சும்மா இருப்பாளா? தன் தலைவியிடம் ஓடினாள்.

"அவர் வந்துவிட்டார்" என்று குதித்துக்கொண்டே சொன்னாள்.

"எங்கே வந்துவிட்டார்?" என்று கேட்டாள் தலைவி.

"இதோ வந்துகொண்டே இருக்கிறார்" என்று தோழி கூறினாள்.

"எப்படி உனக்குத் தெரியும்?"

"கார்காலம் வந்துவிட்டது."

"அதை யார் சொன்னார்கள்?"

"இதோ கவின் பெற்ற கானம் சொல்கிறதே!"

"அவர் வருகிறார் என்றால் தேரில் அல்லவா வரவேண்டும்?"

"ஆம், தேரில்தான் வருகிறார். இல்லை யென்று யார் சொன்னார்கள்?"

"தேரில் வந்தால் அதன் மணியோசை நெடுந்தூரம் கேட்குமே! அதுவும் அவர் தேரின் மணி ஒலி எனக்கு நன்றாகத் தெரியுமே; ஒன்றும் கேட்கவில்லையே!"

"மணியின் ஓசை கேட்காதபடி அவர் செய்துவிட்டார்."

* * *

இவர்கள் பேசிக்கொண்டிருக்கட்டும்; நாம் தலைவனிடம் போவோம்.

பொருள் ஈட்டும் பொருட்டுச் சென்ற அவன், குறித்த காலத்துக்குள் போதிய பொருளை ஈட்டினான். பொருளை மாத்திரம் எண்ணியவனாக இருந்தால் அவன் மேலும் மேலும் பொருளைத் தேடிக்கொண்டே இருப்பான். பொருளாசைக்குத்தான் எல்லை என்பது இல்லையே! அவனோ அறத்தையும் இன்பத்தையும் மறவாதவன். பொருளைக் கருவியாகக் கொண்டு அறம் செய்யவும் இன்பம் நுகரவும் எண்ணியவன். ஆகவே, அவனுக்கு ஓரளவு பொருள் கிடைத்தவுடன் போதும் என்ற மனநிறைவு உண்டாயிற்று. தன் பிரிவால் தன் காதலி துன்புறுவாளாதலின், அந்தப் பிரிவை எத்தனைக்கு எத்தனை குறுக்கிக்கொள்ளலாமோ அத்தனைக்கு அத்தனை நல்லது என்பதை அவன் உணர்ந்தவன். ஆகவே, பொருள் போதிய அளவு கிடைத்தவுடன் தன் ஊருக்கு மீள எண்ணினான்.

அவனுடைய உள்ளத்தில் அவன் காதலி எப்போதும் இடம் கொண்டிருந்தாள். அவளுடைய அழகையெல்லாம் ஓய்வு நேரங்களில் எண்ணி எண்ணி இன்புறுவான்.

அவள் தன் கையிலே அழகான வளைகளை அணிந்திருந்தாள். வளைச்செட்டி வந்தால் எதையோ எடுத்தோம், போட்டுக்கொண்டோம் என்று இருக்கமாட்டாள். நன்றாக ஆராய்ந்து பொறுக்கி எடுத்து அணிந்துகொள்வாள். அவள் உடம்பு முழுவதும் இயற்கையாகவே கம்மென்று ஒருவகை நறுமணம் கமழும். அதற்கு உவமையாக எதைச் சொல்வது? உவமை இல்லாதது அந்த நறுமணம். ஆனாலும் எதையாவது உவமை சொல்லிப் பார்க்கலாமே என்ற விருப்பம் உண்டாயிற்று.

ஒரு நாள் அவன் உறையூருக்குப் போயிருந்தான். தன் காதலியையும் அழைத்துக்கொண்டு சென்றிருந்தான். அங்கே பங்குனி உத்தரத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். சோழனுடைய தலைநகரமாதலின் விழாவின் சிறப்புக்குச் சொல்லவேண்டுமா? பல ஊர்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே அந்த விழாவைப் பார்க்க வருவார்கள். முரசு முழக்கமும், இன்னிசைக் கருவிகளின் ஒலியும், மக்களுடைய ஆரவாரமும் எங்கும் நிறைந்திருக்கும்.

அந்த விழாவுக்குச் சென்ற தலைவன் சுற்றுப்புறத்தில் உள்ள

இடங்களையும் போய்ப் பார்த்து இன்புற்றான். உறந்தைக்குக் கிழக்கே உயர்ந்த பெரிய குன்றம் இருக்கிறது. இப்போது திருச்சிராப்பள்ளிக் குன்றமென்று வழங்குவதுதான் அது. அந்தக் காலத்தில் அந்தக் குன்றத்தில் இயற்கை வளம் நன்றாக அமைந்திருந்தது. அந்தக் குன்றத்துக்குச் சென்று அதன் அழகைப் பார்த்தான். அவனுடைய காதலியும் உடன் வந்திருந்தாள். அங்கே எங்கே பார்த்தாலும் காந்தள் மலர் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தது. மலைப்பாங்கில் வளர்வது அது. அதைப் பார்த்தான். சில மலர்களைப் பறித்துக் கையில் வைத்து மோந்து பார்த்தான். அப்போதுதான் தன் காதலியின் திருமேனிக்கு அதை ஒருவாறு உவமையாகச் சொல்லலாம் என்று அறிந்துகொண்டான்.

அவளிடமே அதைச் சொன்னான்; அவள் நாணமுற்றுத் தலை கவிழ்ந்தாள். அன்று முதல் அவன் அந்தக் கறங்குகின்ற (ஒலிக்கின்ற) இசை நிரம்பிய விழாவையுடைய உறந்தையை மறக்கவில்லை; அதற்குத் துணை (கிழக்குத்) திசையில் உள்ள நெடும்பெருங் குன்றத்தையும், அதில் அடர்ந்து பூத்திருந்த காந்தளின் போது அவிழ்ந்த அலரையும் மறக்கவில்லை; அந்த மலரின் மணத்தை வீசும் ஆய் தொடியை யுடைய அரிவையாகிய தன் காதலியின் அழகையும் பணிவையும் நினைந்து நினைந்து இன்புறலானான்.

தலைவியைப் புகழும்போது அவள் மேனியின் நறுமணத்துக்குக் காந்தளை உவமை கூறுவான். இதை எப்படியோ தலைவியின் தோழிகூட ஒரு நாள் கேட்டுவிட்டாள். "என்ன இப்படி, பக்கத்தில் மனிதர்கள் இருப்பதையே தெரிந்துகொள்ளாமல் நீங்கள் உங்கள் வருணனையை விரிக்கிறீர்களே!" என்று காதலி அவனை அப்போது பொய்க் கோபத்தோடு கடிந்துகொண்டாள்.

இப்போது அந்த நிகழ்ச்சிகளெல்லாம் தலைவனுடைய நினைவுக்கு வந்தன. தன் காதலியின் மாட்சிமைப்பட்ட அழகை நேரிலே சென்று நுகராமல் இனி ஒரு கணமும் இருக்கக் கூடாது என்று நிச்சயித்துக்கொண்டான்.

அவன் ஒரு தேர் வைத்திருந்தான்; அதை ஓட்டும் வலவனும் இருந்தான். அந்தச் சாரதி அவனுக்கு ஏவலாளன்; தோழன்; துணைவன். அவன் அழகான குதிரைகளை நன்றாகப் பாதுகாத்து வைத்திருந்தான். குதிரைகளின் பிடரி மயிரையெல்லாம் ஒழுங்காகக் கத்தரித்து மட்டஞ் செய்தான். வர்ணமயிர் அமைந்த கவரியை அவற்றின் தலையில் அணிந்தான். அதற்குத் தலையாட்டமென்றும் உளையென்றும் பெயர். அதை வைத்துவிட்டால் குதிரை போகும்பொழுது அழகாகத் தோன்றும். வாரெல்லாம் புதிதாகப் போட்டிருந்தான். அதன் நிறம் நரம்பைப் பார்த்தாற்போல இருந்தது.

"இன்று ஊருக்குப் புறப்பட வேண்டும். தேரை அலங்கரித்து ஆயத்தம் பண்ணுக" என்று தலைவன் வலவனை ஏவினான். அவன் மிக விரைவில் ஆவனவற்றைச் செய்துவிட்டான்.

"எத்தனை வேகமாகப் போக வேண்டும்?" என்று கேட்டான் சாரதி.

"குதிரை போகிற வேகத்தில் போகட்டும். தன்புறுத்த வேண்டாம். கடிவாளவாரை இறுக்கிப் பிடிக்காதே. தளர விடு. யாழ் நரம்பைப்போல மெல்லப் பிடித்துவிடு" என்றான் தலைவன்.

குதிரைகள் தாமே வேகமாகப் போகும். ஆனாலும் தேர்வலவன் தன் தலைவன் பேச்சைக் கேட்டு வியந்தான். தன் காதலியைப் பார்க்கப் போகும் ஆர்வத்தில், "உன்னால் எவ்வளவு வேகத்தில் ஓட்ட முடியுமோ, அவ்வளவு வேகமாக ஓட்டு" என்று தலைவன் சொல்வான் என்று எதிர்பார்த்தான். தலைவன் உயிர்களிடத்தில் அன்புடையவன். அந்த இயல்பு என்றும் மாறுவதில்லை. காதலியைக் காணப்போகும் இந்த அவசரத்திலும் அவன் குதிரைகளைத் தன்புறுத்த விரும்பவில்லை.

"குதிரைகளின் கடிவாள வாரைத் தளரப் பிடி" என்று சொன்னதைக் கேட்டு வியந்த வலவனுக்கு, அடுத்தபடி இன்னும் பெருவியப்பை அளிக்கத் தக்க ஒரு செய்தியைத் தலைவன் சொன்னான்.

"தேரின் மணிகள் நாம் போகும்போது ஒலிக்கக் கூடாது" என்றான் தலைவன்.

"ஏன்? தேரின் வருகையை வழிப்போவாருக்குத் தெரிவிக்கத்தானே மணிகள் கட்டியிருக்கின்றன?"

"அது உண்மைதான். ஆனால் மக்கள் நிரம்பிய நகரத்தில்தான் மணி வேண்டும். இப்போது நாம் காட்டு வழியாகப் போகப் போகிறோம். அங்கே மணியின் ஒலி வேண்டியதில்லை. ஆகையால் மணிகளின் நாக்கைக் கட்டிவிடு."

இதைக் கேட்ட வலவனுக்குத் தலைவன் கருத்து விளங்கவில்லை, நகரத்தில் மணிகள் அவசியம் என்பது விளங்கியது. காட்டில் வேண்டாம் என்பதற்குக் காரணம் என்ன? காட்டில் ஒலித்தால் என்ன குறைந்து விடும்? அவன் தன் ஐயத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்பினான்.

"காட்டில் மணிகள் ஒலித்தால் என்ன?" என்று தலைவனைக் கேட்டான்.

"இப்போது எங்கே பார்த்தாலும் மழை பெய்திருக்கிறது. கானத்தில் இந்த மழையினால் எங்கும் மரங்கள் பூத்துப் பொலியும். காட்டு வழியின் இருமருங்கும் பூத்த மரங்கள் நிற்பதை நாம் பார்த்து மகிழலாம். மலர்ந்த மலர்களில் தாதை ஊதித் தேனுண்ணும் வண்டுகள் இருக்கும். நம்மைப்போல வேண்டிய பொருளை ஈட்டுவதற்குப் பிரிந்து செல்லும் நிலை அவற்றுக்கு இல்லை. ஆண் வண்டும் பெண் வண்டும் சேர்ந்து சேர்ந்து இரட்டையாகத் தாதையும் தேனையும் உண்டு அந்த மலராகிய மெத்தென்ற படுக்கையிலே நெடுநேரம் தங்கியிருக்கும். என்ன, நான் சொல்லுகிறது தெரிகிறதா?" என்று தலைவன் சொல்லிச் சிறிது நிறுத்தினான்.

தலைவனுடைய உள்ளம் தன் துணைவியோடு ஒன்றுபடும் வேட்கையுடையதாக இருப்பதை அந்தப் பேச்சினூடே வலவன் உணர்ந்து புன்னகை பூத்தான். "ஆம், தெரிகிறது. ஆனால்—" என்று முடிப்பதற்குள் தலைவனே பேசலானான்.

"அச்சமின்றிச் சுதந்தரமாக இன்ப வாழ்வு நடத்தும் வண்டுகளின் அமைதி நமக்கு இருக்கிறதா? இல்லையே! பொருளுக்காக அன்புடையவர்களைப் பிரிந்து,

ஊர் கடந்து நாடு கடந்து வர வேண்டியிருக்கிறது. பிரிவின் வருத்தத்தை நன்கு உணர்ந்த நாம், அமைதியாக இருக்கும் வண்டினங்களின் இன்ப வாழ்க்கைக்கு உதவி ஏதும் செய்ய இயலாவிட்டாலும் கெடுதலாவது செய்யாமல் இருக்கலாமல்லவா? மணியோசையைக் கேட்டுப் பயந்து அவை மலரை விட்டுத் துணையை விட்டுச் சிதறுண்டு போகாமல் இருப்பதற்காகத்தான் மணிகளின் நாவைக் கட்டச் சொன்னேன்.''

தலைவனுக்குள்ள ஜீவகாருண்யத்தின் சிறப்பை வலவன் தெரிந்துகொண்டு வியப்பே மயமானான். ஆனால் மறுபடியும் அவனுக்கு ஓர் ஐயம் தோன்றிற்று.

''நீங்கள் நினைப்பது சரிதான். வண்டினங்களின் இன்ப வாழ்வைக் குலைப்பது தவறு; பாவம். ஆனால் நம்முடைய தேரின் ஓசையும் குதிரைகள் ஓடும் ஓசையும் வண்டுகளைப் பேதுறச் செய்யாவா?'' என்று வலவன் கேட்டான்.

''நல்ல கேள்வி! நான் அதை நினைக்காமலா இருப்பேன்? காடு என்பது ஓசை ஒலிகளே இல்லாத தனி மோன ராஜ்யம் அல்லவே? அங்கே மரங்கள் காற்றால் அசைகின்ற ஒலியும், விலங்கினங்களின் முழக்கமும், பறவைகளின் ஓசையும், மான் முதலியவை ஓடும் சத்தமும் இருக்கின்றன. அந்த ஒலிகளினிடையேதான் வண்டுகள் தேனை நுகர்ந்து இன்புறுகின்றன. அவை காட்டு ராஜ்யத்துக்குரிய ஓசைகள்; வண்டுகளுக்குப் பழக்கமான ஓசைகள். அவற்றைக் கேட்டு அவை அஞ்சுவதில்லை. தேர் ஓடும் ஒலியும் குதிரையின் குளம்பொலியும் அந்த ஓசைகளைப் போலவே இருக்கும். ஆகையால் அவற்றைக் கேட்டும் வண்டுகள் அஞ்சா. ஓசையே இல்லாமல் இருக்க வேண்டும் என்பது என் நோக்கம் அன்று. வண்டுகளின் காதில், கணீரென்ற புது வகையான ஓசை விழ வேண்டாம் என்ற எண்ணத்தால் தான் மணியின் ஓசையை விலக்க நினைத்தேன். அந்த ஓசைதான் நெடுந்தூரம் சென்று கிண்ணென இயம்பும். வண்டுகள் முன்பு கேளாத ஓசை அது. துணையோடு வதிந்த தாது உண் பறவைகளாகிய அவற்றைப் பேதுறச் செய்யும். நான் பிரிந்து சில காலம் இருந்தவன்; இப்போது என் காதலியோடு சேரப் போகிறேன். இந்த நிலையில் தம் துணைகளோடு ஒன்றியிருக்கும் வண்டுகளைப் பிரிக்கும் செயலைச் செய்யலாமா?''

வலவன் தலைவனுடைய பேரன்பையும் நுண்ணறிவையும் அறிந்து வாய் பேச இயலாமல் நின்றுவிட்டான். தலைவனுக்குத்தான் எத்தனை கூரிய அறிவு! இப்படியெல்லாம் நடக்கும், இதற்கு இப்படிப் பாதுகாப்புச் செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து செய்சிறானே! உயிர்களிடத்தில் அவனுக்கு உள்ள அன்புதான் எவ்வளவு சிறந்தது! குதிரையை வருத்தக் கூடாது என்கிறான். வண்டுகளின் இன்பத்துக்கு இடையூறு செய்யக் கூடாது என்கிறான். அவனுடைய அருள் தன்மையை வலவன் வியந்தான். பிற உயிர்களின் இன்பத்தை எண்ணி வாழும் மகனுக்கு, வேண்டிய இன்பம் எளிதிலே கிடைக்கும் என்ற உண்மை நிச்சயமாகத் தலைவன் திறத்தில் பலிக்கும் என்ற உறுதி கொண்

டான். உள்ளத்துக்குள் தலைவனை யும் தலைவியையும் வாழ்த்தினான்.

தேர் புறப்பட்டு விட்டது. வளைந்த உளையையும் (தலையாட்டம்), கத்திரிகையினாலே கொய்த பிடரி மயிரையும் உடைய புரவிகளின் வாயிலே பூட்டிய கடிவாள வாரைத் தளர விட்டுப் பிடித்தான் வலவன். மணிகளின் நாவைக் கட்டிவிட்டான்.

தேர் தலைவனுடைய ஊரை அணுகியது. அதைக் கண்டவர்கள் தலைவன் வரும் செய்தியைத் தோழிக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டே தோழி தலைவிக்குச் சொல்லலானாள்.

குதிரையின் வாரைப் பரிய (தளர) விட்டதையும் மணி நாவை ஆர்த்ததை (கட்டியதை)யும் தோழி சொன்னாள்.

"அழகான வேலைப்பாடுள்ள தேர் மீதில் அதோ வருகிறார் தலைவர்; இந்த முல்லைநிலத் தலைவராகிய துறும்பொறை நாடர் வருகிறார்; உன் ஆருயிர்க் காதலர் வருகிறார். இனி உன் பிரிவுத் துன்பம் ஒழியும். உன் மாட்சிமைப்பட்ட நலத்தை விரும்பி வந்துவிட்டார். அவர்தாம் முன்பெல்லாம் சொல்வாரே: சிராப்பள்ளிக் குன்றத்தில் வளர்ந்த காந்தளைப் போன்ற நறுமணம் உன் மேனியிலே வீசுகிறதென்று. அந்த நறுமணமும் பிற நலங்களும் அவர் உள்ளத்திலே என்றும் இருக்கின்றன அல்லவா? அதனால் சொன்னபடியே கானத்தைக் கவின்பெறச் செய்த இந்தக் கார்காலத்தில் வந்துவிட்டார்."

தோழி கூறி முடித்தாள்; வாயிலில் தேரும் வந்து நின்றது.

தோழி தலைவியினிடம் கார் காலம் வந்ததையும் தலைவன் வந்ததையும் சொல்வதாக அமைந்தது பின்வரும் பாட்டு:

முல்லை

முல்லை வைந்நுனை தோன்ற, இல்லமொடு
பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ,
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரல்அவல் அடைய இரலை தெறிப்ப,
மலர்ந்த ஞாலம் புலம்புபுறம் கொடுப்பக்
கருவி வானம் கதழ்உறை சிதறிக்
கார்செய் தன்றே, கவின்பெறு கானம்;
குரங்குஉளைப் பொலிந்த கொய்சுவல் புரவி
நரம்புஆர்த் தன்ன வாங்குவள் பரியப்,
பூத்த பொங்கர்த் துணையோடு வதிந்த
தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்,
உவக்காண் தோன்றும், குறும்பொறை நாடன்,

கறங்குஇசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தட்
போதுஅவிழ் அலரி நாறும்
ஆய்தொடி அரிவை! நின் மாண்நலம் படர்ந்தே.

முல்லை யரும்பின் கூர்மையான முனை தெளிவாகத் தெரியவும், தேற்றாவின் மொட்டோடு பசுமையான காம்பையுடைய கொன்றையின் மொட்டும் மலரவும், இரும்புக் கம்பியை முறுக்கினது போன்ற கரிய பெரிய கொம்புகளையுடைய ஆண் மான்கள் பருக்கைக் கற்களையுடைய பள்ளம் முழுவதும் துள்ளவும், விளக்கம் பெற்ற உலகத்தில் வெப்பமாகிய வருத்தம் ஓடவும், தொகுதியாகிய மேகங்கள் வேகமான துளிகளைச் சிதறும்படி செய்து கார்காலம் அழகு பெற்ற காட்டை உண்டாக்கியது; வளைந்த தலையாட்டத்தையும் கத்தரித்த பிடரி மயிரையும் உடைய குதிரைகளின், நரம்பைக் கட்டியது போன்ற தோற்றத்தையுடையதும், கையினாலே இழுப்பதுமாகிய வார் தளர, மலர்ந்த மரங்களில் பெடை வண்டுகளோடு தங்கிய தாதை உண்ணும் ஆண் வண்டுகள் கலங்குவதற்கு அஞ்சி, மணிகளின் நாக்கைக் கட்டியதும், மாட்சிமை பெற்ற சிற்பத் தொழிலையுடையதும் ஆகிய தேரை உடையவனாகி, சிறிய கரடுகளையுடைய முல்லைநிலத் தலைவனாகிய உன் காதலன், அங்கே தோன்றுகிறான்; நீ பார்ப்பாயாக; ஒலிக்கின்ற இசைகளை உடைய விழாவைப் பெற்ற உறையூர்க்குக் கிழக்கே உள்ளதாகிய உயர்ந்த பெரிய குன்றத்தில் நெருங்கி வளர்ந்த காந்தளினது பேரரும்பு மலர்ந்த மலரின் மணத்தை வீசும், ஆராய்ந்தெடுத்த வளையை அணிந்த பெண்ணே, நின் சிறப்பை உடைய அழகை நினைந்து விரும்பி.

விரும்பித் தோன்றுகிறான் என்றபடி. கானம் கார் செய்தன்று; குறும் பொறை நாடன், வள் பரிய, அஞ்சி ஆர்த்த தேரனாகி, நின் நலம் படர்ந்து தோன்றும் என்று கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்.

முல்லைத் திணைக் குரியதாகிய இப் பாட்டில் கானம் என்றதனால் நிலமும், கார் என்றதனால் காலமுமாகிய முதற்பொருள்கள் வந்தன. முல்லை, இல்லம், கொன்றை, இரலை, குறும்பொறை நாடன் என்ற கருப்பொருள்கள் வந்தன. தலைவி தன் மனையின்கண் இருக்கும்போது நிகழ்ந்தது இது. ஆதலின் இருத்தல் என்னும் உரிப்பொருளும் வந்தது.

இதன் துறை 'தோழி தலைமகளைப் பருவங் காட்டி வற்புறுத்தியது' என்பது. வற்புறுத்தியது - துணிவு பெறச் செய்தது.

இதைப் பாடியவர் குறுங்குடி மருதனார். இது அகநானூற்றில் 4 - ஆவது பாட்டு.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.